# அரங்கம்
செய்திகள்


YOUR DREAM HOME IS CLOSER THAN YOU THINK

HAPPY HOME Design and Building is the Best choice for your new home building

Call us Now
0764 927 923



Constructive Solution for any building projects

Budgeting Proposal Design & Planning Surveying & Logistics General Construction



வார இதழ்- மட்டுநகரிலிருந்து... www.arangamnews.com வெள்ளி, பங்குனி 09, 2018. இதழ் – 03




## இன உறவை அழித்த "தீ"

# வன்செயலில் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு கைகொடுப்போம்

கண்டியில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்செயல்கள் உலகெங்கும் இலங்கையின் பெயருக்கு மீண்டும் ஒரு களங்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

ஒரு சிறு விபத்தை அடுத்த மோதலில் ஒருவர் உயிரிழக்க, கண்டி மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான பெருத்த வன்செயல்கள் அரங்கேறியிருக்கின்றன.

ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட போதிலும் நிலைமை கட்டுக்குள் வராததால் அரசாங்கம் அவசர நிலையை பிரகடனம் செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

ஆண்டாண்டு காலமாக கடினமான உழைப்பின் மூலம் தாம் சேர்த்த உடமைகள் கண்முன்பாகவே எரித்து நாசம் செய்யப்பட்டதை முஸ்லிம் மக்கள் வேதனையுடன் பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பலர் தமது உயிரைப் பாதுகாக்க சொந்த வீடுகளை விட்டு வெளியேறி உறவினர்களின் வீடுகளின் தஞ்சமடைய நேர்ந்த நிலைமையும் ஏற்பட்டது.

1983 இலும் அதற்கு முன்னர் சில தடவைகளும் தமிழர்கள் இப்படியாக தாக்கப்பட்டார்கள். அதன் வடுக்கள் நாட்டை ஒரு உள்நாட்டுப் போருக்குள் தள்ளிவிட்டிருந்தன. இத்தனை வேதனையான அனுபவம் இருந்தும் மீண்டும் இன வன்செயல்கள் நடந்திருப்பது, பெருத்த அதிருப்தியை பலரது மத்தியிலும் ஏற்படுத்தியுள்ளது.



அரசியல்வாதிகள், கிரிக்கெட் நட்சத்திரங்கள், சர்வதேச நாடுகள் முதல் ஐநா மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவர் வரை இலங்கை நிகழ்வுகளை கண்டித்துள்ளார்கள்.

இப்போதுதான் ஒரு உள்நாட்டுப் போரின் தாக்கத்தில் இருந்து மீண்டு வரும் இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு, இந்த நிகழ்வுகள் சாதகமானவை அல்ல.

இலங்கையில் அண்மைய வரலாற்றில் முதல் வன்முறை ஆரம்பித்தது கண்டி மாநகரில்தான். அதுவும் முஸ்லிம்களுக்கு எதிராகத்தான். 1915 இல் அது நடந்தது. அதனையடுத்து நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் தமிழர்களுக்கு எதிராகவும் பல வன்செயல்கள் நடந்திருக்கின்றன.

இலங்கையில் நல்லிணக்கத்துக்கான நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்படாததும், இன ஐக்கியம் பேணப்படாததுமே இப்படியான வன்முறைகள் தொடர்வதற்கு காரணம் என்று ஐநா மனித உரிமைகள் ஆணையர் கூறியுள்ளார்.

உண்மையில் அனைத்து தரப்புமே இந்த விடயத்தில் பொறுப்புடன் செயற்பட்டிருக்க வேண்டும் என்பது அனைவரதும் கருத்தாக இருக்கின்றது.


தொடர்ச்சி... (பக்கம்- 07)


# அம்பாறைக் கரையோரம் இயல்புநிலைக்கு திரும்பியது!

## கல்முனை சிங்கள மகாவித்தியாலயம் இயங்கவில்லை!

கண்டியில் நடந்த வன்செயல்களையடுத்து கடந்த இருதினங்களாக அமைதியற்றிருந்த அம்பாறை கரையோரப் பிரதேசம் நேற்று(8) வழமைக்குத் திரும்பியது.

பாடசாலைகள் அரச அலுவலகங்கள் சந்தைகள் என்பன வழமைபோல இயங்கின.

முஸ்லிம் பகுதிகளில் ஹர்த்தால் என்று வதந்திகள் அடிப்பட்டபோதிலும் அனைத்து கடைகளும்

பாடசாலைகளும் அலுவலகங்களும் திறந்திருந்தன. இருந்தபோதிலும் மாணவர்களின் வரவு வெகுவாகக் குறைந்திருந்தது.



எனினும் பாலமுனை மருதமுனைப்பகுதிகளில் சிறியளவிலான வன்முறைகள் இடம்பெற்றன. அங்கு ஏலவே கைதுசெய்யப்பட்டிருந்த 31 இளைஞர்களும் விடுதலை செய்ய்ப்பப்படதையடுத்து நிலைமை சுமுகமானது.

கல்முனை நகரம் வழமைபோன்று இயல்பு நிலையிலுள்ளது.
கல்முனை நகரிலுள்ள உவெஸ்லி பற்றிமா போன்ற


தொடர்ச்சி... (பக்கம்- 02)



DIVA HOME DESIGNER AND BUILDER

DHB
DIVA HOME DESIGN AND BUILDER



WE WORK A TEAM

கட்டிடநிர்மான சேவைகள் ஒரே கூரையின் கீழ்
(All Services are under the one roof)

No. 242,Trinco Road, Batticaloa
divahb@gmail.com
www.divahomebuilder.com
065-2228822 0717772492

Our Services
- Architectural Drawings
- Cost Estimate
- Survey plan
- Construction

# தேர்தல் சட்ட மூலம் வழங்கும் பெண்களின் பிரதிநிதித்துவம்

## பெண்களுக்கு 25% வழங்க கட்சிகள் செய்யவேண்டியவை

~~
கலாபூசணம்
அரங்கம் இரா.தவராஜா.
~~

கடந்த 10-02-2018ல் நடை பெற்று முடிந்த உள்ளூராட்சி மட்/மாநகரசபைக்கான தேர்தலின் முடிவுகளை சென்ற அரங்கம் இதழில் வாசகர்களுக்கு தந்திருந்தோம். களத்தில் நின்று வெற்றி பெற்ற வேட்பாளர்களோடு தேர்தல் சட்டத்தின்படி மேலும் (16)பதினாறு வேட்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். இதில் மாநகரசபைக்கு தெரிவாகும். உறுப்பினர்களில் பெண்களுக்கென 25% வீதம் ஒதுக்கப்பட வேண்டும். ஆகவே (09)ஒன்பது பேர் நியமிக்கப்பட வேண்டும். இதில் எந்த பெண்மணியும் களத்தில் நேரடியாகநின்று வெற்றி பெறவில்லை அதனால் கிடைக்கப் பெற்ற வாக்குகளில் 40% வீத வாக்குகளின் படி இந்த 16 பேரில் ஒன்பது அங்கத்துவம் பெண்மணிகள் உள்வாங்கப்பட ஏதுவாக அமைகிறது.

அப்படி உள்வாங்கப்படும் பெண்மணிகளுக்கு நேரடியாக களத்தில் நின்று வாக்குகளைச் சேகரித்த பெண்களுக்கே முதலிடம் கொடுக்கப்பட வேண்டும். இதுவே நீதியான செயலாக கருதப்படும். அப்படி நாம் பார்க்கும் வேளையில் பின்வரும் அட்டவணைப்படி தெரிவு செய்யப்படுவதே தேர்தலில் நின்ற கட்சிகளுக்கும் அக்கட்சிகளில் நின்ற பெண்களுக்கும் வாக்கு பண்ணிய மக்களுக்கும் திருப்தியளிக்கக் கூடிய முடிவாகும். இதுவே வாக்களர்களின் அங்கலாய்ப்பாகவும் இருக்கிறது. சரி அட்டவணையை பார்ப்போம்.

| கட்சியின் பெயர் | வேட்பாளர்களின் பெயர் | வட்டாரம் | அளிக்கப்பட்ட வாக்குகள் | வேட்பாளர்களுக்கு கிடைத்த வாக்குகள் | விகிதா சாரம் | வரிசை |
|---|---|---|---|---|---|---|
| மக்கள் விடுதலைப் புலிகள் | = செல்வி மனோகர் | 14 | 2960 | 812 | 27.43 | ❖ 1 |
| | சுசிகலா அருள்தாஸ் | 08 | 3122 | 623 | 19.96 | ❖ 2 |
| | லுமஞ்சனி சிவரமேஸ் | 04 | 2527 | 238 | 9.41 | ❖ 7 |
| | சசிகரன் மேரிகிறீஸ்னா | 19 | 1543 | 152 | 9.86 | ❖ 5 |
| ஐக்கிய தேசிய கட்சி | = சசிகலா விஜயதேவா | 01 | 1993 | 384 | 19.27 | ❖ 3 |
| | சுமதி சூசைப்பிள்ளை | 02 | 2670 | 288 | 10.79 | ❖ 4 |
| | பேபி கோபாப்பிள்ளை | 14 | 2960 | 238 | 8 | ❖ 9 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | = தயாளகுமார் கௌரி | 02 | 2670 | 256 | 9.59 | ❖ 6 |
| | பர்தலம் அனஸ்ரி | 10 | 2063 | 172 | 8.34 | ❖ 8 |
| | சிவாகரன் சுலக்ஷனா | 19 | 1542 | 108 | 7.00 | 10 |
| | ஜயாத்துரை சுதாசினி | 04 | 2527 | 106 | 4.19 | 12 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | = அமலதாஸ் சுகிதா | 07 | 2771 | 165 | 5.95 | 11 |
| | பீதாம்பரம் புனிதா | 06 | 2316 | 66 | 2.84 | 13 |
| | ஜெயசுந்தர விஜிதா | 10 | 2063 | 37 | 1.79 | 14 |

இந்த அட்டவணைப்படி ஒன்றிலிருந்து ஒன்பதுவரை குறிப்பிடப்பட்ட பெண்களுக்கே மாநகரசபை 09திற்கு மேற்பட்ட பெண் அங்கத்துவம் கிடைக்க வேண்டும். கட்சிகளும், தேர்தல் ஆணைக்குழுவும் என்ன முடிவெடுக்கிறது என்று இன்னும் சில தினங்களில் விபரமாக தெரியவரும். இது ஜனநாயக நாடு நடப்பது நல்லாட்சி நீதியான முடிவு கிடைக்கும். பொறுத்திருந்து பார்ப்போம்.

## அம்பாறைக் கரையோரம் இயல்புநிலைக்கு திரும்பியது! கல்முனை சிங்கள மகாவித்தியாலயம் இயங்கவில்லை!

தொடர்ச்சி...

பெரிய பாடசாலைகள் வழமைபோன்றியங்கின. தனியார் பஸ்கள் பெரும்பாலானவை இயங்கவில்லை. எனினும் அரச பஸ்கள் சேவையிலீடுபட்டன. கல்முனை அக்கரைப்பற்று வீதியில் பாலமுனை என்ற இடத்தில் காலையில் வீதித்தடைபோட்டு சிறு பதற்றம் நிலவியபோதிலும் சற்றுநேரத்தில் இராணுவம் வரவழைக்கப்பட்டதும் நிலைமை சுமுகமாக மாறியது. போக்குவரத்தும் நடந்தது.

அம்பாறை நகரில் பணியாற்றும் சிறுபான்மையின ஊழியர்கள் பெரும்பாலும் நேற்றுமுன்தினம் பணிக்குச் செல்லவில்லையனெத் தெரிகிறது.

எனினும் நேற்று பெரும்பாலான ஊழியர்கள் அம்பாறைக்குச் சென்றனர். தனியார் இ.போ.ச பஸ் சேவைகள் இடம்பெற்றன.

நேற்று(8) கரையோர முழுப்பிரதேசமும் இயல்பநிலைக்கு வந்தது.

நற்பிட்டிமுனை அக்கரைப்பற்று போன்ற பிரதேசங்களில் தமிழ்மக்களுடன் சில வன்முறைகளுக்கு தூபமிடப்பட்டபோதும் அது பலனளிக்கவில்லை. நற்பிட்டிமுனையில் தமிழர்களின் 3 கடைகள் எரிக்கப்பட்டதாகக் கூறும் கல்முனை மாநகரசபை உறுப்பினர் அ.விஜயரெத்தினம் நற்பிட்டிமுனை பள்ளிவாசல் தலைவர்களை சமாதானத்திறற்கு அழைத்தபோதிலும் அவர்கள் வராதது கவலையளித்தாகத் தெரிவித்தார்.

கல்முனை சிங்கள மகாவித்தியாலயம் இயங்கவில்லை!

கல்முனையிலுள்ள ஒரேயொரு சிங்கப்பாடசாலையான சிங்கள மகா வித்தியாலயம் நேற்று புதன்கிழமை இயங்கவில்லை. மாணவரும் ஆசிரியர்களும் பாடசாலைக்கு




சமுகமளிக்காத காரணத்தினால் அது இயங்கவில்லை எனத் தெரியவருகிறது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பாடசாலைக்குவந்த 6 சிங்கள ஆசிரியர்களும் கல்முனையின் பதற்றம் நிலவியதையடுத்து 9.30 மணியளில் பாதுகாப்புக்கருதி கல்முனை பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்தனர். பிற்பகல் 3 மணிவரை அவர்களால் வெளியேறமுடியாமலிருந்தது.

கல்முனையின் பதற்ற நிலைமையே அதற்குக் காரணமாகும்.

பின்னர் அவர்களையும் கல்முனையில் பணியாற்றும் சில தனியார் வங்கி பெரும்பான்மையின உத்தியோகத்தர்களையும் பிற்பகல் 3 மணியளவில் பொலிசார் விசேட பாதுகாப்பு வழங்கி அம்பாறைக்குக் கொண்டு சென்று சேர்ப்பித்தனர்.



# அம்பாறையில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் தமிழர் நிலம்

~~ இரா.துரைரத்தினம் ~~



கிழக்கில் தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியாகி வருகிறது. நிலம், பொருளாதாரம், அரசியல் அனைத்தையும் இழந்து அநாதைகளாக்கப்பட்டு விடுவோமோ என்ற அச்சம் இன்று கிழக்கில் உள்ள பெரும்பாலான தமிழ் மக்களிடம் மேலோங்கி உள்ளது.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் மக்களிடம் இந்த அச்சம் இரட்டிப்பு மடங்காக அதிகரித்து வருகிறது. இப்போது இருக்கின்ற அம்பாறை மாவட்டத்தின் ( தமிழ் முஸ்லீம் பகுதிகளை உள்ளடக்கிய ) பெரும்பகுதி 1961 வரை மட்டக்களப்பு மாவட்டத்துடனேயே இருந்தது. 1961ஆம் ஆண்டிலேயே மட்டக்களப்பு மாவட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டு அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டது.

1953ஆண்டு எடுக்கப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்பின் படி மட்டக்களப்பு மாவட்டத்தின் சனத்தொகையில் 48வீதம் தமிழர்களும், 39வீதம் முஸ்லீம்களும் இருந்தனர். சிங்களவர்கள் ஒரு வீதத்திற்கு குறைவாகவே அங்கு இருந்தனர்.

1949இல் ஆரம்பித்த கல்லோயா திட்டம், 1953இல் முடிவடையும் வரை, பெருமளவான சிங்களக் குடியேற்றம், மேற்கொள்ளப்பட்டது. 1959 தேர்தல் தொகுதி மீள்நிர்ணயப் பரிந்துரைகளின் கீழ், அம்பாறை நகர் உட்பட பதுளை மாவட்டத்தின் சில சிங்கள கிராமங்களும் தமிழ் முஸ்லீம் மக்கள் வாழ்ந்த மட்டக்களப்பின் தென்பகுதி கிராமங்களுடன் இணைக்கப்பட்டு 1961 ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி அம்பாறை என்ற புதிய மாவட்டம் பிரகடனம் செய்யப்பட்டது.

1963ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் எடுக்கப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்பின் படி முஸ்லீம்கள் 46வீதமாகவும், சிங்களவர்கள் 29வீதமாகவும், தமிழர்கள் 24 வீதமாகவும் காணப்பட்டனர்.

அதன் பின்னர் அம்பாறை மாவட்டத்தில் இருந்த தமிழர்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு சில கிராமங்களிலிருந்து தமிழர்கள் முற்றாக வெளியேற்றப்பட்டனர். 1990ல் ஏற்பட்ட பதற்றமான சூழலை பயன்படுத்தி சம்மாந்துறை, மீனோடைக்கட்டு உட்பட பல தமிழ் கிராமங்களில் இருந்து தமிழர்கள் முற்றாக வெளியேற்றப்பட்டனர்.

1986ஆம் ஆண்டு பெப்ரவரி 19ஆம் திகதி இடம்பெற்ற உடும்பன்குளம் படுகொலை தொடக்கம் வீரமுனை படுகொலை, சம்மாந்துறை படுகொலை, பொத்துவில் படுகொலை, திராய்கேணி படுகொலை, கல்முனை படுகொலை, நற்பிட்டிமுனை படுகொலை, என பல கூட்டுப்படுகொலைகளால் தமிழ் மக்கள் அம்பாறை மாவட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

இந்நிலையில் 1963ஆம் ஆண்டு 24வீதமாக இருந்த தமிழர்களின் சனத்தொகை வீதம் 2012ஆம் கணக்கெடுப்பின் படி 17வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.





தமது முற்றம் என்று பறிபோகுமோ என்ற அச்சத்தில் இருக்கும் குடும்பங்கள்

தமிழ் அரசியல் தலைமைகளும் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் கிராமங்களை தக்க வைப்பதற்கும் அவர்களின் உரிமைகளை காப்பாற்றுவதற்கும் உரிய கவனம் எடுக்கவில்லை என்பது அம்மாவட்டத்தில் உள்ள தமிழ் மக்கள் முன்வைக்கும் பிரதான குற்றச்சாட்டாகும்.

தேர்தல் காலங்களில் கூட ஏனைய தமிழ் மாவட்டங்களில் செலுத்தும் கவனங்களை அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்களில் காட்டுவதில்லை. பிரதான தமிழ் அரசியல் கட்சிகள் தேர்தல் காலங்களில் தாக்கல் செய்யும் வேட்புமனுக்களை கூட சரியான முறையில் தாக்கல் செய்வது கிடையாது.

**அம்பாறைத் தமிழர்களில் அக்கறையற்ற தமிழ் தலைமைகள்**

உதாரணமாக 2000ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் பிரதான தமிழ் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி தாக்கல் செய்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டது. கடந்த பொதுத்தேர்தலில் கூட தமிழ் தேசிய கூட்டமைப்பு தாக்கல் செய்த இரு உள்ளூராட்சி சபைகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் அரசியல்வாதிகள் தமது பதவி சுகபோகங்களை அனுபவிப்பதில் காட்டும் அக்கறையின் ஒரு வீதத்தை கூட அம்பாறை மாவட்ட தமிழர்களின் நலனில் காட்டுவது கிடையாது.

அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களின் காணிகள் திட்டமிட்டு அபகரிக்கப்பட்டு வந்த நிலையில் இப்போது அட்டப்பள்ளம் கிராமத்தில் வசிக்கும் தமிழ் மக்கள் காலம் காலமாக தங்களின் உறவுகளின் உடல்களை புதைத்த மயானம் கூட பறிபோகும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

தங்களின் மயானம் அபகரிக்கப்படுவதை எதிர்த்துப் போராடிய மக்கள் 3 நாட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அச்சுறுத்தல் என்பது அட்டப்பள்ளம் மக்களுக்கு புதியதல்ல. அட்டப்பள்ளம் மக்கள் காலம் காலமாக படுகொலைகளையும் அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்கி வந்திருக்கிறார்கள்.

1986 ஆம் ஆண்டு பெப்ரவரி 19ஆம் திகதி நடந்த உடும்பன்குள படுகொலையில் பலியான பெரும்பாலானவர்கள் அட்டப்பள்ளம் கிராமத்தை சேர்ந்தவர்களாகும். நெல் அறுவடை வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தமிழ் மக்களை சுற்றிவளைத்த இராணுவத்தினரும், ஊர்காவல் படையினரும் அவர்களை வெட்டியும் சுட்டும் கொன்று நெல் வயலில் இருந்த வைக்கோலுடன் போட்டு எரித்தனர். இதில் 130அப்பாவி தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இவ்வாறு 1986ஆம் ஆண்டுக்கு பின்னர் தொடர்ச்சியாக இக்கிராம மக்கள் பல்வேறு ஆக்கிரமிப்புக்களால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இன்று அவர்களின் மயானமும் பிரச்சினைக்கு உள்ளாகி, அதை மீட்பதற்காக போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர்.

காலம் காலமாக இந்த மயானத்தில்தான் தங்களின் உறவினர்களின் உடல்களை புதைத்து வந்ததாக அட்டப்பள்ளம் கிராமமக்கள் கூறுகின்றனர். 1980ஆம் ஆண்டில் தனது தந்தையின் உடலை இங்கே தான் அடக்கம் செய்தோம் என 60 வயது முதியவர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இவ்வளவு காலமும் இந்த நிலத்தை மயானமாக நாம் பாவித்த போது இந்த பேராசிரியர் எங்கே போயிருந்தார் என அந்தக் கிராம மக்கள் கேட்கின்றனர்.

இந்த மயானம் 14 ஏக்கர் விஸ்தீரணம் கொண்டது. பொது மயானங்கள் அந்தந்த உள்ளூராட்சி சபைகளிற்கே சொந்தமானவையாகும்.

இந்த 14 ஏக்கரில் 12ஏக்கர் தனக்கு சொந்தமானது என தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருக்கும் முஸ்லீம் நபர் ஒருவர் கடந்த வருடம் உரிமை கோரியிருந்தார். தன்னிடம் அதற்கான உறுதி இருப்பதாக கூறி, அந்தக் காணியை நில அளவை செய்தார். தமது மயானத்திற்கு இரு ஏக்கர் உள்ளது தானே என தாம் அமைதியாக இருந்ததாக அட்டப்பள்ளம் ஆலயத்தலைவர் த. கோபாலன் தெரிவித்தார்.

ஆனால் கடந்த வாரம் அதே பேராசிரியர் மிகுதியாக இருந்த 2 ஏக்கர் மயானக்காணியும் தனக்கு சொந்தம் என நில அளவை செய்து காணியை சுற்றி முள்கம்பி வேலி அமைக்க முற்பட்டபோதே, அதனைத் தடுத்து நிறுத்துவதற்காக போராட வேண்டி ஏற்பட்டது என்கிறார்கள் அட்டப்பள்ளம் மக்கள்.

பொலிஸார் கூட தமது மயானத்தை மீட்க போராடிய மக்களை அடக்கும் வகையில் விசாரணைக்கு என அழைத்து கைது செய்து தடுத்து வைத்ததாக அங்கிருக்கும் செய்தியாளர் ஒருவர் கூறுகிறார்.

சில மாதங்களுக்கு முன்னர் ஆலையடிவேம்பு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சரணபாலபுரம் பிரதேசத்துடன் இணைந்த பழமையான கண்டக்குழிக்குளமும் அதனை அண்டிய 70 ஏக்கர் நிலமும் பிரச்சினைக்குள்ளானது.

இக்குளமும் அதனை அண்டிய நிலமும் தர்மரத்தினம் வன்னியனாரின் குடும்ப சொத்தாக இருந்தது. தர்மரத்தினம் வன்னியனார் என்பவர் ஊடகவியலாளர் சிவராமின் பேரனாகும்.

தர்மரத்தினம் வன்னியனார் இறந்த பின்னர் இக்குளமும் அவருக்கு சொந்தமான நிலங்களும் கவனிப்பார் அற்று காணப்பட்டன.

இந்த நிலங்களின் சொந்தகாரர்களாக முஸ்லீம் அரசி ஆலை முதலாளி ஒருவர் மாறியிருக்கிறார்.

தர்மரத்தினம் வன்னியனார் குடும்பத்திற்கு ஒலுவில் அக்கரைப்பற்று மீனோடைக்கட்டு உட்பட அம்பாறை மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான நிலங்கள் இருந்தன. இவற்றில் ஒலுவில் துறைமுகம் பல்கலைக்கழகம் ஆகியவற்றிற்கு சுவீகரித்த காணிகள் போக மிகுதி ஏராளமான காணிகள் போலி உறுதிகள் தயாரிக்கப்பட்டு கைமாறி இருக்கின்றன.

அண்மையில் முறாவோடை சக்தி வித்தியாலய காணி, வாழைச்சேனை கையிலாயபிள்ளையார் காணி, என பல காணிகளுக்கு முஸலீம்கள் உரிமை கோரியிருக்கிறார்கள். வாழைச்சேனை சுங்காங்கேணி தமிழ்கிராமத்தில் 36ஏக்கர் காணி தன்னுடைய காணி என காத்தான்குடியை சேர்ந்த ஒருவர் உரிமை கோரியிருக்கிறார்.

தங்கள் வீட்டு முற்றத்திற்கு உரிமை கோரி யார் யார் வரப்போகிறார்களோ என்ற அச்சம் இன்று கிழக்கு மாகாண தமிழ் மக்களிடம் எழுந்திருக்கிறது.

இவ்வாறு சில முஸ்லீம் தனிநபர்கள் மற்றும் முஸ்லீம் அரசியல்வாதிகள் செய்யும் செயல்கள் கிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லீம் உறவை முற்றாகவே சீர்குலைத்து விடும்.

# அட்டப்பள்ளம் இந்து மயானத்தின் எதிர்காலம் என்ன?



~~ விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா ~~

அட்டப்பள்ளம் கிராமத்திற்கென இருந்த ஒரேயொரு மயானத்தின் இருப்பு இன்று கேள்விக் குறியாகியுள்ளது. அதனை நிலைநிறுத்த தமிழ் அரசியல்வாதிகள், தமிழ் உணர்வாளர்கள் செயய்வேண்டியவை என்ன? என்ற அவசியமான வினாவும் கூடவே எழுகின்றது.

கடந்த காலங்களில் திட்டமிட்ட வன்முறைகளாலும் அரசியல் பழிவாங்கல்களாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் பல இன்னல்களை சந்தித்த அம்பாறை மாவட்ட தமிழ் கிராமங்களில் அட்டப்பள்ளம் கிராமமும் ஒன்றாகும். இது நிந்தவூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஒரு



## தனிநபருடனான காணிப்பிரச்சினை சமூக விவகாரமாகக் கூடாது

தமிழ்க்கிராமமாகும்.

அம்பாறை மாவட்டத்தின் பழம் சிறு கிராமமான அட்டப்பள்ளத்தின் மக்கள் கடந்த 200 வருடகாலமாக பயன்படுத்திவந்த இந்துமயானம் ஒரு தனிநபரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதென்ற விவகாரம் கடந்த வாரம் சூடுபிடித்திருந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை(27) அட்டப்பள்ளம் இந்து மயானத்தை ஒரு நபர் ஆக்கிரமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது மக்கள் கிளர்ந்தெழுந்து ஆர்ப்பாட்டத்திலீடுபட, அங்கு

உதவிப் பிரதேச செயலாளரும் கிராம சேவையாளரும் தாக்கப்பட்டனர் எனக்கூறி சந்தேகத்தின் பேரில் 23 பேரின் பெயர்கள் பொலிசாரிடம் சமர்ப்பிக்கப்பட்டதன் பிரகாரம் அவர்கள் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டு, பெண்கள் இருவரைத் தவிர ஏனைய 21 பேரும் 14 நாள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் திங்களன்று (5) முன்நகர்வு மனு சமர்ப்பிக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

## அட்டப்பள்ளம் பிரச்சினையை இரு சமூக தலைவர்களும் கூடிப் பேசித்தீர்க்கப்பட வேண்டும்

எதிர்வரும் 16 ஆம் திகதி விசாரணைத் தவணைக்கு அனைவரும் ஆஜராகவேண்டும்.

தமது மயானத்தை காப்பாற்ற போராடிய இந்த மக்கள் சார்பாக சட்டத்தரணிகளான சந்திரமணி சிவரஞ்சித் ஜெகநாதன் மற்றும் ஆர்த்திகா உள்ளிட்ட அறுவர் எதுவித கட்டணமுமின்றி ஆஜராகியிருந்தமை பாராட்டுக்குரியது.

அது மட்டுமல்ல தமிழ் அரசியல்வாதிகள் பலர் இது விடயத்தில் தலையிட்டு தமது ஒற்றுமையை வெளிக்காட்டியிருந்தனர். சிலர் வழமைபோல வெறும் அறிக்கைகளோடு காலங்கடத்தியிருந்தனர். எதிர்காலத்தில் அவர்களை இனங்கண்டு

மக்கள் ஓரங்கட்டவேண்டும்.

அட்டப்பள்ள ஆலய தலைவர் ரி.கோபாலன் கூறுகையில்;

'அட்டப்பள தமிழ்மக்கள் எப்போதும் நிந்தவூர் முஸ்லிம் மக்களோடு மிகவும் அந்நியோன்யமாக வாழ்ந்துவந்தவர்கள், வருகின்றனர்.



இந்த மயான ஆக்கிரமிப்பு என்பது ஒரு



தனிநபருடைய பிரச்சினை. உண்மையில் காலாகாலமாக 14 ஏக்கர் காணி

மயானமாக இருந்துவந்தது.

அதில் கடந்த வருடம் இதே பேராசிரியர் வந்து 12 ஏக்கர் தனக்கிருப்பதாக ஒரு உறுதியைக்காட்டி அளந்தார். எமக்கு வேறு வழியிருக்கவில்லை. மயானத்திற்கு 2 ஏக்கர் போதுமென்று நினைப்பில் இருந்தோம்.

ஆனால், கடந்த 27ஆம் திகதி மீண்டும் அவர் வந்து, அந்த 2 ஏக்கரையும் சேர்த்து அளக்க முற்பட்டார். நீதிமன்ற ஆணை இருப்பதாகக் கூறிய போதிலும் கிராமசேவையாளரோ, உரிமையாளரோ நீதிமன்ற ஆணையைக்காட்டவில்லை.

நீதிமன்ற ஆணை இருப்பதாகக்கூறி

ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். உண்மையில் நீதிமன்ற ஆணையை அவர் பெற்றிருக்காவிட்டால் இக்கடிதத்தின் மூலம் அவர் நீதிமன்றை அவமானப்படுத்தியிருக்கிறார் என்ற குற்றமும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டப்படத்தக்கது.

அவரது இந்த சட்டவிரோத செயற்பாட்டை





நாம் மட்டுமல்ல அட்டப்பளத்திலிருக்கும் முஸ்லிம் சகோதரர்களும் சேர்ந்தே எதிர்த்தோம். அங்கு வந்த உதவிப் பிரதேசசெயலாளரை நானும் யாரிஸ் என்ற பிரதேசசபை முஸ்லிம் உறுப்பினரும் இணைந்தே காப்பாற்றி ஜீப்பில் ஏற்றினோம்.

இந்தநிலையில் எமது போராட்டம் இரு இனங்களும் சேர்ந்தே மேற்கொள்ளப்பட்டது. நாம் இணைந்தேயிருக்கிறோம்.' என்று சொன்னார்.

ஆனால் காணியை அபகரித்த அந்த நபர், இந்த குழப்பங்களுக்கு மூலகாரணமான அந்த முஸ்லிம் பேராசிரியருக்கு எதிராக அதிகாரிகள் என்ன நடவடிக்கையை இதுவரை எடுத்துள்ளார்களா என்ற கேள்வியும் எழுகிறது.

1986ஆம் ஆண்டு உறுதி முடிக்கப்பட்டதென்றால் 1995, 1996 களில் பிரேதம் புதைக்க காணி உரிமையாளர் அனுமதித்திருப்பாரா? இன்றும் அவர்களின் கல்லறைகள் உள்ளன (படங்களில் காணலாம்).

எனவே இப்பிரச்சினை இனரீதியாகவில்லாமல் மனிதாபிமானத்தோடு ஆழமாக அணுகப்பட வேண்டியதொன்றாகும். நிந்தவூர் பள்ளிவாசல் ஊர்ப்பெரியார்கள் இணைந்து இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும். அன்றேல் வரலாற்றில் ஒரு மாறாதவடுவை இவ்விகாரம் ஏற்படுத்திவிடும்.

இந்த மக்களின் நியாயமான கோரிக்கைக் கேற்ப இந்தக் காணி தொடர்பான பிரச்சினைக்கு தீர்வைக்கண்டு முற்றுப்புள்ளி வைப்பதற்கு, பல வழிகளிலும் எல்லோரும் தொடர்ந்து பங்காற்ற வேண்டியது கடமையாகும்.



# தமிழ் தேசிய சிதைவினை தடுக்க கிழக்கின் நிலம், பொருளாதாரம் மற்றும் ஏனைய அம்சங்கள் குறித்த தீவிர கவனம் தேவை

~~ திருநாவுக்கரசு கோபகன் ~~

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஓய்ந்து ஆட்சியமைக்கும் பேரம் பேசல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் இலங்கையில் தமிழர் தரப்பு தமது தேசிய இருப்பிற்க்கான அடுத்த கட்ட நகர்வை நேர்த்தியான பாதையில் கொண்டு செல்கிறதா என்கிற கேள்வியை முன்வைக்க வேண்டிய கட்டாயம் எழுகிறது.

தொடர்ச்சியான விமர்சனங்களை எதிர்கொண்டு வரும் தமிழரசுக் கட்சியும் அதன் கூட்டாளிக் கட்சிகளும் தமது தேசியம் தொடர்பான தெளிவான நிலைப்பாட்டை தெளிவு படுத்தவில்லை. புலிகளினால் போஷிக்கப்பட்ட கட்சி எங்களுடையது என்று வெளியே சொல்லித்திரிவதனால் மட்டும் தாம் புலிகள் ஆயுதப் போராட்ட காலத்தில் முன்வைத்த தேசியத்துடன்தான் பயணிக்கின்றோம் என்று

கூறமுனைவதாகவே பெரும்பாலான மக்கள் கருதுகின்றனர்.

சிங்கள அரசு இனப்பிரச்சனைக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கும் எனவும் இதுவே அனைவருக்குமான இறுதிச் சந்தர்ப்பம் எனவும் அக்கட்சி தொடர்ச்சியாகப் பேசிவருகிறது. ஆனால் பெரும் மூடுமந்திரமாக மறைத்து வைக்கப்பட்டிருக்கும் தீர்வுப் பொதி வெளிவரும் போது யாரைத் திருப்தி செய்யும் என்பது தெரியவில்லை. இதுபற்றி இதுவரையும் தெளிவூட்டல்கள் நடைபெறற்றதாக அறியக்கிடைக்கவில்லை. திருவாளர் சம்பந்தன் மற்றும் திருவாளர் சுமந்திரன் தவிர்ந்த தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கூட எவ்விதமான தெளிவும் வழங்கப்படவில்லை. எனவே தீர்வுத் திட்டத்தின் பின்பாக தமிழர் தேசியப் போக்கின் நகர்வு பற்றி எதுவிதமான எதிர்வுகூறலையும் விவாதப்பொருளாக்க முடியாது.

இத்தேர்தலில் தம்மை பலப்படுத்தி வெளிவந்திருக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசியம் தொடர்பான நிலைப்பாடு தொடர்ச்சியாக விமர்சிக்கப்பட்டு வருகிறது. இலங்கையில் ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்பான “ஒரு நாடு இரு தேசம்” என்கிற கோட்பாட்டு அரசியலுக்கான முறையான வேலைத்திட்டங்கள் எவையும் முன்வைக்கப்படாத பட்சத்திலும் இக்கட்சியின் தேர்தல் தொடர்பான மாறிவரும் நிலைப்பாடுகளும் அதன் தேசியக் கோட்பாடு தொடர்பான பொருத்தப்பாடான நிலைப்பாட்டை கேள்விக்குள்ளாக்குகிறது.

ஏனைய கட்சிகள் தமது அரச சார்பு நிலையிலிருந்து தமிழரின் பொருளாதார அபிவிருத்தியை மட்டுமே பிரதான இலக்காகக் கொண்டு தேர்தலைச் சந்தித்தன. எனவே தமிழரின் நீண்ட கால இருப்பு தொடர்பான கோட்பாட்டு அரசியலையும் அதற்கான வேலைத்திட்டங்களையும் இக்கட்சிகளிடம் இருந்து எதிர்பார்க்க முடியாது. ஆனால் தமிழர் தரப்பு எக்காலத்திலும் இல்லாத வகையில் இம்முறை தமது

வாக்குகளை ஒரு மாற்றத்தினை எதிர் நோக்கி செலுத்தியுள்ளதை நாம் கவனத்திலெடுக்க வேண்டும். இதனூடாக எம்மக்கள் எவ்விதமான செய்தியை வெளிப்படுத்தி நிற்கின்றனர் என்பதனையும் ஆராய வேண்டும். தொடர்ச்சியாக அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்டு வரும் தமிழர் தரப்பு தமது பொருளாதார இருப்பிற்கான அடுத்த நகர்வாக பெருந்தேசியக் கட்சிகளின் பின்னால் அணிதிரளும் சாத்தியப் பாடுகளையும் நாம் உதறித் தள்ளிவிட முடியாது.

இந்தப் புறச்சூழலில் 60 வருடங்களாக நீண்ட போராட்டத்தை நடாத்திக் கொண்டிருக்கும் ஒரு இனமாக நாம் அடுத்த தளத்திற்கான பயணத்தை எவ்விதம் கொண்டு செல்வது என்பதனை விவாதிக்க வேண்டியிருக்கிறது.

ஒவ்வொரு தேசிய இனங்களும் தமது இருப்பினை நிலைநாட்டுவதற்காகவே சனநாயக வழிமுறையினூடாக தேர்தல்களை எதிர்கொண்டு அதிகாரத்தைக் கைப்பற்றுவதும் அவை சாத்தியப்படாத சூழலில் தமது பேரம் பேசும் சக்தியினூடான ஆட்சியில் பங்கு கொண்டு தமது இருப்பை நிலைநாட்டுவதுமான தந்திரோபாயத்தை மேற்கொள்கின்றன.

இலங்கையில் இவை சாத்தியப்படாத சூழலை தமிழர் தரப்பு எதிர்கொள்வதால் அது தனக்கான தனியான நிழல் நிர்வாக அலகொன்றை நிறுவி அதனூடாக தேசியத்தின் இருப்பை அடுத்த தளத்திற்குக் கொண்டு செல்ல வேண்டிய கடப்பாடு நம்முன்னே வியாபித்திருக்கிறது.

ஒவ்வொரு தேசிய இனங்களும் தமது பிரதான கோட்பாட்டு மையங்களான நிலம், மொழி, பண்பாடு மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பு என்பவற்றை ஆழமாக நிலைநிறுத்துவதனூடாகவே வளர்ச்சிப்போக்கை அடைய முடியும். தமிழர் தரப்பு இதற்கான வேலைத்திட்டங்களை கடந்த 9 வருடங்களில் எங்கேனும் பேசியிருக்கிறதா என்று தேடவேண்டியிருக்கிறது. இக்கோட்பாட்டு வேலைத்திட்டங்களை பேசாத அது தொடர்பில் இயங்காத தேசிய இனங்கள் தமது அழிவுப் பாதையில் பயணிப்பதாகவே கருத வேண்டியேற்படும். எனவே இவற்றை மீள நிறுவும் பிரதான பணி அரசியல் கட்சிகள் சாராத தமிழரின் அடுத்த அமைப்பு நிலையிலுள்ள சமூக மட்ட அமைப்புக்களின் மற்றும் மக்கள் இயக்கங்களின் மீது சுமத்தப்படுகிறது.

### நிலம்:

---

இணைந்த வடகிழக்கே தமிழரின் தாயக பூமி என்பதன் அடிப்படையில் நமது தேசியம் நிலை நிறுத்தப்படும் காலப்பகுதியில் வடக்குத் தமிழர்கள் கிழக்கை அதன் தாயகப்பகுதியாக உணர்வினடிப்படையில் கொண்டிருக்கின்றார்களா என்கிற

கேள்வி பொதுத்தளத்திலே தீவிரமாக விவாதிக்கப்பட்டு வருகின்றமையை நாம் கிழக்கிலே காணுகின்றோம். அதற்கான நியாயமான சந்தேகங்களை வடக்கும் கிழக்கு தமிழர்கள் மீது வைத்திருக்கிறார்கள். இந்தச் சிந்தனை மாற்றம் கிழக்கின் தமிழர்கள் மிக நெருக்கடியாக உணருகின்ற தேசிய இருப்பை நிலம் தொடர்பாக நிலைநிறுத்த பெரும் போராட்டங்களை மேற்கொள்ள வேண்டிய தேவையை உணர்ந்து நிற்கின்றனர். சிங்கள அரச ஒடுக்கு முறைக்கும் இஸ்லாமிய மக்களின் நில ஆக்கிரமிப்பிற்குமாக இருவேறு பெரு நெருக்கடிகளை எதிர்வு கொள்வதால் கிழக்கு, நிலம் தொடர்பாக தனது தேசிய இருப்பை தீவிரமான சிந்தனைத் தளத்தினை நோக்கி கொண்டு செல்ல வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றது. இங்கு தான் கிழக்கு தமிழர் தரப்பு தமக்கான தனியான

அரசியல் அசைவியக்கம் பற்றி தீவிரமான கலந்துரையாடல்களை முன்வைக்க முயல்கின்றனர். இது ஒட்டுமொத்த தமிழ்த்தேசியத்தின் இருப்பிற்கு சாதகமான ஏது நிலையை ஏற்படுத்துமா என்பதே இன்றைய பிரதான கேள்வியாகின்றது. எனவே தமிழர் தரப்பு தமது நிலம் தொடர்பான நிலைப்பாட்டை இணைந்த வடகிழக்கு என்கிற தளத்திலும் சாத்தியமாகாதவிடத்து கிழக்குத் தமிழர் என்கிற தளத்திலும் விவாதிக்க வேண்டிய இக்கட்டிற்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

### மொழி பண்பாட்டு அடையாளங்கள்:

---

எமது மொழியை பண்பாட்டை அடுத்த தளத்தினை நோக்கி நகர்த்துவதற்கான வேலைத்திட்டங்களை நாம் தொடங்கியாக வேண்டும். தமிழர்கள் பங்கு கொண்ட கிழக்கு மாகாண அரசிலும் சரி தமிழர்களால் நிர்வாகிக்கப்படும் வடக்கு மாகாண அரசிலும் இதுவரைகாலமும் எமது மொழி பண்பாட்டு அடையாளங்களை நிறுவுவதற்கும் அதனை அடுத்த தளத்தினை நோக்கிக் கொண்டு செல்லவுமான நிலையான வேலைத்திட்டங்கள் எவையும் நடைமுறைப்படுத்தப்படுவதற்கான சாத்தியங்களை காணக்கிடைக்கவில்லை. ஆனால் எமது அடையாளங்களை அழிப்பதற்கான பெருந் தேசியத்தின் நிகழ்ச்சி நிரல் தெளிவான இலக்குடன் நகர்வதை நாம் காணுகின்றோம்.

மூதூர் சூடைக்குடா மத்தளை மலை சம்பவம் இறுதியாக எம்மீது பிரயோகிக்கப்பட்ட தீவிர பண்பாட்டழிப்பின் ஒரு உதாரணமாகும். இவற்றை அமைப்பு ரீதியாக எதிர்கொள்வதற்கான கொள்ளளவை நமது தேசியம் தன்னிடம் வைத்திருக்கிறதா என்று கேள்வியை எழுப்பி அதனூடாக நாம் அடுத்த கட்டத்திற்கு நகர வேண்டும்.

### பொருளாதாரம்:

---

பன்னாட்டு முதலாளிகளின் கோரப்பிடிக்குள் சிக்கித்தவிக்கும் இலங்கையின் பொருளாதார உற்பத்தி முறையிலிருந்து தமிழ்த்தேசியம் தனக்கான தனியான பொருளாதார இலக்கை நிறுவி அதனை நோக்கி நகர முடியுமா என்று தீவிரமாக விவாதிக்க வேண்டியிருக்கிறது. மரபு ரீதியான உணவு உற்பத்தியும் பாரம்பரிய தொழில் முயற்சிகளும் நிலத் தொடர்புகளால் கிடைத்திருக்கும் கடல் வளங்களும் இயற்கையை நேசித்த வாழ்க்கை முறையும் தமிழரின் அடுத்த பொருளாதார இருப்பிற்கான தேசியக் கொள்கையை மேம்படுத்த போதுமான காரணிகளாகும். ஆனாலும் மறுக்கப்படும் சந்தை வாய்ப்பும் தொழிநுட்ப அறிவினை மேம்படுத்துவதற்கான வாய்ப்பும் நம் தேசியம் சார்“ந்த உற்பத்திப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் ஆற்றல் விருத்திக்கான வாய்ப்பும் கட்டியெழுப்பப்பட வேண்டிய சந்தர்ப்பங்களை நாம் கண்டு கொள்ளாமல் கடந்து வந்திருக்கின்றோம்.

யாழிலும் மட்டக்களப்பிலும் நம்மிடம் உள்ள பல்கலைக் கழகங்கள் நமது பாரம்பரிய தொழில் முயற்சிகளை மேம்படுத்தும் கற்கைநெறிகளைப்பற்றி சிந்திக்க தவறிவிட்டன. தற்போது கிடைத்திருக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி இவற்றினை மேம்படுத்தவும் புலம்பெயர் தமிழரின் முதலீடுகளை நம் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தும் வாய்ப்புக்களை சிந்திப்பதனூடாக தமிழ்த்தேசியத்தின் அடுத்தகட்ட நகர்வை நாம் முன்னிறுத்த வேண்டும்.

எனவே ஒருங்கிணைக்கப்பட்ட வேலைத்திட்டங்களுடன் கோட்பாட்டு ரீதியாக தமிழர் தரப்பு தனது அடுத்த கட்ட நகர்வை மேற்கொள்ள வேண்டிய பாரிய பொறுப்பு மிக்க சூழ்நிலையைக் கடந்து கொண்டிருக்கின்றோம். இந்த தடவையும் நாம் விழித்துக் கொள்ளவில்லையாயின் தமிழ்த்தேசியத்தின் சிதைவினை தடுத்து நிறுத்த முடியாததாகி விடும்.



# வேலையற்ற பட்டதாரிகள் நியமனத்தில் தமிழருக்கு அநீதியா?



மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் பெருமெடுப்பிலொரு ஒரு விழா கடந்த சனிக்கிழமை நடந்தேறியது. இலங்கை ஜனாதிபதி தலைமை அதிதியாகவும், மாகாண ஆளுனர் மற்றும் அமைச்சர்கள் சிறப்பு அதிதிகளாகவும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

பள்ளிக்கூட அதிபர்கள், ஏனைய அரச உத்தியோகத்தர்கள் கலந்துகொள்ள பாடசாலை மாணவர்களின் நடன நிகழ்ச்சிகளும் நடந்தேறின. பெரும் பந்தலிட்டு, போரின் பின்னர் கடுமையான பாதுகாப்பும் போடப்பட்டிருந்தன. வெபர் மைதானத்தை சுற்றிய சில வீதிகள் பொதுமக்கள் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டிருந்தன.

கொழும்பில் இருந்து ஜனாதிபதி செயலகமே நேரடியாக செய்தியாளர்களை அழைத்து வந்ததால், தாம் சரியாக உள்வாங்கப்படவில்லை என்ற கவலை உள்ளூர் செய்தியாளர்களுக்கு இருந்தது. இப்படியாக பலவிதமாக நிலைமைகளுக்கு மத்தியில் நடந்தேறிய இந்த விழாவின் முக்கிய அம்சம் வேலையற்ற பட்டதாரிகளுக்கான பதவி நியமனங்களை வழங்கல். குறிப்பாக 270 பட்டதாரிகளுக்கும் மேலும் சில டிப்ளோமா பயிற்சி வழங்கப்பட்டவர்களுக்கும் வேலை நியமனங்கள் வழங்கப்பட்டன.

மேலோட்டமாக பார்த்தால் சந்தோஷமான நிகழ்ச்சிதான். ஆனால் அதன் உள்ளேயும் சில சோகங்கள் கலந்திருந்தன.

இலங்கையின் பல இடங்களைப் போல கிழக்கு மாகாணத்திலும் வேலையற்ற பட்டதாரிகள் தமக்கு அரசாங்க வேலை வேண்டி பல வருடங்களாக போராட்டங்களை நடத்திவந்தனர். 5500 பேருக்கு இதுவரை வேலையில்லை.

போராட்டங்களை நடத்தி வந்த கிழக்கு மாகாண தமிழ் பட்டதாரிகள் இந்த

**நியமனங்களை கண்டித்து மட்டக்களப்பு பட்டதாரிகள் சட்ட நடவடிக்கை**

நிகழ்வின் மூலம் தமக்கு அநீதி இழைக்கப்பட்டதாகவும், தாம் அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்டதாகவும் கூறுகிறார்கள்.

கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரை தமிழ் பேசும் மக்களின் மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை சிங்கள பட்டதாரிகளை விட அதிகம். ஆனால், ஜனாதிபதியால் நியமனம் வழங்கப்பட்ட



270 பட்டதாரிகளில் 198 பேர் சிங்கள பட்டதாரிகள் என்று மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் குற்றம் சாட்டுகின்றது.

அதாவது நியமனம் வழங்கப்பட்டவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் சிங்களவர்கள் என்கின்றனர் அவர்கள். அதாவது கிட்டத்தட்ட கிழக்கில் வேலையற்ற சிங்கள பட்டதாரிகள் அனைவருக்கும் வேலை வழங்கப்பட்டாகிவிட்டது, தாம் அரசியல் ரீதியாக பழிவாங்கப்படுகின்றோம் என்கிறார்கள் தமிழ் பட்டதாரிகள்.

அதுமாத்திரமல்லாமல், போட்டி பரீட்சைகளில் கூடிய புள்ளிகள் பெற்றவர்கள் இருக்க குறைந்த புள்ளிகள் பெற்றவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது என்பது அவர்களது அடுத்த குற்றச்சாட்டு.

இது குறித்து தாம் கிழக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணையரிடம் முறைப்பாடு செய்த போது, தமிழ் இடங்களில் ஆளனிக்கான வெற்றிடம் இருக்கவில்லை என்று அவர்



கூறியதாகவும், ஆனால், தகவல் அறியும் சட்டத்தின் தாம் அப்படியாக ஆயிரத்துக்கும் அதிகமான வெற்றிடங்கள் இருப்பதாக பெற்றுக்கொடுத்த தகவலையும் ஆணையர் நிராகரித்து விட்டார் என்றும் மட்டக்களப்பு வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவரான எஸ். சிவகாந்தன் கூறுகிறார்.

இது குறித்து இந்தக் கூட்டத்துக்கு முன்னதாக தாம் ஜனாதிபதியை சந்தித்து முறையிட்ட போது, இது குறித்து நடவடிக்கை எடுப்பதாக அவர் உத்தரவாதம் வழங்கினார் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

இதனை தமக்கு எதிரான ஒரு அரசியல் பழி வாங்கலாகவும் அவர்கள் கருதுகிறார்கள்.

அதனால், இது குறித்து நீதிமன்றத்துக்கும் அவர்கள் செல்கிறார்கள்.

தகுதி வாய்ந்தவர்கள் இருக்க வேறு நபர்களுக்கு பணி வழங்கியமை, ஆளணி வெற்றிடம் இருந்தும் உரியவர்களை அவற்றுக்கு நியமிக்காமல் பாரபட்சம் காட்டியமை, தகவல் அறியும் சட்டத்தின் மூலம் பெற்ற தகவலை நிராகரித்தமை ஆகியவை பற்றி மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதாக மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகள் சங்கம் சார்பிலான



சட்டத்தரணி பேரிம்பம் பிரேம்நாத் கூறினார்.

பெருத்த விழா, நாட்டின் தலைவர் அதிதி என்று பலவிதமான ஏற்பாடுகள் செய்யப்பட்ட நிலையில் நடக்கும் ஒரு நிகழ்வுக்கு முன்பான ஏற்பாடுகள் கனத்தவையாக இருந்திருக்கும். அதனைவிட ஆழமானவையாக "எதற்காக இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டதோ அந்த காரணம்" இருந்தாக வேண்டும். அந்த காரணத்தில் குழப்பங்கள் இருந்தால் இப்படியான நிகழ்வுகளும் அதற்கான ஏற்பாடுகளும்

**ஜனாதிபதி நேரில் வழங்கும் நியமனங்களில் குழப்பம் இருக்கக்கூடாது**

அர்த்தமற்றவையாகியும். குழப்பங்களுக்கு காரணமானவர்கள் யாரும் இருந்தால் அவர்களும் கடுமையாக தண்டிக்கப்பட்டாக வேண்டும்.




தொடர்புகளுக்கு :
அரங்கம் நிறுவனம்,
227 பார் வீதி மட்டக்களப்பு.

தொலைபேசி :
070 345 68 00



# கிழக்கு தமிழ் பகுதிகளில் வறுமை

~~
பேராசிரியர் கோ. அமிர்தலிங்கம்
கொழும்புப் பல்கலைக்கழகம்.
~~





கிழக்கு மாகாண தமிழ் பிரதேசங்களில் வறுமை கூடுதலாகக் காணப்படுவதற்கான காரணங்கள் யாவை?

இலங்கையின் புள்ளிவிபரத் திணைக்களத்தின் வரைவிலக்கணத்தின்படி உத்தியோகபூர்வ வறுமைக்கோட்டுடன் மாதாந்த மெய் தலா செலவினத்தினை ஒப்பிட்டே வறுமை நிலை நிர்ணயம் செய்யப்படுகின்றது.

மாதாந்த மெய் தலா செலவினம் உத்தியோகபூர்வ வறுமைக்கோட்டை விடக் குறைவாகக் காணப்படுமிடத்து குறிப்பிட்ட தனிநபர் வறுமை நிலையில் காணப்படுவதாகக் கருதப்படுகின்றது. புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கடைசியாக வெளியிடப்பட்ட

**"போரின் பின்னர் பாதிக்கப்பட்ட தமிழ் பகுதிகள் மீது மத்திய அரசும்,மாகாண அரசும் போதிய கவனம் செலுத்தவில்லை"**

2016 ஆண்டுக்கான தரவுகளின்படி கிழக்கு மாகாணத்தில் ஆள்வீத வறுமைச் சுட்டெண் 7.3 வீதமாகக் காணப்படுகின்றது. தேசிய சராசரியான 4.1 வீதத்தினை விட இது மிகவும் அதிகமானதாகும்.

மாவட்ட ரீதியான வறுமையினை நோக்கும் போது அம்பாறையில் 2.6 வீதமாகவும் திருகோணமலையில் 10 வீதமாகவும் மட்டக்களாப்பில் 11.3 வீதமாகவும் காணப்படுகின்றது.

சனத்தொகை ரீதியாகப் பார்க்கும் போது அம்பாறையில் 17,430 பேரும் திருகோணமலையில் 39, 718 பேரும் மட்டக்களப்பில் 60, 912 பேரும் முழுவறுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது புலனாகின்றது.

இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயம் யாதெனில் தமிழ் மக்கள் அதிகமாகக் காணப்படும் பிரதேசங்கள் மிக அதிகமாக வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளன என்பதாகும். இதற்கான காரணம் யுத்தம் முடிவுற்ற போதும் யுத்தத்தனால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மீதும் தமிழ் பிரதேசங்கள் மீதும் மத்திய அரசாங்கமும் கடந்த முறை ஆட்சியிலிருந்த மாகாண சபை அரசும் உரிய முறையில் விசேட கவனம் செலுத்தத் தவறிவிட்டன என்பதாகும்.

பெண்தலைமைக் குடும்பங்கள், விவசாயிகள், மீனவர்கள் உள்ளிட்ட தொழில் புரிவோர் அனைவருக்குமான வாழ்வாதார உதவிகள், யுத்த காலங்களில் பாடசாலையை விட்டு இடை விலகியோருக்கான விசேட செயற்றிட்டங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் என்பனவற்றின் மீது யுத்தத்தின் பின்னராவது விசேட கவனம் செலுத்தி விசேட செயற்றிட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கப்படவேண்டும். அவ்வாறு விசேட கவனம் செலுத்தப்படாமையே மக்களிடையே வேலையின்மை அதிகரித்து வறுமை அதிகளவில் காணப்படுவதற்கும் வழிசமைத்துள்ளது.

அண்மையில் உலக வங்கி வெளியிட்ட அறிக்கை ஒன்றில் நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும் போது கிழக்கு மாகாணத்தில் ஊழியப்டை பங்குபற்றல் வீதம் குறைவாக உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஊழியப்படை பங்குபற்றல் வீதமானது கிழக்கு மாகாணத்தில் 44 வீதமாகக் காணப்படுகையில் தேசிய சராசரியானது 53 வீதமாகக் காணப்படுகின்றது. உலக வங்கியின் மதிப்பீட்டின்படி கிழக்கு மாகாணத்தில் ஊழியப்படை பங்குபற்றல் வீதம் குறைவாக இருப்பதற்கான மிக முக்கியமான காரணம் பெண்களின் ஊழியப்படை பங்கு பற்றல் வீதம் குறைவாக

**பொருளாதாரத்தில் பின்னடைந்தவர்களை கண்டுபிடித்து உதவ செயற்திறன் மிக்க வழிகள் தேவை"**

இருப்பதாகும். மேல்மாகாணத்தில் பெண்களின் ஊழியப்படை பங்கு பற்றல் வீதம் 37 வீதமாகக் காணப்படுகையில் கிழக்கு மாகாணத்தில்ளு 19 வீதமாகக் காணப்படுகின்றது. உலக வங்கியின் மதிப்பீட்டின் படி கல்வித்தகைமையில் காணப்படும் குறைபாடே பெண்களின் ஊழியப்படை பங்கு பற்றல் வீதம் குறைவாக இருப்பதற்கு காரணமாகக் கண்டறியப்பட்டுள்ளது. குறைந்த கல்வித்தகைமைக்கும் வேலையின்மைக்கும் நேர்க்கணியத்தொடர்பு காணப்படுகின்றது. அதேபோல் வேலையின்மைக்கும் வறுமைக்கும் நேர்க்கணியத்தொடர்பு காணப்படுகின்றது.

கிழக்கு மகாணத்தில் யுத்தத்தின் காரணமாக அதிகளவு விதவைகள் காணப்படுவதன் காரணமாக அவர்கள் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டாலேயொழிய எதிர்காலத்திலும் கிழக்கு மாகாணத்தில் வறுமையைக் குறைப்பது கடிமான இலக்காக இருக்கக்கூடும்.

வேலையின்மையால் பாதிக்கப்பட்டுள்ள இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்குவதும் முறைசார் நிதிக்கிடைப்பனவுகள் அவர்களுக்குக் கிடைக்கச் செய்வதும் வறுமையைக்குறைப்பதற்கான ஆக்கபூர்வமான வழிகளாகும். அத்துடன் யுத்தத்தினால் பாதிப்டைந்த வாழ்வாதாரத்தினைக் கட்டியெழுப்புவதற்காக விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் உரிய பயிற்சிகள் மற்றும் உதவித்திட்டங்கள் ஒரு கட்டமைப்புரீதியான பொறிமுறையின் கீழ் வழங்கப்படவேண்டும். அதைவிடுத்து வருமானம் குறைந்த குடும்பங்களை செயற்றிறனற்ற வகையில் அடையாளங்கண்டு மாதாந்தம் சிறு நிதியுதியினை வழங்குவதன் மூலம் வறுமையினை நிரந்தரமாக இல்லாதொழிக்க முடியாது.

தொடர்ச்சி...

# இன உறவை அழித்த " தீ " வன்செயலில் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு கைகொடுப்போம்

உயிரும் உணர்வும் சேதப்படுத்தப்படும் வன்முறைகள் எந்த இனத்துக்கும், எந்த தனி நபருக்கும் எதிராக மேற்கொள்ளப்படுவதை எவரும் அனுமதிக்க முடியாது.

வன்முறையில் பாதிக்கப்பட்ட அனைத்து முஸ்லிம் மக்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை நாம் கூறவிளைகிறோம். உங்கள் சோகத்தில் வருத்தத்தில் நாமும் உங்கள் உறவுகளாகக் கலக்கிறோம்.

எரிக்கப்பட்ட கடைகளும், வீடுகளும், உடமைகளும், அவ்வளவு ஏன் மத வழிபாட்டிடங்களும் இன ஐக்கியத்தில் நாம் கண்ட தோல்வியையே கோடிட்டுக் காட்டுகின்றன. ஒரு இனத்தின் அழிவில், இழப்பில் இன்னொன்று வாழ முடியாது. அனைவரும் ஒரே மனித குலம் என்ற கோட்டில் நாம் எல்லோரும் வன்முறைகளுக்கு எதிராக இணைவோம்.

பொறுப்புகள் உணரப்பட வேண்டும் அதேவேளை ஒவ்வொருவரும் நமது பொறுப்பையும் உணர்ந்து நடப்போம். வன்முறைகள் நடந்தமையை எப்படி ஏற்றுக்கொள்ள முடியாதோ, வன்முறைகளுக்கு எதிரான போராட்டங்களின் போது நடந்த பாதகமான நிகழ்வுகளையும், அவை



ஒப்பீட்டளவில் சிறிதாக இருந்தாலும் எவரும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அதுவும், தமது இனத்தவர் வன்செயலால் பாதிக்கப்பட்டதற்காக போராட்டம் நடத்திய முஸ்லிம்களும், தமது போராட்டங்களால் ஏனைய இனத்தவர் பாதிக்கப்படுவதை அனுமதிக்கக் கூடாது.

அம்பாறை மாவட்டத்தில் சில இடங்களில் நடந்த போராட்டங்களில், குறிப்பாக குறைந்தபட்சம் ஒரு தமிழர் தாக்கப்பட்டிருக்கிறார், சில இடங்களில் ஏனைய இனத்தவரின் சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றையும் நாம் கண்டித்தாக வேண்டும்.

இன உறவுகள் மேலும் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதையே இவை எடுத்துக்காட்டுகின்றன.

இன வன்செயல்களின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வந்த அனைத்து உறவுகளுக்கும் தலைசாய்ப்போம். அவர்களின் மதம், இனம் கடந்த சக வாழ்வுச் சிந்தனை வரவேற்கப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளில் பங்கேற்பதுடன், இலங்கையில் எதிர்காலத்தில் சகவாழ்வைப் பேணுவதில் "அரங்கம்" நிறுவனமும் ஏனையோருடன் கைகோர்க்க தயாராக இருக்கிறது.

இன ஐக்கியம் என்பது வெறும் வாய்ப்பேச்சோடு இருக்கக்கூடிய ஒன்றல்ல. அது விளையாட்டான வார்த்தை அல்ல. அதனை பேணுவதில் மிகுந்த சிரத்தை அவசியம்.

இன, மத பேதமற்ற இலங்கையை உருவாக்க வேண்டும். அதில் அனைத்து இனங்களின் தனித்துவமும் பேணப்படவும் வேண்டும்.

# 05 தனித்தனி நோய்களே நீரிழிவு – புதிய ஆய்வு

~~
ஜேம்ஸ் கால்லாகர்
சுகாதாரம் மற்றும் அறிவியல் செய்தியாளர், பிபிசி
~~



## நீரிழிவு நோயாளிகளின் வாழ்வை மாற்றியமைக்கவுள்ள சிகிச்சைகள்

**குழு 1 -** கடும் நோய் எதிர்ப்பு அமைப்புக்கு எதிரான இந்த நீரிழிவு, பரவலாக பாரம்பரிய வகை 1 நீரிழிவு வகையை சார்ந்ததாக உள்ளது. ஆரோக்கியமாக தோன்றுகின்ற இளம் பருவத்தில் இருப்போரை இது பாதிக்கிறது. இன்சுலினை உற்பத்தி செய்ய முடியாத நிலையை இந்த வகை நீரிழிவு ஏற்படுத்துகிறது.

**குழு 2 -** கடுமையான இன்சுலின் குறைபாடு உடைய நீரிழிவு நோயாளிகள் தொடக்கத்தில் குழு 1 போலவே தோற்றமளித்தனர். இவர்கள் இளமையாக இருந்தனர். ஆரோக்கியமான எடையை கொண்டிருந்தனர். இன்சுலின் சுரப்பதில் சிக்கல் இருந்தது. ஆனால், நோய் எதிர்ப்பு சக்தியில் எந்த குறைபாடும் இவர்களுக்கு இல்லை.

**குழு 3 -** சுரக்கப்படும் இன்சுலினுக்கு கடும் எதிர்ப்புதன்மையுடைய நீரிழிவு நோயாளிகள். இவர்கள் பொதுவாக அதிக எடையுடையவர்களாக இருந்தனர். இன்சுலின் சுரந்தது. ஆனால், சுரக்கின்ற இன்சுலினை அவர்களின் உடல் சரியாக செயல்பட அனுமதிக்கவில்லை.

**குழு 4 -** மிதமான உடல் பருமன் தொடர்பான இந்த நீரிழிவு அளவுக்கு மிஞ்சிய உடல் எடையுடையோரிடம் முக்கியமாக காணப்பட்டது. ஆனால், குழு 3-இல் உள்ளதை விட இயல்பான மிகவும் நெருக்கமானதாக இது இருக்கிறது

**குழு 5 -** நடு வயது தெடர்பான இந்த நீரிழிவு, நோயாளிகள் பிற குழுவினரை விட குறிப்பிடும்படியாக வயது அதிகமானதாக இருந்தபோது சில அறிகுறிகள் தோன்றின. இவர்களின் நோய் மிதமானதாக இருந்தது.

*"மிகவும் துல்லியமான மருந்தை நோக்கி எடுத்து வைக்கின்ற சரியான காலடிக்கு இந்த ஆய்வு மிகவும் முக்கியமானது" என்று இந்த ஆய்வாளர்களில் ஒருவரான பேராசிரியர் லெய்ஃப் குரூப் பிபிசியிடம் தெரிவித்துள்ளார்.*

*"சிறந்த நிலையில் நோயை கண்டறிய இந்த ஆய்வு பயன்படுத்தப்படுகிறது. மேம்பட்ட நல்ல சிகிச்சையை நாம் எதிர்பார்க்கிறோம்" என்று அவர் கூறியுள்ளார்.*

நீரிழிவு என்பது 5 தனித்தனி நோய்களால் உருவாகுவது என்றும் ஒவ்வொரு வடிவத்திற்கும் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இரத்தத்தில் கட்டுப்படுத்த முடியாத சீனியின் அளவு இருப்பதைதான் நீரிழிவு என்று கூறுகின்றனர். இது பொதுவாக வகை 1, வகை 2 என இரு பிரிவாக பிரிக்கப்படுகிறது.

ஆனால், நீரிழிவுக்காக மருந்து எடுத்துக்கொள்வோரின் நிலை மிகவும் சிக்கலாக இருப்பதாக ஸ்வீடன் மற்றும் பின்லாந்து ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

எதிர்காலத்தில் நீரிழிவுக்கு வழங்கப்படும் சிகிச்சை பற்றி தற்போதைய ஆய்வு அறிவித்திருக்கிறது என்று கூறுகின்ற நிபுணர்கள், தற்போது வழங்கப்படும் சிகிச்சைகளில் ஏற்படும் மாற்றங்கள் உடனடியாக நிகழப் போவதில்லை என்று கூறியுள்ளனர்.

உலக அளவில் வயதுவந்த 11 பேரில் ஒருவரை பாதிக்கின்ற நீரிழிவு, மாரடைப்பு, பக்கவாதம், பார்வை இழப்பு, சிறுநீரக செயலிழப்பு, உறுப்பு நீக்கம் ஆகியவற்றுக்கான ஆபத்துக்களை அதிகரிக்கிறது.

வகை 1 நீரிழிவு, நோய் எதிர்ப்பு அமைப்பு தொடர்புடைய நோயாகும்.

இது உடலில் இன்சுலின் சுரக்கின்ற பீட்டா செல்களை தாக்குகின்றது. எனவே, இரத்த சீனி அளவை கட்டுப்படுத்துவதற்கான ஹார்மோன் சுரக்காமல் போய்விடுகிறது.

வகை 2 நீரிழிவு மோசமான உணவு பழக்கத்தால் ஏற்படும் நோயாகும். உடலிலுள்ள கொழுப்பு இன்சுலின் செயல்படுவதை பாதிக்க செய்கிறது.

ஸ்வீடனிலுள்ள லுன்ட் பல்கலைக்கழக நீரிழிவு மையமும், பின்லாந்தின் மூலக்கூறு மருத்துவ கழகமும் இணைந்து நடத்திய இந்த ஆய்வில், 14 ஆயிரத்து 775 நோயாளிகள், அவர்களின் இரத்த பரிசோதனை விபரங்களோடு பரிசீலனை செய்யப்பட்டுள்ளனர்.

"த லான்செட் நீரிழிவு மற்றும் அகசுரப்பியல்" சஞ்சிகையில் வெளியாகியுள்ள இந்த ஆய்வின் முடிவுகள், நீரிழிவு நோயாளிகளை 5 வேறுபட்ட குழுவினராக வகைப்படுத்தி காட்டுகின்றன.

இந்த 5 குழுக்களில், இரண்டு மிதமானவற்றை விட 3 கடுமையான வடிவங்களுக்கு நாம் மிகவும் தீவிர சிகிச்சை அளிக்க முடியும்.

நோய் எதிர்ப்பு அமைப்புக்கு எதிரான நிலை இல்லாததால், குழு 2 நோயாளிகள் தற்போது இரண்டாம் வகை நீரிழிவு நோயாளிகளாக வகைப்படுத்தப்படுகின்றனர்.

இருப்பினும், அவர்கள் அதிக குண்டாக இருப்பதைவிட பீட்டா செல்களின் குறைபாட்டால் இவர்களுக்கு நோய் உருவாகியிருக்கலாம் என்று இந்த ஆய்வு பரிந்துரைக்கிறது.

இதனால், தற்போது வகை 1ஆக வரையறுக்கப்பட்டுள்ள மிதமான நோயாளிகளுக்கு கொடுக்கப்படுகின்ற நெருங்கிய அளவிலான சிகிச்சை வழங்கலாம்.

பார்வை இழப்பு ஏற்படுவதற்கு அதிக ஆபத்து நிறைந்தவர்களாக குழு 2 இருப்போர் உள்ளனர். ஆனால், குழு 3இல் இருப்போர் சிறுநீரக நோய் ஏற்படுவதற்கு அதிக ஆபத்தை எதிர்நோக்குகின்றனர். எனவே, மேம்படுத்தப்பட்ட பரிசோதனையால் இதில் சில குழுவினர் பயன்பெறலாம்.

சிறந்த வகைப்பாடு
--------------------------

லண்டனிலுள்ள இம்பீரியல் கல்லூரியின் ஆலோசகரும், சிகிச்சை ஆய்வாளருமான டாக்டர் வின்டோரியா சலேம், "முதலாம் வகை மற்றும் இரண்டாம் வகை என இரண்டும் மிகவும் துல்லியமான வகைப்படுத்தப்பட்ட அமைப்பு கிடையாது என்பதை பெருமளவு சிறப்பு நிபுணர்கள் அறிவர்" என்று கூறியுள்ளார்.

"எதிர்காலத்தில் நீரிழிவை நாம் நோயாக எவ்வாறு பார்க்கப்போகிறோம் என்பது



பற்றியது இது" என்று அவர் பிபிசியிடம் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், இந்த ஆய்வு இன்றைய நடைமுறையை உடனடியாக மாற்ற போவதில்லை என்ற எச்சரிக்கையையும் அவர் அளித்துள்ளார்.

இந்த ஆய்வு ஸ்காண்டினேவிய மக்களிடம் மட்டுமே நடத்தப்பட்ட ஆய்வாகும். தெற்கு ஆசிய மக்களிடம் நீரிழிவு அதிக ஆபத்து ஏற்படுத்துவது போன்று உலக அளவில் நீரிழிவின் பண்புகள் வேறுபடுகின்றன.

"இன்னும் அறியப்படாதவைகள் அதிகம் உள்ளன. உலக அளவில் காணப்படும் மரபணு மற்றும் உள்ளூர் சுற்றுச்சூழல் பாதிப்புக்களை பொறுத்து 500 துணை குழுக்கள் இருக்கலாம் என்று டாக்டர் சலேம் கூறியுள்ளார்.

"இந்த விஞ்ஞானிகளின் ஆய்வில் 5 குழுக்கள் பிரிக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த எண்ணிக்கை உயரலாம்" என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

வார்விக் மருத்துவ கல்லூரியின் மருத்துவ பேராசிரியர் சுதேஸ் குமார், "இது முதலாவது காலடிதான். இந்த குழுவினருக்கு வேறுபட்ட வகையில்




சிகிச்சை அளிக்கப்பட்டால் சிறந்த பயன் கிடைக்குமா என்பது பற்றியும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த நோயை புரிந்துகொள்வது ஒவ்வொரு வகையினருக்கு தனித்தனி சிகிச்சைகள் வழங்குவதற்கு உதவலாம். நீரிழிவு தொடர்பான சிக்கல்களை இந்த சிகிச்சைமுறை எதிர்காலத்தில் குறைக்கலாம் என்று பிரிட்டனின் நீரிழிவு அறக்கட்டளையை சேர்ந்த டாக்டர் எமிலி பர்ன்ஸ் தெரிவித்திருக்கிறார்.

"இந்த ஆய்வு இரண்டாவது வகை நீரிழிவை மேலும் பிரிந்து அதிக விபரங்களோடு காட்டுகின்ற நம்பதகுந்த முயற்சியை எடுத்திருக்கிறது. ஆனால், இந்த நிலையில் வாழ்கின்ற மக்களில் இது எவ்வாறு காணப்படுகிறது என்பதை புரிவதற்கு முன்னால், இந்த துணை குழுக்களை பற்றி நாம் இன்னும் அதிகம் அறிந்துகொள்ள வேண்டியுள்ளது என்று அவர் மேலும் கூறியுள்ளார்.



# "ஏ" தரம் பெற்ற மகிழடித்தீவு மருத்துவமனை

~~ படுவான் பாலகன் ~~



நாலுபேர் பேசுமளவிற்கு உருவாகியுள்ள மகிழடித்தீவு வைத்தியசாலை!

கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவு படுகொலைகளில் உயிரிழந்த பொதுமக்களின் ஞாபகர்த்தமாக அமைக்கப்பட்டிருக்கின்ற தூபிக்கு அண்மையில் நின்று கொண்டிருந்த வேளை, "ஆஸ்பத்திரி என்றா நம்பமாட்டாங்க! அந்தளவிற்கு இருக்குது' என்று இரண்டுபேர் பேசிக்கொண்டிருந்தனர். ஏன் அப்படி கூறுகின்றனர். எந்த ஆஸ்பத்திரியை கூறுகின்றனர் என்பதனை கேட்க வேண்டுமென்ற ஆவால் எனக்கேற்பட்டது.

பக்கத்தில் சென்றேன், ஏதோ ஆஸ்பத்திரியை பற்றி கதைக்கிறயல், என்ன? விளக்கம், என்று கேட்க நம்மட மகிழடித்தீவு ஆஸ்பத்திரியைப் பற்றிதான் கதைச்சிட்டு நிற்கம், ஏன்? என்னவும் பிரச்சினையா? என்று கேட்டேன். 'எப்பவும்



பிரச்சினை என்றாதான் ஆர்வமாக இந்த இளம் சந்ததி கேட்கும், அப்படி ஒரு பிரச்சினையும் இல்லை' என்று கூறிய அந்த வார்த்தை ஏதோ நல்ல விடயத்தைத்தான் பேசுகின்றார்கள் என்பதனை உணர்த்தியது.

என்ன விடயத்தினைப் பேசினீர்கள்? என்று கேட்டேன், அவ்விடத்தில் நின்ற கனகசபை கூறத்தொடங்கினான்.

மகிழடித்தீவு ஆஸ்பத்திரியை, ஆஸ்பத்திரி என்றே சொல்ல இயலாது? அந்தளவிற்கு அழகாக இருக்கிறது. வழமையாக வைத்தியசாலைகளில் வீசும் மணமும் அங்கு வீசல்ல. ஆனால், ஐந்து வருடத்திற்கு முன்பு இந்த வைத்தியசாலை இருந்த நிலைமையைப் பார்த்தா? இவ்வளவு வேகமாக வளர்ச்சியடைந்திருக்கா! என்று ஆச்சரியப்பட்டுதான் நிற்பாங்க.



"கெட்டதை மட்டுமில்ல நல்லதையும் பேசணும்"

2013க்கு முன்னர் இந்த வைத்தியசாலையில் வைத்தியரே இல்லை. உதவி வைத்தியர் ஒருவர்தான் இருந்தார். அவரும் விரும்பிய நேரத்திற்கு வருவார், சிறிது நேரத்தில் சென்றுவிடுவார். ஆனாலும் அவர்தான் அப்போ கடவுள் மாதிரி. கட்டடங்களும் பெரிதாக இல்லை. ஒன்றிரண்டு கட்டங்கள்தான் இருந்தன. அவையும் பார்ப்பதற்கு பயங்கரத்தைக் கொடுக்கும். ஆஸ்பத்திரிக்கு முன்னுக்கு இருந்த வீதியைப் பார்த்தா? கிறவல் வீதி, அதுவும் பள்ளமும், குழியுமாகத்தான் காணப்பட்டது. ஏதும் வருத்தம் என்றால், பெரும்பாலும் ஆரையம்பதி அல்லது மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்குதான் கொண்டுபோகணும், அதுவும் இப்போ இருப்பது போன்று மண்முனைப்பாலமும் அப்போ இல்லை. படகுச்சேவைதான் இருந்தது. அதுவும் நம்மட அவசரத்திற்கு வருகை தராது. போக்குவரத்து வசதியும் இல்லை நடந்துதான் மண்முனைத்துறை மட்டும் போகணும், அந்தப் பக்கம்தான் வாகனங்கள் தரித்து நிற்கும்.

இப்போ, போக்குவரத்து வசதியும் இருக்குது. மகிழடித்தீவு வைத்தியசாலையிலே நான்கு வைத்தியரும் இருக்கிறார்கள். அவசர சிகிச்சைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. ஆய்வுகூட வசதி இருக்கின்றது. தொற்றா நோய் மற்றும் ஏனைய சில நோய்களுக்கான வைத்தியபரிசோதனைக்கு, மாதாந்தம் மட்டக்களப்பு வைத்தியசாலைக்குதான், முதல் செல்ல வேண்டும். இப்பபெல்லாம் காலடிலேயே பரிசோதிக்கலாம்.



இவ்வாறு கனகசபை கூறுவதைக்கேட்க நேரடியாக பார்க்க வேண்டும், இதுபற்றி இன்னும் அறியவேண்டுமென்ற ஆவால் எனக்கேற்பட்டது. வைத்தியசாலைக்குள் நுழைந்தேன். வைத்தியசாலைக்குள் செல்லும் நுழைவாயிலின் ஓரத்தில் இயற்கைப் பொருட்களை கொண்டு அமைக்கப்பட்ட கூடாரம் அமைந்திருந்தது. வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கு செல்லும் வரை கொங்கிறீட் வீதி அமைக்கப்பட்டிருக்கின்றது. கட்டடத்திற்கு முன் பிள்ளையார் கோயில், அதற்கு முன்னுக்கு கிப்போ கிறட்டிஸ்ஸின் சிலை, வெட்டிய மரங்களின் துண்டுகளிலும், கருங்கல்லிலும் வாசகங்கள் எழுதி பதிக்கப்பட்டுள்ளது. கோயிலின் முன்புறம் பூந்தோட்டம் என பார்ப்பதற்கு அழகாகவே இருந்தன. கட்டத்தின் முன்வாயிலில் கண்ணாடியினால் செய்யப்பட்ட கதவு இடப்பட்டிருந்தது. இவற்றையெல்லாம் பார்க்கும் போது, உண்மையில் அவர்கள் கூறியதுபோன்று வைத்தியசாலை பற்றிய எண்ணப்பாடு என் மனதிலும் தோன்றவில்லை. ஒரு அலுவலகம் போன்றே இருந்தது.

படுவான்கரை என்றாலே வசதிகளற்ற, ஒரு இடமாக பார்க்கின்ற சூழல் இருக்கின்ற அதேவேளை, அபிவிருத்திகளும்

அவசர சிகிச்சைக்கு பாதைக்கு காத்திருந்த காலமும் உண்டு

படுவான்கரைப் பிரதேசத்திற்கு கிடைப்பதென்பதும் மிகவும் குறைவே என்பது இங்குள்ள மக்களின் கருத்தாகவும் இருக்கின்றது.

ஆனால், பலரின் முயற்சியின் பெயரால் பிரதேச வைத்தியசாலை "சீ" தரத்தில் இருந்த மகிழடித்தீவு வைத்தியசாலை "ஏ" தரத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக மகிழ்ச்சியோடு பக்கத்தில் நின்றயொருவர் குறிப்பிட்டார்.

படுவான்கரையில் முதலாவது தரம் உயர்த்தப்பட்ட முதலாவது வைத்தியசாலை இது வென்பதும் குறிப்பிடத்தக்கது. இதுமட்டுமா?, எங்கட வைத்தியசாலை உற்பத்தித்திறன் போட்டியில் தேசியமட்டத்தில் மூன்றாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டதாவும் ஆர்வத்தோடு கூறினார்கள். நல்லது செய்தாலும் நாலுபேர் கதைப்பர், கெட்டது செய்தாலும் நாலுபேர் கதைப்பர். மகிழடித்தீவு வைத்தியசாலையும் துரித வளர்ச்சி பெற்றுள்ளமையினால் நாலு பேர் கதைக்கின்றனர். இதைப்போல எல்லா அலுவலங்களையும் நல்லதாக நாலுபேர் கதைக்கணும்.



# ஆரையம்பதி : ஒரு அழகான திருநகர்

~~ பிரசாத் சொக்கலிங்கம் ~~



## தெருவுக்கு ஒரு கோயில் நிறைந்த ஊர்

மட்டக்களப்பு - கல்முனை நெடுஞ்சாலையில், காத்தான்குடி நகரை கடந்ததும் கம்பீரமாக நிற்கும் சுவாமி விவேகானந்தரின் உருவச்சிலை எதிர்ப்படும். தொடர்ந்து மன்னன் எல்லாளன், அரசி உலகநாச்சி என தொடர்ந்து வழிநெடுகிலும் சிலைகள் தென்படும். இவ்வாறு சிலைகளின் நகரமாக மிளிரும் பழம்பெரும் தமிழ் கிராமம்தான் ஆரையம்பதி.

காத்தான்குடியை வடக்கிலும், தாளங்குடா மற்றும் மண்முனை என்ற புராதன தமிழ் கிராமங்களை தெற்கிலும், கிழக்கில் பரந்து விரிந்த வங்கக்கடலையும், மேற்கில் மட்டக்களப்பு வாவியையும் எல்லைகளாகக் கொண்டது ஆரையம்பதி. ஈழத்தின் கீழ்த் திசையில் காணப்படும் தமிழ் கிராமங்களில் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 11 ஐ உள்ளடக்கி பரப்பளவிலும் சனத்தொகையிலும் பெரிய கிராமமாக அமைந்திருக்கிறது ஆரையம்பதி.

மட்டக்களப்பு தேச வரலாற்று மூலங்களில் முக்கியத்துவம் பெறும் மண்முனை இராட்சியம், இக்கிராமத்தை சார்ந்து அமைந்திருந்ததனால் கி.பி 3 ஆம் நூற்றாண்டுக்கும், அனுராதபுரத்தை மையப்படுத்தி ஆட்சி புரிந்த மன்னன் எல்லாளனோடு தொடர்பு படுத்தப்படுவதால் கி.மு 2 ஆம் நூற்றாண்டுக்கும் இக்கிரமத்தின் தொன்மை கொண்டு செல்லப்படுகின்றது.

கோவில்குளத்தில் கி.பி. 3 ஆம் நூற்றாண்டளவில் உலகநாச்சியாராலும், அதன் பின்னர் கி.பி.12 ஆம் நூற்றாண்டில் மாகோனாலும் சிகர கோபுரத்துடன் அமைக்கப்பட்ட காசிலிங்கேஸ்வரர் ஆலயமும், அந்த ஆலயம் போத்துக்கேயரால் அழிக்கப்பட்ட பின்னர், காசிலிங்கேஸ்வர் ஆலயத்தின் எச்சங்களையும் சிதைவுகளையும் வைத்து பெரிதாக்கபட்டதும் காத்தான் எனும் வேடுவத்தலைவன் வழிபட்ட முகூர்த்தத்தை கொண்டு உருவாக்கப்பட்டதுமான கந்தசுவாமி ஆலயமும் ஆரையம்பதியின் தொன்மைக்கு இன்னுமோர் சரித்திர சான்றாகும்.

கி.மு. 2 ஆம் நூற்றாண்டளவில், மன்னன் எல்லாளன் தனது பாதுகாப்புக்காக மட்டக்களப்பு வாவியோரங்களில் ஆற்றுக்காவல் படையினராக நிறுத்தி வைத்திருந்தவர்களில் பரம்பரையே இங்கு வாழும் பரம்பரை குடிகள் என்பது இங்கு நிலவும் ஐதீகமாகும். பின்னர் கி.பி 3 ஆம் நூற்றாண்டில் கலிங்க தேசத்தில் இருந்து வந்து மண்முனையில் ஆட்சி செய்த சிற்றரசி உலகநாச்சியுடன் வந்த சில குடிகளும், அதன் பின்னர் கி.பி 12 ஆம் நூற்றாண்டில் மாகோன் காலத்தில் வந்த சிலகுடிகளும், போர்த்துக்கேயரால் கோயில்குளத்தில் (தற்போதைய ஆரையம்பதியின் எல்லையில்)



அமைந்திருந்த காசிலிங்கேஸ்வரர் கோயில் 16 ஆம் நூற்றாண்டில் சிதைக்கப்பட்ட பின்னர் வந்த சிலகுடிகளும் எனப் பல குடிகள் இவ்வூரில் குடியேறின என்பது இக்கிராமத்தின் குடியேற்றம் பற்றிய வரலாற்றுச் செய்திகளாகும்.

கண்டி அரசன் சேரலாதன் காலத்தில் சேர நாட்டிலிருந்தும் சில குடியேற்றங்கள் இடம்பெற்றன எனவும் கூறப்படுகிறது. இவ்வாறு காலத்திற்கு காலம் ஏற்பட்ட குடியேற்றங்கள் இக்கிராமத்தின் குடிப்பரம்பலை அதிகமாக்கியுள்ளன.

ஆதியில், காலத்திற்கு காலம் கரையூர், மண்முனை, ஆலஞ்சோலை என பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டு வந்த இக்கிராமம் 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த வேடுவத் தலைவனான காத்தான் என்பவன் குடியிருந்தமையால் காத்தான்குடியிருப்பு எனும் பெயரில் அறியப்பட்டது.

1872 இல் காத்தான்குடியிருப்பில் இருவேறு பக்கங்களில் வாழ்ந்த இஸ்லாமியர்கள் மற்றும் தமிழர்கள் வாழ்ந்த பகுதிகள் நிர்வாகரீதியாக அரசால் இரண்டாக பிரிக்கப்பட்ட போது இஸ்லாமியர்கள் வாழ்ந்த வடக்கு பகுதி "காத்தான்குடி" எனவும் தமிழர்கள் வாழ்ந்த தெற்கு பகுதி ஆரைப்பற்றை எனவும் வழங்கப்படலாயிற்று.

கிராமத்தின் ஊடே ஊடறுத்து ஓடும் நீரோடைகளில் ஆரை எனப்படும் ஒரு வகை கீரை அதிகமாக வளர்ந்து காணப்பட்டதால் குறித்த ஓடைகள் அதிமாக காணப்பட்ட பகுதி "ஆரைப்பற்றைத் தெரு" என அழைக்கப்பட்டு வந்தது. "ஆரைப்பற்றைத் தெரு" என்னும் அத்தெருவின் பெயரே முழுக்கிராமத்திற்கும் பெயராக அமைந்தது.

அரசால் 1872 இல் ஆரைப்பற்றை என பெயர் பதிவேடுகளில் பதியப்பட்ட தமது ஊரை, கிராம மக்கள் ஆரையம்பதி என்றே அழைத்து வந்தனர். 1992இல் ஆரைப்பற்றை "ஆரையம்பதி" என அரசால் உத்தியோகபூர்வமாக மாற்றப்பட்டது.

பல்வேறுப்பட்ட சமூகங்கள் வாழும் ஓர் கூட்டுக்கிராமாக காணப்படும் இக்கிராமத்தில் ஒவ்வொரு சமூகமும் தனித்தனியான ஒவ்வொரு தெருக்களில் வசிக்கும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பு காணப்படுவது இதன் தொன்மைக்கு இன்னுமொரு சான்றாகின்றது.

## அழகும் புலமையும் செல்வமும் நிறைந்த மக்கள்

முகத்துவாரத் தெரு, நடுத் தெரு, ஆரைப்பற்றை தெரு என்ற தெருக்களில் குருகுலத்தோர் வாழ்கின்றனர். வேளாளர் தெரு, சாண்டார் தெரு, செங்குந்தர் தெரு, வண்ணார் தெரு, பறையர் தெரு, பொற்கொல்லர் தெரு என பல்வேறு தெருக்கள் குலப்பெயர்களில் காணப்படுகின்றன.

என்பதோடு ஆதியில் இக்கிராமத்தைச் சூழவுள்ள காட்டுப் பகுதியில் வசித்த வேடர்கள் பெயரால் சில இடங்கள் அழைக்கப்படுகின்றன வெறியன் சேனைப்பயிர் செய்துகொண்டு வாழ்ந்த இடம் " வெறியன்சேனை " சோழன் வாழ்ந்த இடம் " சோளஞ்சேனை " காங்கேயன் வாழ்ந்த இடம் காங்கேயனோடை , அலையன் வாழ்ந்த இடம் " அலையன் குளம் " , ஆனையன் வாழ்ந்த இடம் ஆனைக்குளம் எனவும் அழைக்கப்படுவது போல் துரும்பர் எனும் சமூகம் வாழ்ந்த இடம் துரும்பன் கேணி எனவும் அடைக்கப்படுகின்றது



இக்கிராமத்தின் வடமேற்கில் உள்ள முகத்துவராத் தெரு, இக்கிராமத்துள் வருவோருக்கு முகத்துவராமாக அமைந்திருந்தது. இத்தெருவில் பண்டங்கள் சேமிக்கும் கிட்டங்கிகளும் கடைக்கட்டிடங்களும் இருந்தன. பர்மா, இந்தியா போன்ற நாடுகளில் இருந்துவரும் சிறு கப்பல்கள் பொருட்களை இத்துறையில் இறக்கும் போது வரி (தீர்வை) அறவிடப்பட்டதால் இது தீர்வைத்துறை என பெயர் பெற்றது. தீர்வை அறிவிட்டப்பட்டதும் அவைகள் மாட்டுவண்டி மூலம் வேண்டிய இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் . இத்தெருவில் தனவந்தர்கள் பலரும் , நெல் வியாபாரிமாரும் , அரசாங்க உத்தியோகத்தர்களும் வாழ்ந்து வந்துள்ளனர் . மண்முனை இராசதானி வலுப்பெற்றிருந்த காலத்தில் உலகநாச்சியார் சகோதரன் உலகநாதன் இத்தெருவின் கரையோரங்களில் காவல் அமைத்து எதிரிகளை வேவுபாத்தான் என்பதும் வரலாற்று தகவல்கள்.

அறியக்கிடைத்த தகவல்களின் படி பிரித்தானியர் காலத்தில் ஆட்சிக்கு பொறுப்பாயிருந்த சோமநாத வன்னியர், சம்புநாத வன்னியர், பொன்னுசாமி வன்னியர் தொடங்கி இன்றைய காலத்தில் புனிதலிங்கம், சிவராசா, சதாகரன் என விஞ்ஞானிகள் வரை கல்விக்கு பேர்போன ஒரு கிராமமாக விளங்கும் ஆரையம்பதி, மட்டக்களப்பு தேசத்திற்கு ஓர் புலமைசார் மாந்தர்களை தந்திருக்கின்றது.

ஆரம்பத்தில் கடல்வாணிபமும் மீன்பிடியும் நெசவும் இங்கு முக்கிய தொழில்களாக காணப்பட்டது. நாவாய் ஒடம் போன்ற சிறுகப்பல்களுக்கு சொந்தக்காரர்களும், நாகப்பர், மூத்ததம்பி, கணபதிப்பிள்ளை, தனாச்சீனா, பூபாலபிள்ளை, சின்னவாத்தியார், இளையதம்பி, காசிநாத உடையார், மாரிமுத்து, அருணகிரி, வேலிப்பிள்ளை என ஏகப்பட்ட வயல்களுக்கும் நிலபுலன்களுக்கும் சொந்தமான போடியார்களும் கடந்த

தொடர்ச்சி... (பக்கம்- )





# கெவுளிமுனை

~~
பாலசுகுமார்
மேனாள் முதன்மையர்
கலை கலாசார பீடம் கிழக்குப் பல்கலைக் கழகம்
~~



மூதூரிலிருந்து சம்பூர் வழியாக சுமார் எட்டு மைல் தொலைவில் கெவுளிமுனை அமைந்துள்ளது.

மூதூர் பிரதேசத்தின் முக்கிய கேந்திர மையம் இந்த கெவுளி முனை. திருகோணமலை துறைமுகம் செல்லும் கப்பல்களுக்கு வழிகாட்டியாக, குறிகாட்டியாக இந்த முனை முக்கியம் பெறுகிறது.

கெவுளிமுனை பற்றிய செய்திகள் கோணேசர் கல் வெட்டில் காணப்படுகின்றன. மீகாமனுடனும் கோணேசர் கோயிலுடனும் தொடர்பு பட்ட செய்திகளாய் வரலாற்றில் முக்கிய புள்ளியாய் கெவுளிமுனை அமைந்திருக்கிறது.

"ஈதலுடன் ஏரண்டம் இருப்பை
புன்னைப்பருப்பு இவைகள்
இறையாத்தீவில்

சேதமற ஒப்புவிக்கச் செக்காட்டி
எண்ணெயுறத்
திருந்த ஆட்டி
ஒதரிய கெவுளிமுனை மீகாமனிடத்தில்
வரவு
வந்தே கோணை
நீதமுறு கருகுல நற்கணக்கிலுள்ளபடி
கிணற்றில்
நிறைவாய் ஊற்றல்"""

என்ற கோணேசர் கல்வெட்டின் 17ஆம் பாடல் வரிகள் கெளளி முனையின் வரலாற்றுப் பழமையை உணர்த்தி நிற்கின்றன.

சோழர் காலத்தில் திருகோணமலைக்கான பயணத்தின் ஒரு துறைமுகமாகக் கூட இது இருந்திருக்கலாம் என ஊகிக்க முடிகிறது.

மீகாமக் குடியிருப்புகள் பல இங்கிருந்திருக்க வேண்டும். காலப்போக்கில் வேறு இடங்களுக்கு குடி பெயர்ந்தாலும் இதனை அண்டிய கொடுக்கன் குளப் பகுதியில் இன வன்முறைக்கு முந்திய கால கட்டங்களில் பல குடியிருப்புகள் இதன் தொடர்ச்சியை வலியுறுத்தி நின்றன.

மூதூர் பிரதேசத்தின் முக்கிய கேந்திர மையம் இந்த கெவுளி முனை. திருகோணமலை துறைமுகம் செல்லும் கப்பல்களுக்கு வழிகாட்டியாக குறிகாட்டியாக இந்த முனை முக்கியம் பெறுகிறது. திருகோணமலை துறைமுகத்துக்குள் நுழையும் வாசலாய் இது அமைகிறது. படைக் கால ஈழ வணிகத்தின் ஒரு துறைமுகமாகக் கூட இந்த இடம் இருந்ததற்க்கான வாய்ப்புகள் நிறையவே உள்ளன.

1860 ஆம் ஆண்டு இந்த இடத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் (Vice-Admiral Harry Edmund Edgell) ஹரி எட்மண்ட் வரைந்த ஓவியம் (National Maritime Museum, Greenwich, London) லண்டன் கிரீன் விச் மியூசியத்தில் உள்ளது . இந்த ஓவியம் பல சேதிகளை சொல்கிறது. இது ஒரு துறை முகமாகமாகவும் கடற்படைத் தளமாகவும் குடியிருப்புகள் சூழ உள்ள இடமாகவும் தென்படுகிறது.

ஆங்கிலேயர் காலத்தில் 1863ம் ஆண்டு இந்த வெளிச்ச வீடு கட்டப்பட்டதாக வரலாற்றுத் தகவல்கள் சொல்கின்றன. ஆங்கிலேயர் தங்கள் கடற்படையின் ஒரு சிறு தொகுதியினரை இங்கு வைத்திருந்தனர். ஒரு கட்டிடத் தொகுதியும் அதனோடிணைந்த காவலரண்களும் இருந்தன.

சுதந்திரத்தின் பின் வெறும் வெளிச்ச வீடாகவே இவ்விடம் பயன்பட்டது. இவ்வெளிச்ச வீடு அரச பராமரிப்பாளரால் 1980கள் வரை பராமரிக்கப்பட்டது. மாலை ஆறு மணிக்கு ஏற்றப் படும் வெளிச்சம் காலை ஆறு மணிக்கு அணைக்கப்படும். இங்கிருந்து பாயும் ஒளி வெருகல் வரை பரந்து ஒளி பரப்பியமை ஒரு காலம்.

இந்த கடற்கரை விசேசித்த பண்பு வாய்ந்தது. கடல் தாவரங்கள் இங்கு உயிருடன்



காட்சியளிப்பது அதிசயம். கடற்கரை பளிங்குப் பாறைகளாய், பவளப் பாறைகள் கூட்டம் கூட்டமாக வெளித்தெரியும் அழகும் கிழக்காக நீண்டு செல்லும் அழகிய கடற்கரையும் மேற்கில் கடல் அருகில் உயர்ந்து நிற்கும் சிறு குன்றும் அழகின் சிரிப்பாய் எப்போதும்.

கடற்கரையில் விரிந்திருக்கும் மணல் வெளி பளபளப்புடனான பளிங்கு காட்சியாய் சூரிய ஒளியில் மின்னிடும் அழகும் தனித்துவமானதுதான்

அபூர்வமான மீன் வகைகளுக்கும் இறால் வகைகளுக்கும் இந்த இடம் பேர் போனது.

இங்கிருந்து பார்த்தால் கோணேசர் மலையும் கோயிலும் நமக்கு திருஞானசம்பந்தர் தேவாரமான குரைகடலோதும் நித்திலம் கொலிக்கும் என்ற வரிகள் வரலாற்று நினைவை நம்முள் இருத்தும்.

பவளப் பாறைகள் காய்ந்த பின் அவை சல்லி என அழைக்கப்படும். முன்னைய காலங்களில் இந்த சல்லிக் கற்களை சூழை வைத்து சுட்டு அதில் வரும் சுண்ணாம்பு கொண்டே வீடுகளை கட்டும் ஒரு மரபு மூதூர் கிழக்குப் பிரதேசமெங்கும் பிரபலமாய் இருந்தது. நம் பாரம்பரிய கட்டிட முறைக்கு துணையாய் இங்கு எடுக்கப்படும் சல்லிக்கற்கள் பயன்பட்டன. பலருக்கு வாழ்வாதாரமாகவும் இது அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

யுத்த காலத்தில் முப்படைகளின் கூட்டு முகாம்கள் இங்கிருந்தன இன்று பொது மக்கள் போய் வரக் கூடிய நிலமை காணப்படுகிறது.

இப் பிரதேசத்தின் அழகிய சுற்றுலா தலமும் இதுதான்.

அரங்கம்
அரங்கம்
உங்கள் விளம்பரங்களை அரங்கம்
இணைய வானொலி மற்றும் செய்தித்தாளில்
பதிவு செய்து கொள்ள
070 300 900 1 065 222 911 2







# அது என்ன மினி சூறாவளி?

பவித்திரன் மணிசேகரன்

பெரியநீலாவணையை அண்மையில் மினி சூறாவளி தாக்கியது என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. அது என்ன மினி சூறாவளி என்ற கேள்வி பலர் மனதில் எழுந்திருக்கக்கூடும்.

பெரியநீலாவணையை தாக்கியது சூறாவளியும் அல்ல டொனேர்டோவும் அல்ல. நாம் நமது கிழக்கு வரலாற்றில் கண்ட பாரதுரமான வாயுபகவானின் அகோர செயற்பாடாக 1978ஆம் ஆண்டு சூறாவளியையே கருதுகின்றோம். அதனால் ஏற்பட்ட இழப்புகளோ பாரதூரமானவை.
அவற்றை மீண்டும் சிந்திப்பதற்கான தருணத்தை ஏற்படுத்தி தந்த ஒரு சிறிய நிகழ்வாக பெரிய நீலாவணையில் ஏற்பட்ட அனர்த்தத்தை கருதலாம்.



### சுழற்காற்று

மின்னலையும், இடியையும் தோற்றுவிக்கக்கூடிய முகிலொன்றின் உட்பகுதியிலிருந்து தொடங்கி நிலமட்டம் வரை நீட்சியடைந்த, கடும் வேகத்துடன் சுழல்கின்ற வளிநிரலே சுழற்காற்று (Tornado) ஆகும். இந்தச் சுழற்காற்று சிறிய அளவிலான சூறாவளியாகும்.

**காற்றின் தாக்கம் குறித்த அறிவு மேலும் அதிகரிக்க வேண்டும்**




கடும் இடி, மின்னல், புயல்கள் ஏற்படும் போதே டொர்னாடோக்கள் உருவாகின்றன. இவை சூறாவளியிலும் பார்க்க பயங்கரமானவை. இவை குறுகிய நேரத்தில் குறுகிய இடத்தில் பாரிய அழிவை ஏற்படுத்தக்கூடியன. இவை அநேகமாக அன்டார்டிக்கா கண்டம் தவிர்த்து அனைத்து கண்டங்களில் உள்ள நாடுகளிலும் வீசுகின்றன.

உலகில் ஆண்டுதோறும் அதிக எண்ணிக்கையான சுழற்காற்றுக்கள் தோன்றும் நாடு ஐக்கிய அமெரிக்காவாகும். இரண்டாவதாக ஆஸ்திரேலியா உள்ளது. இவை தவிர சீனா, இந்தியா, ரஸ்யா, இங்கிலாந்து, ஜெர்மனி, வங்கதேசம் உட்பட பல நாடுகள் சுழற்காற்றுத் தாக்குதலுக்கு உட்படுகின்றன. இலங்கையில் கூட பல தடவைகள் டொனேர்டோ ஏற்பட்டுள்ளது இருந்தும் பாரியளவிலான சேதம் ஏற்படவில்லை.

### சூறாவளி

சூறாவளி, பூமியைப்போல் ஒரே திசையில் சுற்றும் அடர்த்தியான, உருண்டையான, நிலையற்ற இயக்கத்தைக் கொண்ட பரப்பு என்று வானிலையியல் கூறுகிறது.





**சூறாவளி, சுழற்காற்று எல்லாம் வேறு வேறானவை**

வானிலை அதிகாரி சூரியகுமார் அவரிடம் மேலதிகமாக வினவிய போது, சுறாவளி பாரிய கடற்பரப்பில் உருவாகும் எனவும் அவை உருவானதும் அறிந்துகொள்ளலாம் மற்றும் இச்செயற்பாடு குறித்த சிலதினங்களுக்கு தொடருமெனவும் தெரிவித்தார். மேலும் பெரியநீலாவனையில் வீசியது சூறாவளி இல்லை என்றும் உறுதிப்படுத்தினார்.


பெரியநீலாவணை மக்களின் கருத்தின்படி குறுகிய நேரத்தில் வீசிய காற்றின் காரணமாகவே பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. முக்கியமாக பல வீடுகளின் கூரைகள் சேதமடைந்துள்ளன. அத்துடன் இது சூறாவளியாக இருந்திருந்தால் அதனை முன்னரே அறிந்திருக்கலாம்.

டொனேர்டோ போன்ற சுழற்காற்றுகள் எந்த இடத்தில் எப்போது தோன்றுமென்றே யூகிக்க முடியாதவை.
1978ம் ஆண்டு முன்னதாகவே சூறாவளி அறியப்படாமைக்கு காரணம் அந்த காலத்தில் நாம் அவ்வளவாக தொழிநுட்ப ரீதியாக முன்னேறியிருக்கவில்லை. விடுக்கப்பட்ட அறிவிப்பை பெரிதுபடுத்தவில்லை.
அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இயக்குனரிடம் கேட்டபோது, பெரியநீலாவணையில் வீசியது சுழல் காற்றை ஒத்த Highwind என்று கூறினார். மேலும் அதற்கான சரியான தமிழ் பதம் அறியப்படவில்லை. இதுபற்றிய விழிப்புணர்வு மக்களிடம் இல்லாதனாலேயே அனைவரும் மினிசூறாவளி என தெரிவித்தனர். மேலும் இவர்களுக்கான விழிப்புணர்வை எதிர்வரும் நாட்களில் முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஒன்று நடந்த பின்பே அதனைப்பற்றி ஆராய்வதே நம்மவர் வழக்கம். இளைஞர்களான நாம் இணையத்தில் எப்போதும் உள்ளோம் அந்த நேரத்தில் இது போன்ற புது விடயங்களை அறிய முயற்சித்தால் எதிர்காலத்தில் அவை பயனுள்ளவையாக மாறக்கூடும்.




சின்னக் குழந்தைகளையும் அரங்கம் இப்போது கவரத்தொடங்கியுள்ளது. அக்ஷயன் என்ற இரண்டாம் வகுப்பு மாணவன் வரைந்த அரங்கம் பத்திரிகையின் படம் இது. இனி இவர்களுக்காக தனியாக சிறுவர் மலர்களை நாம் தயாரித்தாக வேண்டும்.











# டேய்! கண்டியை எப்படா ஆங்கிலேயர் கைப்பற்றினார்கள்?

~~சஞ்சயன் செல்வமாணிக்கம்~~




சம்பவத்தின் பெயர்: டேய்! கண்டியை எப்படா ஆங்கிலேயர் கைப்பற்றினார்கள்?
கதாநாயகன்: சர்மா சேர் என்று அழைக்கப்பட்ட ஈஸ்வரசர்மா சேர்.
வில்லன்கள்: 7ட அல்லது 8ட படித்துக் கொண்டிருந்த நானும் எனது வகுப்பு அறிவுக் கொழுந்துகளும்.
இடம்: மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி.
காலம்: 1977 அல்லது 1978 இல் ஒரு நாள். நேரம்: மதியமிருக்கும்.

வெய்யிலில் நொண்டிப் பிடித்து விளையாடி, பாடசாலை மணியடித்தபோது வகுப்புக்குள் வேர்த்து வழிந்தபடியே ஓடிவந்து உட்கார்ந்து, நேர அட்டவணையைப் பார்த்து "ஐயோ! சமூகக்கல்வி. கிழிஞ்சுதுடா டோய். சர்மாசேரின்ட பாடம்டா" என்றார் எனது நண்பர் புரொபசர் அமீர் அலி.

"சர்மா சேர்" இந்த பெயர் போதும், எங்கள் பாடசாலையில் இருந்த அனைவரின் வயிற்றையும் கலக்குவதற்கு. வகுப்பின் மொனிட்டர் "பொன்ஸ்" (பொன்னையா) யார், யார் கதைக்கிறார்கள் என்று சர்மாசேரிடம் போட்டுக் கொடுப்பதற்காக லிஸ்ட் எழுதிக் கொண்டிருந்தான். எங்கள் பெயர் தினமும் அவனது லிஸ்டில் இருப்பதால் நாங்கள் (அமீர் அலி, ராஜேந்திரன், நான்) அவனைக் கண்டுகொள்வதில்லை.

எமக்கு முன்னால் உட்கார்ந்திருந்த வேணன், பொன்ஸை நோக்கி "கொன்னை (பொன்னையாவுக்குக் கொஞ்சம் திக்குவாய் இருந்தது) என்ர பெயர எழுதினால் பிரச்சனை வரும்" என்று அன்பாக வெருட்டிக் கொண்டிருக்கும்போது வகுப்புவாசலில் நின்றிருந்த உருவத்தைக் கண்டதும் அமைதியாயிற்று வகுப்பு.

"Good Afternoon Sir!" என்று எழுந்து நின்று ஒரு கோரஸ் ஆக நாங்க பாடி முடித்தபோது

"சரி, சரி இருங்கோடா" என்றார் சர்மா சேர், மட்டக்களப்பு வியர்வையின் எரிச்சலில்.

"பொன்ஸ்" இடமிருந்து லிஸ்டை வாங்கிப் பார்த்தவர்

"வேறு யாரின் பெயர் இதில் இருக்கும்" என்று தலையாட்டியபடியே எம்மை எட்டிப் பார்த்தார். நாங்கள் ஏதும் நடவாதது போல முகத்தை வைத்துக் கொண்டிருக்க, "கொஞ்சம் பொறுங்கோடா, வந்து தாறன்" என்றார் சுத்தமான யாழ்ப்பாணத்து தமிழில்.

"சரி, கொப்பிய எடுங்கோடா" என்றவர் ஏதோ திடீர் என்று ஞாபகம் வந்தது போல "வேண்டாம் வைய்யுங்கோ" என்றார்.

சற்றே யோசித்தவர், "டேய் கண்டிய எப்படா ஆங்கிலேயர்கள் கைப்பற்றினார்கள் என்று சொல்லுங்கோ" என்றார்.

மற்றைய நேரங்களில் ----க்கு முந்திய --- மாதிரி சேர் கேள்வி கேட்கும் முன்பே பதில் சொல்லும் முதல் வரிசையில் அமர்ந்திருக்கும் அறிவாளிகள் கூட அமைதியாக இருந்தனர் அன்று.

"என்ன, நான் சொன்னது கேக்கேல்லியோடா" என்றார் கொஞ்சம் கடுமை கலந்து குரலின் வொலியூமை கணிசமான அளவு அதிகரித்து.

கரண்ட் இல்லாத ஸ்பீக்கர் கடை ஸ்பீக்கர் போன்று சத்தமே வரவில்லை வகுப்பிலிருந்து.

கதிரையிலிருந்து எழும்பி, மேசைக்கு முன்னால் வந்து நின்று, மேசையில் இரு கைகளையும் ஊன்றி, எம்பி மேசையில் ஏறி இருந்தார். கால்கள் மேசையின் கீழே ஆடிக் கொண்டிருந்தன. பிரம்பைத் தன் கையில் தட்டியபடி, தலையையும் காலின் ஆட்டத்துக்கு ஏற்றவாறு ஆட்டியபடியே வகுப்பை ஒரு நோட்டம் விட்டார்.

இப்போது நான் உங்களுக்கு எங்கள் வகுப்பை பற்றி சொல்லவேண்டும். நாங்கள் ஏறத்தாழ 32 பேர், 4 வரிசைகள். ஆகவே, ஒரு வரிசையில் 8 அறிவாளிகள். முன்வரிசையில் முக்கிய அறிவாளிகள் குந்தியிருப்பார்கள்.

முன்வரிசையின் ஆரம்பத்தில் இருந்தவர்களைப் பிரம்பால் காட்டி, புருவத்தை மேலே உயர்த்தி "நீ சொல்" என்றார் வாயைத் திறக்காமலே.

வழமையாகவும் சேர் இப்படித்தான் கேள்வி கேட்பார். முன் வரிசையில் இருக்கும் அறிவுக் கொழுந்துகள் பதில் சொல்லி எங்களைக் காப்பாற்றிவிடுவார்கள்.

சேர் எங்களையும் அவ்வப்போது கேள்வி கேட்பார். ஆனால் பதிலை அவரேதான் சொல்லவேண்டியிருக்கும். ("எங்களுக்கு பதில் தெரியுமா என்ன? நாங்கள் படிப்பதற்காகத்தானே வந்திருக்கிறோம், சேருக்கு தானே பதில் தெரியவேண்டும்" என்கிற புரட்சியாளர்கள் நாங்கள்). இடையிடையே... இல்லை இல்லை, அடிக்கடி அடிவிழும், அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா என்பது போல நாங்களும் சேரோடு கோவிப்பதில்லை.

இம்முறை சேர் கேட்ட கேள்வி முன்வரிசை அறிவாளிகளையும் ஆட்டிப் போட்டது என்றால் எங்கள் நிலையைச் சொல்லவா வேண்டும்?

நண்பர் புரொபசர் அமீர் அலி, மேசைக்கு கீழ் தனது கொப்பியை பிரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். அவனப் பார்க்க எனக்குப் பாவமாயிருந்தது.

ஏனென்றால், எனக்குத் தெரியும் அந்தக் கொப்பியில் அவன் என்ன எழுதியிருப்பான் என்று. எம்.ஜி. ஆர் வாழ்க, சிவாஜி ஒழிக,ஏதாவது ஒரு சினிமாப்பாட்டு (அன்பு மலர்களே, நாளை நமதே படப் பாட்டு) மற்றும் பாத்திமா. இதைவிட அரபி மொழியில் ஏதோ எழுதியிருப்பான்.

அதுவும் பாத்திமா ஐ லவ் யூ என்பதாகத் தான் இருக்கும். அது அவன் பில்ட் அப் கொடுப்பதற்காக வைத்திருக்கும் கொப்பி, அதில் எங்கே கண்டியப் பற்றி இருக்கப்போகிறது?

சர்மாசேரின் மீதான பயத்தில் பொடியனுக்கு தான் கொப்பியில் என்ன எழுதினேன் என்பதே மறந்துபோனதில் ஆச்சர்யம் எதுவுமில்லை.

இதற்கிடையில் சர்மா சேர் "நீங்க சொல்லுங்கோ, நீங்க சொல்லுங்கோ" என்று குசும்பும், நக்கலும் கலந்து, பூனை தன்னிடம் அகப்பட்ட எலியின் உயிருடன் விளையாடுவது போன்று பலரின் உயிருடனும் விளையாடிக்கொண்டிருந்தார்.

இன்று மட்டக்களப்பு வெள்ளைப்பாலத்திலத்தடியில் உட்கார்ந்திருக்கும் சாத்திரியாரிடம் நாம் சாத்திரம் கேட்டிருந்தால், இன்று வகுப்பில் உள்ள எல்லோருக்கும் ஏழரைச்சனி உச்சத்தில் என்பதால், "இண்டைக்கு பள்ளிக்கு போகாத மனே" என்றிருப்பார் அந்தச் சாத்திரியார்.

"அப்ப, உங்களுக்கு உந்தக் கேள்விக்கு பதில் தெரியாது, என்ன?" என்றார் மீண்டும் சுத்த யாழ்ப்பாணத் தமிழில்.

சாதாரண நேரமாயிருந்தால் அமீர் அலி, உந்த, குந்த என்று யாழ்ப்பாணத் தமிழை நக்கல் பண்ணியிருப்பான், ஆனால் பெரும்புயலை எதிர்கொண்டிருக்கும் இந்த நிலையில் அவனுக்கு நக்கலடிப்பதைப் பற்றி சிந்திக்கவே நேரமிருக்கவில்லை.

சர்மா சேரின், கேள்வி என்னிடம் வருவதற்கு முன் இன்னும் 22 மாணவர்கள் இருந்தமை எனக்கு ஒரு வித மோரல் சப்போட் (moral support) ஆக இருந்தாலும், மனதுக்குள் ஒரு சின்னப்பயம் இருக்கத்தான் செய்தது. ஆனால் கிறிக்கற்றில் நன்றாக துடுப்பெடுத்தாடுபவர்கள் ஆட்டமிழந்தால் எப்படியிருக்குமோ அப்படியிருந்தது வகுப்பின் நிலை. பதில் சொல்லக் கூடியவர்கள் அவுட்டாகி விட்டார்கள், இனி இருப்பதை நம்பிப் பயனில்லை என்ற நிலை.

இந்த மனிதரிடம் இன்று அகப்பட்டால், இன்று வகுப்பு தொடங்குவதற்குமுன் கதைத்ததுக்கும், நேற்று வீட்டுப்பாடம் செய்யாததற்கும், இந்தக் கேள்விக்கு பதில் சொல்லாததற்கும் சேர்த்து தோலை உரிப்பாரே என்று மனம் கணக்குப் போட்டது. தப்புவதற்கு வழிதேடிக் கொண்டிருந்தேன்.

திடீர் என்று மூன்றாம் வரிசையில் உட்கார்ந்திருந்த வேணன் "சேர்" என்றான்.

மெதுவாய் திரும்பி, என்ன என்பதை வாய் திறக்காமல் கண்ணால் கேட்டார். (மனிதரிடம் ஒருவிதமான அழகான ஸ்டைலும் இருந்தது அந்நாட்களில். 1977, 1978 இல் அவர் புது மாப்பிள்ளையும் கூட. அவரிடம் ஒரு நடிகருக்கான அழகும் இருந்தது).

வேணண், சர்மாசேரிடம் "ஒண்டுக்கு போக வேணும் சேர் " என்றான். ஆஹா, எப்படியெல்லாம் சிந்திக்கிறார்கள் என்று நான் யோசிக்கும்போதே, சர்மாசேர்..

"ஓ அப்பிடியே, அடக்கேலாம இருக்குமே" என்கிறார், "ஓம்" என்பது போன்று தலையை ஆட்டுகிறான் வேணன்.

"பறவாயில்ல, உதிலயே போ" என்றார் சர்மாசேர்.

எனக்கு வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டேன். வேணனிடம் "டேய், எங்களாலேயே இந்த மனிசனை ஏமாத்தமுடியாது இருக்கும்போது, நீ ஏன்டா வாயத் திறக்கிறாய்" என்று கூற ஆசைப்பட்டாலும், அடக்கிக் கொண்டேன். இப்போது இரண்டாவது வரிசையையும் எழுப்பி விட்டிருந்தார் சர்மா சேர்.

அன்பு ஒழுக, "பொன்னையா! இங்க வாங்கோ" என்றார், சர்மாசேர். அருகில் வந்த மொனிட்டர் பொன்னையாவைப் பார்த்து "போய் 3 நல்ல பிரம்பு எடுத்திட்டு வா" என்றார்.



ஏனைய நாட்களில் இப்படியான வேலைகளுக்கு துள்ளிக் குதித்து ஓடுபவன் பொன்னையா. ஆனால் இன்று மட்டும் விருப்பமில்லாமலே கடமையைச் செய்யப் புறப்பட்டான். காரணம் அவனும் ஏற்கனவே எழும்பி நிற்கும் அறிவாளிகளில் ஒருவனாய் இருந்ததே.

"டேய்! எத்தின தரமடா உங்களுக்கு சொல்லுறது படிக்க ஏலாட்டி மாடுமேக்க போங்கோடா எண்டு" என்றார் சர்மாசேர்.

"வீட்ட விடுறாங்க இல்ல சேர்" என்று சொல்வோமா என்று யோசித்தேன் என்றாலும் இதையும் அடக்கிக் கொண்டேன். இப்போது சேர், மூன்றாவது வரிசையையும் கேட்டுப் பார்த்தார்.

அதில ஒருவன் "சேர் 1935 " என்றான் (எனக்கே அது பிழை என்று தெரிந்திருந்தது). "டேய்! நான் என்ன உன்ர கொப்பர் பிறந்த ஆண்டையே கேட்டனான்" என்றார் சர்மாசேர் மகா எரிச்சலுடன். குசும்பும், நக்கலும் அவருக்கு கைவந்த கலை. அதைவைத்தே மனிதர் எங்களை குற்றுயிராக்கியிருக்கிறார் பலதடவைகள். இன்றும் அதுவே நடந்துகொண்டிருந்தது.

பிரம்பெடுக்கச் சென்ற பொன்னையா ஒன்றுக்கும் உதவாத 3 பிரம்புகளைக் கொண்டுவந்தான், "டேய் பொன்னய்யா இங்க வா" என்றார். கொன்னையும், பயமும் ஒன்றாய்ச் சேர்ந்ததால் 10 தடவைகள் சே.. சே.. சே.. போட்டுக் கடைசியாய் "ர்" போட்டான் பொன்னையா.

அதுவரைப் பொறுமையாய் இருந்த சர்மாசேர், "டேய் நீ என்ன ஏமாத்ததேலாது, கையை நீட்டு என்றார்" அவனைப் பார்த்து. அவன் கொணர்ந்த பிரம்பால் அவனுக்கே 2-3 போடு போட்டார், "போய் கெதியா நல்ல பிரம்புகளை கொண்டு வா, இல்லாட்டித் தெரியும் தானே" என்றார்.

வழமையாக நாங்கள் அடிவாங்குவதற்காக பெரிய எடுப்பு எடுத்துக்கொடுக்கும் பொன்னையா கையை உதறி உதறிப் போவதைப் பார்த்தபோது சந்தோசமாக இருந்தது எங்களுக்கு. நாம் ஆளையாள் பார்த்துச் சிரித்துக்கொண்டோம்.

அந்த நேரம் அருகில் இருந்த வகுப்பில் கற்பித்த மோசஸ் டீச்சர் சர்மாசேரிடம் எதையோ கேட்பதற்கு வந்தார். சேர் டீச்சருடன் கதைக்கத்தொடங்கினார்.

இது தான் சமயம் என்று சில அறிவுக் கொழுந்துகள் டிஸ்கஷன் நடத்தினார்கள்.

"டேய் 1700 டா" என்றான் ஒருவன். ",ல்லடா 1800க்கு பிறகு" என்றான் மற்றவன். ",ல்ல 1600 ஆ இருக்குமோ" என்று முதலாமவன் சொல்ல, "அது ஒல்லாந்தர்டா" என்றான் இன்னொருவன்.

"டேய்! ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் ஒண்டுடா மடையா" என்றான் வேணண். (சர்மாசேர் அதைக் கேட்டிருந்தால் கொலையே செய்திருப்பார் அவனை).

டீச்சர் வந்த வேலை முடிந்து போனதும், "டேய் நான் டீச்சருடன் கதைக்கேக்க உதுக்குள்ள இருந்து கதைத்தவங்களெல்லாம் முன்னுக்கு வாரீங்களோடா" என்றார் மிகுந்த மரியாதையுடன். பலியிடப் போகும் ஆட்டுக்கு மரியாதை செய்வது போல இருந்தது அது.

ஒருவரும் முன்னே செல்லவில்லை

"டேய்! பேர் சொல்லி கூப்பிடோனுமோடா உங்கள? கெதில முன்னுக்கு வாங்கோ" என்றார் கடுங் குரலில். 3 பலியாடுகள் முன்னோக்கி நகர்ந்தன. "வேடா, நீயும் வா" என்றார் வேணனின் பட்டப்பெயரைக் கூறியபடியே. வேணனுக்கு தலைசுற்றத் தொடங்கியிருந்தது.

பெயர் கூறி அழைத்தபின்பும், நகராது நிற்பது தற்கொலைக்கு சமம் என்பது வேணனுக்கு தெரிந்ததால் அவனும் முன்னால் சென்றான். "முழங்கால்ல இருங்கோடா" என்று கட்டளை வந்தது, சமூகக்கல்விச் சக்கரவர்த்தியிடமிருந்து, சக்கரவர்த்தியின் முன் மண்டியிட்டார்கள் நால்வரும்.

இந்த ராகு காலத்தில் (நேரத்தில்) பிரம்பு தேடச் சென்ற பொன்னையா 3 நீண்ட பச்சைப் பிரம்புகளை கொண்டு வந்து மேசையில் வைத்தான்.

பிரம்புகளை ஒரு தரம் காற்றில் விசிறிப் பார்த்து தரக்கட்டுப்பாடு செய்து பார்த்துத் திருப்திப்பட்டுக் கொண்டார் சர்மா சேர்.

திடீர் என மூன்று பிரம்பையும் ஒன்றாகப் பிடித்து வேணனின் இடுப்புக்குக் கீழே ஆனால் பின்னந் துடைக்கு மேலே உள்ள சதைப்பிடிப்பான பகுதியை நோக்கி அவர் பிரம்பை இறக்கவும் வேணண் "சேர் சேர் நோகுது நோகுது" என்று எழும்பி நின்று கத்தவும் சரியாய் இருந்தது. "டேய், நோகுறத்துக்குத்தான் அடிக்கிறன், அது சரி, உன்னை எழும்பச் சொன்னநானே இப்ப" என்று கேட்டு அவனை மீண்டும் மண்டியிட வைத்தார்.

அடுத்தது எங்கள் வரிசை மட்டுமே பாக்கியிருந்தது. அருகில் வந்தவர் "அட, நீங்கள் மும் மூர்த்திகள் மூன்று பேருமோ மிச்சமிருக்கிறீங்கள்" என்றார். அவரின் குரலில் 110 வீதம் நக்கல் கலந்திருந்தது. "உன்ர கொப்பர் போலீஸ், அம்மா ஒரு டொக்டர் மகன் கடைசிவரிசையில குந்தியிருக்கிற ஒரு குரங்கு" என்றார் என்னைப் பார்த்து. எனக்குத் நாக்கும் தொண்டையும் வறண்டது. காதுக்குள் ஏதோ செய்தது. கண்கள் இருட்டிக் கொண்டு வந்தன. நான் தற்கொலைக்கு முயற்சித்துக் கொண்டிருந்தேன். கையில் சையனைட் குப்பி இருந்திருந்தால் சத்தியமாக கடித்திருப்பேன். என் இதயம் வெளியில் வந்து விழவா என கேட்டுக் கொண்டிருந்தது.

அமைதியாய் தலைகுனிந்தபடியே நின்றிருந்தேன்.

"உனக்கு வெக்கமில்லையே என்றார்?" "சேர் அப்படி என்றால் என்ன" என்று கேட்க நினைத்தாலும் வார்த்தைகள் வெளியே வரமறுத்தன

சர்மா சேர், புரொபசர் அமீர் அலியிடம் சென்றார்.

"அய்யா நீங்களோ" என்றார் அமீர் அலியைப் பார்த்து, பயங்கர நக்கலாய்.

கடைக்கண்ணால் பார்த்தேன் எங்களின் 'தலைவர் அமீர் அலி' தலைகுனிந்து நின்றிருந்தார் "டேய்! கண்டியை எப்படா ஆங்கிலேயர் கைப்பற்றினார்கள்?" என்றார் அவனிடம்.

இப்படிப்பட்ட கேள்வியை அவனிடம் கேட்காது, எந்த ஊரில், எந்த தியட்டரில், என்ன படம், எத்தன மணிக்கு எப்ப ஓடுகிறது என்பதைக் கேட்டிருந்தால் வீரகேசரி பத்திரிகையின் கடைசிக்கு முன் பக்கத்தைப் பாக்காமலே சொல்லக் கூடிய திறமை அவனிடம் இருந்தது. வாழைச்சேனை, ஏறாவூர், மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி வரை இருந்த அனைத்து திரையரங்குகளும் அவனுக்கு அத்துப்படியாய் இருந்த பொற்காலம் அது.

அவனிடம் இருக்கும் அறிவுக்கு ஏற்ற கேள்வி கேக்காதது சர்மா சேரின் தவறா அல்லது அவனின் துரதிஸ்டமா என்பது தெரியவில்லை.

அடுத்தது ராஜேந்திரன். "அட சோழச் சக்கரவர்த்தி! நீங்களாவது சொல்லுங்கோ" என்றார் அவனைப் பார்த்து. அவனுக்கு ஒரு சக்கரவர்த்தியின் பெயரை வைக்காமலே இருந்திருக்கலாம் அவனின் அப்பா. அவன் குனிந்த தலை நிமிரவில்லை.

இப்பொழுது முழு வகுப்பும் எழும்பி நிற்கிறது..

சர்மாசோரின் வெள்ளை நிற முகம் சிவந்திருக்கிறது. ஏமாற்றம் தந்த கடும் கோபத்தினாலும், தான் கற்பித்ததை மாணவர்கள் ஞாபகம் வைத்திருக்கவில்லை என்பதாலும், கஸ்டப்பட்டுக் கற்றுக் கொடுத்ததை நாங்கள் கற்காமல் உதாசீனப்படுத்திவிட்டோம் என்பதும் அவரை அதிகமாக பாதித்திருந்தது என நினைக்கிறேன்.

அந்த ஏமாற்றம் அவரைக் கடுங்கோபம் கொள்ளச்செய்தது. மனிதம் நிரம்பிய எந்தவொரு ஆசிரியருக்கும் வரவேண்டிய நியாயமான கோபம் தான் அது. அது அன்று புரியவில்லை, இன்று நன்கு புரிகிறது.

தனது ஏமாற்றத்தையும், துக்கத்தையும் கலந்து கோபம் அதிகம்சேர்த்து அடி அடி என அடித்தார். அன்று கிடைத்த அடி வாழ்க்கை முழுக்க மறக்காது.

பாவம் பெடியள்! மோட்டுத்தனமாக அடித்துப்போட்டேன் என்று சுயர்விமர்சனம் செய்து கொண்டாரோ என்னவோ தெரியாது, அது தான் சர்மா சேர் கடைசியாகப் பயங்கரமாக அடித்தது. அதன் பின்பும் அடித்திருக்கிறார் ஆனால் அவை அந்த ஒரு நாளைப் போல பயங்கரமானவை அல்ல.

சர்மாசேர் பற்றிய சில குறிப்புகள்:

மெதடிஸ்ற் மத்திய கல்லூரியின் பேரன்பு மிக்க ஆசான்களில் முக்கியமானவர். 1976 அல்லது 1977 தொடக்கம் 2006- 2007 வரை மட்டக்களப்பு மத்திய கல்லூரிக்காக தன்னையே தந்த ஆசான்.

பிரபல கிறீஸ்தவ பாடசாலை எனினும் சைவசமய நிகழ்வுகள் அதிகளவில் மிகச் சிறப்பாக நடைபெற இவரே காரணம். சரஸ்வதிப் பூசை என்றால் அவர் தான் சக்ரவர்த்தி. வேட்டியுடன் உலா வருவார். இரவிரவாக திட்டமிட்டு, கட்டளையிட்டு அடுத்த நாள் எல்லாம் முடியும் வரை ஓயாமல் ஓடிக் கொண்டிருப்பார். வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு புக்கை கிண்டவும் செய்வார். சொல்லச் சொல்ல இனிக்குதடா முருகா என்ற பாட்டு சர்மாசேருக்கு மிகவிருப்பமான பாடல்.

எங்கள் Holtom இல்லத்தின் தலைமை ஆசிரியரும் அவர் தான். அருகில் வந்து வந்து, ரகசியமாய் "டேய் தோக்கப்படாதுடா என்ன" என்பார், அடிக்கடி.

இவரின் அடிக்குப் பயந்து நான் மட்டக்களப்பு "ஆனைப்பந்திக் கோயில் பிள்ளையாரப்பா இந்த மனிசனை மட்டும் வேற பள்ளிக்கூடம் மாத்து" என்று 25 சதத்துக்கு நேத்தி வைத்திருந்தேன். அதை விட ஒவ்வொரு வெள்ளியும் 5 சதம் உண்டியலில் போட்டேன். ஆனைப்பந்திப் பிள்ளையார் லஞ்சம் வாங்கினாரே தவிர உதவி செய்யவே இல்லை. அதுவும் நல்லதுக்குத் தான்.

ஒரு நாள் நவனீதனை வெருட்டி (அவனின் அப்பா புண்ணியமூர்த்தி சேர் தான் பள்ளிக்கூடத்துக்கு ரைம்ரேபிள் போடுவார்) சர்மா சேரை மாத்தப் பார்த்தோம் நாம் மூவரும். அடுத்த நாள் புண்ணியமூர்த்தி சேர் எம்மை தனியே அழைத்து காதைத் திருகி அனுப்பினார்.... (பின்பு நாம் நவனீதனுக்கு அடி போட்டது வேறு கதை).

32 ஆண்டுகளின் பின்னான ஒரு நாளில் Facebook இல் உலா வந்துகொண்டிருந்த போது கண்ணில் பட்டது "Students of Sarma Sir" என்னும் பக்கம்..அதுவும் கனடாவிலிருந்து. ஒரு நப்பாசையில் புகுந்து பார்த்தால், அது எங்கள் சர்மா சேர். குடும்பத்தில் இருந்து பிரிந்த உறவொன்றை நீண்ட காலத்தின் பின் மீண்டும் கண்டு கொண்டது போலிருந்தது எனக்கு. தினம் தினம் பல மாணவர்கள் வந்து வாழ்த்திவிட்டு செல்கிறார்கள் அவரை. பொறாமையாய் இருக்கிறது அவரைப் பார்க்கும் போது. நான் ஆசிரியனாக ஆகாததையிட்டு மனம் வருந்துகிறேன்.

சேர் சுகமாயிருக்கிறீங்களா? என்னை தெரிகிறதா, நான் தான் அவன், நான் தான் இவன், இப்படி எத்தனை எத்தனை மரியாதைகள், கேள்விகள், என்ன அன்பு, என்ன வாஞ்சை.

தொடர்ச்சி... (பக்கம்- )







# மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரிக்கெட்

~~ மிடுஷன் ~~



இலங்கையின் ஏனைய மாவட்டங்களைப் போலத்தான் மட்டுநகரிலும் பல மைதானங்களில் இளைஞர்களும் சிறுவர்களும் கிரிக்கெட் துடிப்புடன் பரபரப்பாக விளையாடிக்கொண்டிருக்கிறார்கள்.

இங்குள்ள பலரிடமும், கால்பந்து, கூடைப்பந்து போன்ற விசயங்களில் ஆர்வம் குறைந்து, எல்லோரும் கிரிக்கெட்டில் இறங்கிவிட்டார்கள் என்ற குறைகூறலும் இருக்கிறது.

இலங்கை அணி சர்வதேச ஆட்டங்களில் மிளிரத் தொடங்கிய பின்னர்தான் இங்கு கிரிக்கெட்டின் மீது அதீத ஆர்வம். இவற்றுக்கு மட்டக்களப்பும் விதிவிலக்கல்ல. ஆனால், ஒரு விசயம் இங்கு கிரிக்கெட் ஆடப்படுகின்ற அளவுக்கு சர்வதேச அணிகளில் மட்டக்களப்பு இளைஞர்கள் ஜொலிக்கவில்லை என்ற கவலை பலர் மனதிலும் இருக்கிறது.

ஏனைய மேலைத்தேய விளையாட்டுக்களைப் போல அமெரிக்க துறவிகள்தான் இங்கு கிரிக்கெட்டையும் அறிமுகம் செய்தனர். ஆரம்பத்தில் கடின பந்து விளையாடப்பட்டாலும், பின்னர் அதன் மீதான ஆர்வம் குறைய, அது மென்பந்து கிரிக்கெட் ஆகிவிட்டது. இடையில் கூடைப்பந்து, கால்பந்து ஆகிய விளையாட்டுக்கள் சூடுபிடிக்க கிரிக்கெட் பின்னுக்கு தள்ளப்பட்டது.

எப்படியிருந்தாலும் ஏனைய மாவட்டங்களைப் போல, "இலங்கை கிரிக்கெட் அணி உலக அரங்கில் பிரபலம் பெற", மட்டக்களப்பிலும் கிரிக்கெட் மீது கவனம் திரும்பியது. ஆனால், அதே காலப்பகுதியில்தான் இங்கு போரும் உச்சத்தை எட்டத் தொடங்கியது.

எப்படியிருந்தாலும் 90களின் ஆரம்பத்தில் மட்டக்களப்பில் கடின பந்து ஆட்டங்கள் சூடு பிடிக்க 12 அணிகள் வரை விளையாடத் தொடங்கின. 1996இல் மட்டக்களப்பு மாவட்ட கிரிக்கெட் சங்கம் உருவானது. இதன் தலைவராக என். நவரட்ணம் இருந்தார். சில வருடங்களில் அது இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சங்கத்தில் இணைந்துவிடுகிறது.

பின்னர் அணிகளும் அதிகரிக்க இப்போது 23 அணிகள் மட்டு மாவட்டத்தில் விளையாடுகின்றன.

மட்டு மாவட்டத்தை பொறுத்தவரை சஞ்சீவ் என்ற இளைஞரை இலங்கை "ஏ" அணியில் விளையாடச் செய்தமை மற்றும் செல்வி "ஜடா"வை இலங்கை பெண்கள் அணியில் இடம்பெறச் செய்தமை அதன் இதுவரைகால சாதனை.

மட்டக்களப்பில் இருந்து புலம்பெயர்ந்து வாழும் சில ஊரவரின் உதவியுடன் இங்கு சவுக்கடி என்னும் இடத்தில் புற்தரை அரங்கம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளும் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்துபோன 30 வருடகால போர், மட்டக்களப்பில் கிரிக்கெட் வளர்ச்சிக்கு தடையாக இருந்த விடயங்களில் மிகவும் முக்கியமான ஒன்று. இருந்தாலும் அந்தக் காலப்பகுதியில் கூட தாம் முயன்று கிராமமட்டம் வரை கிரிக்கெட்டை தாம் கொண்டு சென்றுள்ளதாகக் கூறுகின்றார் மட்டக்களப்பு மாவட்டத்தின் தற்போதைய கிரிக்கெட் சங்கத் தலைவரான என்.பி. ரஞ்சன்.

இலங்கை அணியில் இடம்பெறும் அளவுக்கு மட்டக்களப்பு வீரர்கள் சிலரைத் தவிர ஏனையோர் தரம்பெறவில்லையா என்ற கேள்வி நான் முன்னதாக சொன்னதுபோல பலர் மனதில் தேங்கி நிற்கிறது.

உண்மையில் சிறுவயது பள்ளிக்கூட அணிகளில், குறிப்பாக 13 வயதுக்குட்பட்ட அணிகளில் பல திறமையான வீரர்களைக் காணக்கூடியதாக இருப்பதாகக் கூறும் மாவட்ட கிரிக்கெட் பயிற்றுனரான அன்வர்டீன், ஆனால் போகப் போக பெற்றோரின் அழுத்தம் காரணமாக மாவட்ட சிறுவர்கள் கிரிக்கெட்டில் இருந்து விலகிச் சென்றுவிடுகிறார்கள் என்று கூறுகிறார். கல்வி மீது கவனம் செலுத்த வேண்டும் என்று காரணம் காட்டி பிள்ளைகளை பெற்றோர் விளையாட்டில் இருந்து விலக்கி வைப்பதாக அவர் குறைகூறுகிறார்.

பள்ளிக்கூட ஆசிரியர்களும், பெற்றோரும் கொஞ்சம் ஆர்வம் செலுத்தினால் எதிர்காலத்தில் இலங்கை தேசிய அணியில் பல மட்டக்களப்பு இளைஞர்கள் அங்கம் பெறலாம் என்று அவர் கூறுகிறார்.

மட்டக்களப்பில் இருந்து இலங்கை பெண்கள் தேசிய அணிக்காக விளையாடியவர் என். ஜே. ஜடா. இலங்கை அணிக்காக தென்னாப்பிரிக்கா வரை சென்று ஆடியவர் இவர். இலங்கை அணிக்காக விளையாடியமை தனக்கு பெருமை என்கிறார் அவர். மாவட்ட பெண்கள் அணிக்கும், பள்ளிக்கூட அணி ஒன்றுக்கும் பயிற்றுனராக அவர் பணியாற்றுகிறார்.

மட்டக்களப்பு மாவட்ட இளைஞர்களுக்கு கிரிக்கெட்டில் நல்ல எதிர்காலம் இருப்பதாகவே அவரும் நம்பிக்கை கூறுகிறார்.

## டேய்! கண்டியை எப்படா ஆங்கிலேயர் கைப்பற்றினார்கள்?

தொடர்ச்சி...

ஆண்டுகள் கடந்த பின்பும் சேர், சேர் உருகி மீண்டும் குழந்தையாய் மாறி நிற்கும் அவரின் மாணவர்கள். சேர், குடுத்து வைத்த மனிதன் நீங்கள். இதை விட வேறென்ன வேணும் ஒரு மனிதனுக்கு.

சர்மாசேர் விசில் அடித்தால் உலகம் முழுவதிலிருந்தும் 'சர்மா சேர் படையணி' ஒரு நிமிடத்தில் தயாராக நிற்கிறதே.

அமெரிக் சனாதிபதிகளுக்குக்கூட ஒய்வுபெற்றபின் இப்படியான மரியாதை இருக்காது.

சேர்....யு ஆர் ரியலி கிரேட்!

இறுதியாக....... கட்டாயம் நான் இதைச் சொல்லியே ஆக வேண்டும்...

கடைசிவரிசை 3 குரங்குகளில்

அமீர் அலி கொழுப்பில் கடை வைத்திருப்பதாக அறிந்தேன்
-- (இப்பவும் படம் பார்ப்பதை நிறுத்தவி□ல்லையாம்) பாத்திமாவுக்கு எங்கிருந்தாலும் வாழ்க என்று 10ம் வகுப்பில் பாட்டு படித்திட்டான். அவன் ஆசிரியனாக இருப்பதாகவும் ஒரு கதையுண்டு. அவனா, ஆசிரியனா? என்று நீங்கள் நினைப்பது புரிகிறது. உலகில் அதிசயங்களும் நடப்பதுண்டல்லவா..

சோழச்சக்கரவர்த்தி, ஞானம் மாஸ்டர் என்ற பெயரில் கிழக்கிலங்கை இஸ்லாமிய சமூகத்தவரிடையே மிகவும் அதிகமாய் நேசிக்கப்படும் ஒரு மனிதனாயும், புலம் பெயர்ந்த ஈழத்தமிழ்ச் சமூகத்தில் கிழக்கு மாகாணத்திற்காக குரல் கொடுப்பவனாயும் வாழ்ந்து வருகிறான்.... புத்திஜீவி என்கிறார்கள் அவனை.

ஹி ..ஹி என்னைப் பற்றி என்னத்த சொல்ல...
வின்சன்ட ல ஒருத்தியை சுத்தி புலம் பெயர்ந்து.. கலியாணம் கட்டி. 2 குட்டி போட்டு மொட்டை விழுந்து, வண்டி வைத்து, சில பல வியாதிகளுடன் கணணித்துறை முகாமையாளனாக பழைய நினைவுகளை அசை போட்டபடி இடைக்கிடை இப்படி ஏதாவது எழுதியபடி காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறேன்.

சேர்! உங்கள் கேள்வியின் பதில் 1815.
என்ன... சரி தானே?
கொஞ்சம் லேட்டாக, அதிகம் அல்ல 32 வருடங்கள் கழித்து பதில் சொன்னதற்கு மன்னிக்கவும்.

சேர்! நீங்கள் சொல்வது போல் அடியாத மாடு படியாது.

அன்புடன்
உங்களின் அடியால் படிந்த 3மாடுகளில் ஒன்றான சஞ்சயன். செ
ஆயிலும் கடைசியாய் ஒரு கேள்வி: ஏன் நீங்கள் யாழ்ப்பாணம் சென்று கடமையாற்ற நினைக்கவில்லை?

பதில் எனக்குத் தெரியும் சேர்! எங்கள் அன்பான மண்ணுக்கு நீங்கள் பெருந்தன்மையாய் தந்த பரிசு அது. இதைத்தான் சிலர் புரியாமல் 'மருந்து போட்டுட்டாங்கள்', 'பாய் போட்டுட்டாங்கள்' என்கிறார்கள்.

வாழ்க மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியும், எங்கட சர்மா சேரும். எங்கட வகுப்பும்.



# பெரியதம்பிரான் வழிபாடு

~~ விஜய் ~~





இந்துக் கலைக்களஞ்சியம், "பெரியதம்பிரான் வழிபாடு தமிழ் நாட்டில் அருகியதாகவும் இலங்கையில் யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் மட்டக்களப்புப் பிரதேசத்திலும் பரந்த வழிபாடாகவும் காணப்படுகிறது." எனக் கூறுகிறது. இவ்வகையில் பெரியதம்பிரான் வழிபாட்டை தமிழ் நாடு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களை இணைத்து நிற்கும் ஒரு வழிபாட்டு முறையாகக் கொள்ளலாம்.

இந்து சமயத் திணைக்களம் 1984 இல் வெளியிட்ட "இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோவில்கள்" எனும் நூலில், வல்லன் - புங்குடுதீவு கிழக்கில் அமைந்துள்ள ஶ்ரீ நாகதம்பிரான் கோவில், பெரியதம்பிரான் கோவில் என அழைக்கப்படுகின்றது எனக்குறிப்பிட்டுள்ளது. அத்துடன், அக்கோவிலின் மூலமுர்த்திகளில் ஒருவராக பெரியதம்பிரானைக் குறிப்பிட்டுள்ளது.

இதேநூலில் மட்டக்களப்பிலுள்ள முனைக்காடு, முனைக்காடு மேற்கு, ஆறுமுகத்தான் குடியிருப்பு, வெயிலிவீதி – அரசடி, பெரியநீலாவணை, பாண்டிருப்பு, தம்பிலுவில் ஆகிய இடங்களிலுள்ள ஏழு பெரியதம்பிரான் கோவில்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இந்நூலில் குறிப்பிடப்படாத பிரசித்தி பெற்ற பல பெரியதம்பிரான் கோயில்கள் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் உள்ளன.

புராண இதிகாசங்களில் குறிப்பிடப்படாத பெரியதம்பிரான் தெய்வம் பற்றி மட்டக்களப்பு மக்களிடத்தில் மரபு வழிப்பட்ட பல கதைகள் இருந்து வருகின்றன. பெரியதம்பிரான் காவியங்களும், பெரியதம்பிரானைப் போற்றுதல் செய்யும் பாடல்களும் உண்டு. இவ்வழிபாட்டு முறையை விபரிக்கும் பத்ததிகளும் உண்டு.

பெரியதம்பிரான் ஆலயங்கள் கொட்டில்கள், பந்தல்கள் ஆக அமைக்கப்படுவதே வழமை. பரிபாலத் தேவர்களுக்கு வேள்வியின் போது சிறுபந்தல்கள் அமைக்கப்படுவதுண்டு. படிம முறையில் அமைந்த விக்கரகங்களும் இங்கில்லை. பல ஆலயங்களில் சூலம் - முகக்களை வைத்து வழிபடுவதே வழமை. விதிவிலக்காக கோட்டைமுனை ஆலயத்தில் பெரியதம்பிரானுக்கு உருவம் அமைக்கப்பட்டுள்ளது என்கிறார் கனகரெத்தினம். இவற்றில் இன்று பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

மட்டக்களப்பு பிரதேசத்திலுள்ள பெரியதம்பிரான் வழிபாடு பற்றி ஆய்வு செய்த இரா.வை. கனகரத்தினம் அவர்கள், பெரியதம்பிரான் சடங்கு அல்லது கிரியை முறைகளை வகுத்துக் கூறும் பெரியதம்பிரான் பத்ததி, கட்டாடி முதலிமார் பத்ததி என இருவகையான பத்தாதிகள் உண்டு எனக்குறிப்பிட்டுள்ளார். இரண்டு பத்ததிகள் கூறும் சடங்கில் சில வேறுபாடுகளும் உண்டு.

பெரியதம்பிரான் வேள்வியில் தோன்றியவர் என்பதனால் பெரியதம்பிரான் சடங்கு வேள்வி எனப்படும். வேள்வி ஆடி மாதத்தில் நடைபெறும். பெரியதம்பிரான் பத்ததி, "காளியர் கையினால் செய்யும் பூசையை ஒப்புக்கொள்வானே ஒழிய வேறு எவன் செய்யும் பூசையையும் ஒப்பக் கொள்ளமாட்டான்." என்கிறது. பெரியதம்பிரான் வேள்வியினை பூசாரியார் அல்லது கட்டாடியாரே செய்வர். பெரியதம்பிரான் வேள்வியில், மட்டக்களப்பு பாரம்பரிய கிராமத் தெய்வ வழிபாட்டு மரபிற்கேற்ப கதவுதிறத்தல், சுத்தாங்கம் செய்தல், தெய்வம் ஆடுதல், காவியம் பாடுதல் போன்றன இடம்பெறுவதே பொதுவழமை.

தாளங்குடா பெரியதம்பிரான் ஆலயத்தில் கவடா வீட்டிலிருந்து பண்டங்கள் எடுத்து வரல் எனும் சிறப்பானதொரு பாரம்பரிய முறை காணப்படுகிறது. யாழ்ப்பாணத்திலுள்ள மறவன்புலவு மத்தி நித்தார்புலம் (நீலாசோதி) பெரியதம்பிரான் கோவிலில் மந்திரங்கள் கூறாமல் மௌனபூசை நடைபெறுவது வழமை. பெரியவீடு என்று கூறப்படும் இடத்திலிருந்து மடைப்பண்டம் எடுக்கும் முறையும் மடை பரவும் முறையும் இங்கு இன்றும் காணப்படுகின்றது.

பெரியதம்பிரானைப் போற்றுதல் செய்து பாடும் பாடல்களில், பெரியதம்பிரானை வலவை நகர அரசன் எனவும், பாண்டியனை வென்று பாண்டியன் சிறைபிடித்துச் சென்ற ஆறாயிரம் பேருடன் மேலும் ஆறாயிரம் பேரைக் கொண்டு வந்து குடியேற்றம் செய்த தெய்வம் எனவும் கூறப்பட்டுள்ளமை வரலாற்று முக்கியத்துவம் உடைய தகவல்களாகும்.

இரா.வை. கனகரத்தினம் அவர்கள், "ஈழத்தில் பெரியதம்பிரான் ஆலயங்களிலே பெரியதம்பிரான் தெய்வத்தோடு நீலாசோதையன் தெய்வமும் இணைந்து வழிபாடு இயற்றப்படும் எனக்கூறியிருக்கிறார்."

இது யாழ்ப்பாண மற்றும் மட்டக்களப்பில் காணப்படும் தனித்துவானதொரு அம்சமாகும். "வடபகுதியில் பெரியதம்பிரான் ஆலயங்களில் நீலாசோதையன் சிறப்பான முறையில் போற்றப்பட்ட பொழுதும் நீலாசோதையன் தெய்வம் பற்றிய மரபுக் கதைகளை அங்குள்ளவர்கள் அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. மட்டக்களப்பு பிரதேச மக்கள், இத்தெய்வத்தின் தோற்றம் பற்றி கதையாகவும் காவியமாகவும் சொல்லக்கூடியவர்களாக இருக்கின்றனர்." எனக்குறிப்பிட்டிருக்கிறார் கனகரத்தினம். அத்துடன் கோட்டைமுனை ஆலயத்தில் பெரியதம்பிரானுக்கும் நீலாசோதையனுக்கும் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார். மட்டக்களப்பிலுள்ள புன்னச்சோலை பத்திரகாளி அம்மன் கோவிலில் நீலாசேதையனுக்கு சிறுகோவிலுண்டு.

மட்டக்களப்பில் நிலவும் நீலாசோதையன் வழிபாடும் நீலாசோதையன் காவியங்களும் தனித்துவமானதொரு பண்பாட்டம்சமாகும். மட்டக்களப்பு மக்கள் நீலாசோதையன் பற்றிய தகவல்களை நன்கறிவர்!

## ஆரையம்பதி : ஒரு அழகான திருநகர்

தொடர்ச்சி...

நூற்றாண்டில் வாழ்ந்திருக்கின்றார்கள்.

பிரித்தானியர் காலத்தில் அளவுக்கு அதிகமான வெள்ளிப்பணங்களுக்கும் சொத்துக்களுக்கும் சொந்தமான பெரியபுள்ளை என்பரின் சொத்துக்களை பிரித்தானியர் பறிமுதல் செய்தது முக்கிய செய்தியாகும். இது சட்டரீதியான அணுகுமுறையாதலால், லண்டன் பிரிவிக்கவுன்சிலுக்கு மேன்முறையீடு செய்து வழக்கினை செயற்படவைத்து ஈற்றில் வெற்றி பெற்றார் பெரியபிள்ளை. தன்னிடமிருந்து பறிமுதல் செய்த பணம் முழுவதையும் மீளப்பெற்றுக் கொண்டார். இந்த வழக்கே இலங்கையில் இருந்து முதன்முதலாக லண்டன் பிரிவிக்கவுண்சிக்கு கொண்டு செல்லப்பட்ட வழக்கு என்பதும் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

கந்தசுவாமி, கண்ணகையம்மன் திருநீலகண்ட விநாயகர், பரமநயினார், ஆதிவைரவர் , மாரியம்மன், பேச்சியம்மன்,வீரமாகாளி, வடபத்திர காளி, பத்திரகாளி, சிவனேஸ்வர், மதுரைவீரன், அரசடிப்பிள்ளையார், எள்ளுச்சேனை பிள்ளையார், சமாதடிப்பிள்ளையார், கிருஸ்ணன், நரசிம்மர் என எந்த வீதியில் சென்றாலும் ஓர் இந்துகோயில் அமைந்திருப்பதை காணலாம். அன்னை திசோம்பாள், மெதடிஸ்த தேவாலயம் என கிருஸ்தவ தேவாலயங்களும் அமைந்திருக்கின்றன..

மட்டக்களப்பின் மூத்த அறிஞர் குமாரசாமி ஐயரில் தொடங்கி மட்டக்களப்பின் கல்வி பாரம்பரியத்தின் சிற்பி பண்டிதர் பூபாலபிள்ளை, பண்டிதர் சந்திரசேகரம், மட்டக்களப்பின் முதல் தலபுராணத்தை தந்த அளகேச முதலியார், தமிழ்மணி விவேகானந்த முதலியார், ஆசிரியர் சிரோண்மணி செல்வநாயகம், மட்டக்களப்பு இலக்கியத்தை தமிழ்நாட்டுக்கு அறிமுகம் செய்த நவம், தமிழ்மணி அன்புமணி போன்றவர்களோடு நம்முடன் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கும் தலைக்கோள் மூனாக்கானா என ஓர் இலக்கிய பாரம்பரியத்தை தேசத்தில் விதைத்த இக்கிராமம், மட்டக்களப்பின் நாட்டுக்கூத்து, மட்டக்களப்புக்கு மட்டுமே உரித்தான மகிடி கலை போன்றவன்றின் முதன்மை இயங்குதளமாகவும் காணப்பட்டது. இன்று கிழக்கின் கலை பாரம்பரியத்தின் அடையாள குறியீடாக காணப்படும் "கூத்து முடி"யும் இக்கிராமத்தில் இன்னமும் பாதுகாக்கப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஓர் பிரதேசத்திற்கு தேவையான



அனைத்து வணிக -அரச நிருவாக கட்மைப்புக்களும் ஒரு கிராமத்தில் அமைந்திருக்கும் சிறப்பும், நூற்றாண்டு கடந்த 2 பாடசாலைகள் உட்பட 8 கல்வி வளர்க்கும் பாடசாலைகள் என ஓர் நகரமயப்பட்டு ஆரையம்பதி நிமிர்ந்து நிற்கின்றது.

முற்காலத்தில் மண்முனை இராட்சியமும், கடல் வாணிபமும், இடைக்காலத்தில் நிறைந்த கலைகள், நிறைந்த கல்வியாளர்கள், கோலாகலமான கந்தசுவாமி கோயில் திருவிழா என சிறப்பு அடையாளங்களைக் கொண்ட இக்கிராமம், இப்போது ஊரெங்கும் சிலையெழுப்பி சிலைகளின் நகரம், அதிகமான கோவில்கள் கொண்ட கோவிலூர் என்கின்ற அடையாளங்களை தனதாக்கி கொள்கின்றது.

தொன்மையானதொரு கிராமமாக விளங்கினாலும், பழந்தமிழ் அடையாளங்களை கொண்டிருந்தாலும் எல்லைகள் பறிக்கப்படுவது, அயலவர்களின் காழ்ப்பு எனப் பல்வேறு பட்ட அரசியல் சமூக காரணிகள் இக்கிராமத்தின் எதிர்கால இருப்பை கேள்விக்குள்ளாக்கின்றன என்பதே சமகால வரலாறு.

# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்..

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 03

~~ தமிழ்க்கவி ~~

நாங்க சின்னப்பிள்ளைகளா இருந்தபோது அப்பு தோட்டவேலை செய்யும்போது கோவணமே கட்டுவார் . அவர் மட்டுமல்ல, பக்கத்து காணியில் பொன்னுக்கோன் என்று ஒரு பென்னம் பெரிய தேகந்தியுடன் ஒருவர் இருந்தார் அவரும் கோவணந்தான். தொந்திக்குக் கீழே கோவணம் இருப்பதே தெரியாது. அடுத்த வீட்டில் தம்பிராசாவும் கோவணந்தான் இந்த கோவணத்துடன் மாடு சாய்த்துக் கொண்டு செல்லும் ஏராளமான மக்கள் இருந்தார்கள். என்ன சாரத்தை தலையில் முண்டாசாக கட்டிக்கொண்டு கோவணத்தை அரைக்குள் கட்டிக் கொண்டு காயாக நடந்து போவார்கள்.

இவ்வளவு பெருந்தொகை மக்கள் கோவணத்துடன் திரிய அந்தக் கோவணத்துக்கு இரண்டிடிக்கு இரண்டடி சதுரத்தில், ஓரத்தில் சிவப்பு கோடு போட்டு நெசவு செய்து நாலு கரையும் மடிப்பு தைச்சு, கடையில் விற்கும். இருபத்தைஞ்சியம். அதை முக்கோணப்பாட்டில முன்புறம் மறைப்பு வைத்து கட்டுவது தனிக்கலை.

சரி இந்தக் கச்சைத்துண்டுகள் மட்டக்களப்பிலிருந்து இங்கு வந்து கொண்டிருந்தது. வேலைமுடிஞ்சு குளிச்சிட்டு ஒரு நீலக்கோட்டுச்சாரம் கட்டுவார் அப்பு. அதுவும் மட்டக்களப்பு பழையகாட் சாரம்தான். கக்கூசுக்கு காட்டுக்குப் போவார்கள் ஆனால் காலில செருப்பில்லாமல் போக முடியாது. காரைப்புதர்கள். ஒரு ஊரே மலங்களிக்குமிடம் பழையது உலர்ந்தும் புதியதும் மணந்தும் இருக்கும். காலில் மிதியடிக்கட்டை. சப்புமரத்தில் பாதவடிவில் வெட்டி ஒரு தோல் வார் முன்புறம் இருக்கும். டாக்கு மக்கென்று சத்தம். தோல் நனைந்தால் காலைத் தூக்கும்போதும் வைக்கும் போதும் கிறிச்கிறிச்சென்று சத்தம்வரும், .

"கிறிச்சு மிதியடியாம் கிழ்கண்ணு பார்வையளாம்

" தெறிச்சு விழுகிறனே.....பாடல் மறந்து போச்சு அது ஒரு தெம்மாங்குப்பாடல். இந்த மிதியடி நினைவுக்கு வந்த உடன பாட்டும் பின்னால.

இதை விடுங்க மட்டக்களப்பால கிட்டினன் கிட்டினன் எண்டு, ஒருத்தர் வந்து எங்கட அப்பாத்தை வீட்டில தங்கி நிண்டார். "அவர் எங்களுக்கு சொந்தக்காறனில்ல அளவோட பழகு" எண்டு அம்மா என்னை எச்சரிச்சு வெச்சிருந்தா. உந்த எச்சரிக்கை எல்லாம் எனக்குத்தான் நான்தான் காடேறி, அடங்காப்பிடாரி எண்ட பல பெரிய பெயருகளோட சுத்தி திரிஞ்சன். அம்மா என்ன என்னோடயே நெடுக நிக்கிறா? அல்லது நானென்ன சொன்னதையே கேக்கிறன்? எதைச் செய்யாதை எண்டு அம்மா சொன்னாவோ அதைச் செய்யாதவரை எனக்கு விசர் பிடிச்சிருமே.

இந்த கிட்டினன் ஆர் எண்டு அப்பாத்தையைக் கேட்டன். அவா சுருக்கமா அவன் ஒரு வழிப்போக்கன் உங்கை ஐயாத்துரையின்ர லொறியில வேலை செய்யிறானாம். சாப்பாட்டுக்கு காசுதாறனெண்டு என்னட்ட சாப்பிடுறான்.

"அப்ப அவன் இஞ்சயே படுக்கிறான்."




பூட்டோட விழுந்தமாடு கட்டிலேயே செத்திருக்கும். கிட்டினன்தான் பெரிசா கவனிச்சு மாட்டை மேல எடுக்க உதவி செய்தான். அண்டைக்குப் பிறகு கிட்டினனை எங்கட மாலுக்க

> " மட்டக்களப்பான் முகமாத்துச் செய்து போட்டான்..."

"மட்டக்களப்புக்கு போய் ஒவ்வொருநாளும் படுக்க ஏலுமே. உதில திண்ணையில கிடக்கட்டன். பாவம் போக்கிடமில்லை"

"அப்ப போக்கிலி"

"ம்... உதை அவனுக்கு முன்னால சொல்லிப்போடாதை"

ஆனா கிட்டினன் நல்லவன் இடைக்கிடை மட்டக்களப்புக்கு போயிற்று வரக்க எங்களுக்கு தயிர்முட்டி, கித்துள் பனங்கட்டி, அவல், எண்டு நிறைய சாப்பிடக் கொண்டருவான். அவனுக்கு இன்னும் கலியாணம் நடக்கயில்லையாம். அம்மாவும் ரெண்டு தங்கச்சியும் இருக்கினம் எண்டார். உழைக்கிற காசை சேத்துக்கொண்டுபோய். அவைக்கு சாப்பிடக் குடுத்துப்போட்டு. தான் திரும்பவும் வந்து வேலை செய்யிறான். அவன் ஒரு சேட்டும் போட்டிருப்பான். அதில முழுக்க போட்டோக்களதான் அச்சாகி இருக்கும். அந்தக்காலத்து பேசும்படம் புத்தகம் பாத்தமாதிரி இருக்கும் இது எப்பிடி எண்டு கேட்டா இதென்ன பெரிசா, மட்டக்களப்பில இதெல்லாம் செய்ய ஆக்கள் இருக்கினம் என்பான். இப்ப ஏன் அந்தக்கலையளை அழிஞ்சுபோச்சு?

அப்பயேன் உங்களுக்க அங்க வேலை கிடைக்கேல்ல யெண்டா தாங்கள் இருக்கிற .ஊரில ஒருத்தரிட்டயும் லொறி இல்லை என்பான். காலையில ஐயாத்துரையற்ற லொறிக்கு முன்பக்கம் ஸ்வஸ்திக்கா சின்னத்தின்ர பாதிமாதிரி ஒரு இரும்புக்கம்பியக் கொண்டேதினிச்சு கையால சுத்தித்தான் ஸ்ராட் ஆக்குவான்.; இப்பத்தயில் லொறியள் மாதிரி ஏறியிருந்து ஸ்ராட் ஆக்கிறதில்லை.

இந்த நேரத்திலதான் சங்கரப்பிள்ளையற்ற கிணத்துக்க ஏத்தம் இறைச்சுக் கொண்டிருந்த மாடு விழுந்து போச்சு. அய்யோண்டு சத்தம் கேட்ட உடனை ஓடின முதல் ஆள் கிட்டினன்தான்.

கிணத்துக்க இறங்கி மாட்டை கட்டியிருந்த கயறெல்லாத்தையும் அவிட்டு அதை சுயமா நிக்கப்பண்ணினான்.

வந்துபடு தம்பி எண்டு அப்பு சொல்லிப்போட்டார். பக்கத்து வீட்டில பரஞ்சோதியக்கா இருந்தவா. அம்மா இல்லை அப்பாவும் வேற கலியாணம் செய்திட்டார். எங்கட வீட்டிலதான் அவா இருந்தா. காலப்போக்கில கிட்டினன் அவவோட கதைச்சுப் பேசிறத பெத்தாச்சி கண்டிட்டா. கூப்பிட்டு அவனை விசாரிச்சா... இப்ப கட்ட மாட்டனெண்டிட்டான்.

"அட்டாரே மட்டக்களப்பாரேயென்னு பரஞ்சோதியின்ர தேப்பன் துவங்கிட்டான். பாத்தா கிட்டினன் தனியாளா நிக்கிறான். எங்கட அப்பு அவனைக்கூப்பிட்டு தனிய வைச்சு விசாரிச்சார். அவன் சொன்னான் "தங்கச்சி குமரா இருக்கிறாள்.; அவளைக் கரை சேக்காம நான் கட்ட ஏலாது"

"இவ்வளவுதானா விசயம் சரி இப்ப நீ பரஞ்சோதிய கட்டித்தானாக வேணமெண்டா என்ன செய்வாய்.."

"ஒண்டுஞ் செய்ய ஏலாது. ஆனா பரஞ்சோதி இதுக்கு சம்மதிப்பாளோ? ஏண்டா நான் அவளோட பழகுக்கயே இதைச் சொல்லிட்டன்" என்றான். அந்தப் பேச்சு வார்த்தை அப்பிடியே நிண்டு போச்சு. ஒருநாள் கிட்டினன் சொல்லிக் கொள்ளாமலே ஊரைவிட்டும் போயிட்டான். அது ஒரு பெரிய சினிமா மாதிரி எங்கட ஊரில ஓடிச்சிது. ஆனா பரஞ்சொதியக்காவ ஆரும் கலியாணங் கட்டேல்ல. அவவின்ர தங்கச்சிக்கு கலியாணம் நடக்கயுக்க, அவா பாத்துக் கொண்டுதான் நிண்டா,

" மட்டக்களப்பான் முகமாத்துச் செய்து போட்டான். அவள் இப்ப ஆரோடயும் பேசுறாளில்லை. எப்பபாத்தாலும் வீட்டுக்க அடைஞ்சு கிடக்கிறாள். ஒரு மந்திரவாதியெட்ட கூட்டிக்கொண்டே பாப்பமெண்டா அதுக்கும் வாறாளில்லை எண்டு வசை பாடிச்சு சனம்.

ஆனா நாலஞ்சு வரியம் கழிச்சு மறுபடி அந்த வழிப்போக்கன் எங்கட அப்பாத்தை வீட்டுக்கு வந்தான். அப்பாத்தையும் மனங்கோணாம சாப்பாடு போட்ட .சாப்பிடயுக்க அவன் அப்பாத்தையிட்ட..,

" பரஞ்சோதிய நான் கூட்டிக் கொண்டு போகப்போறன். அவையளோட கதைச்சு சோத்தைக்குடுப்பிச்சு விடுங்கோ" எண்டானாம். பிறகென்ன தடல்புடலா ஏற்பாடு நடந்துது. புதுப்பானையில சோறுகாச்சி மாப்பிளைக்கு புதுப் பொம்பிளை சோறு போட்டா. அண்டைக்கே

அவை ரெண்டு பேரும் மட்டக்களப்புக்கு போயிட்டினம்.

"இப்ப அப்பாத்தை சொன்னா, "மட்டக்களப்பானை அண்டிவைச்சு பிள்ளைய பரிசை கெடுத்திட்டான் எண்டிச்சினம் அவன் திரும்பி வந்து முகத்தில அறைஞ்சமாதிரி பொம்பிளை கொண்டு போட்டான். முகமாத்து செய்யிறானாம் முகமாத்துல...தூ"

எப்பவும் ஊரைச்சொல்லி சனத்தை ஒதுக்கிவைக்கிற குணம் மனிசரை விட்டுப்போகாது எல்லாரும் தமிழ்தான் கதைச்சாலும், எல்லாரும் சோறுதிறதான் திண்டாலும் எல்லாரும் வேட்டிசாரன்தான் கட்டினாலும். அவன் தீவான், இவன் யாழ்ப்பாணி, அவன் மட்டக்களப்பான், உவன் மன்னாரான். இவன் கண்டிப்பக்கம் என்று ஒரு முத்திரையை குத்திவைக்கிறதுதான் வழக்கம். அதுக்காக அதை இளக்காரமான சொல்லென்று கொள்ள முடியாது. மட்டக்களப்பு மக்கள் மந்திரத்துக்கு கட்டுப்படுவது போலவே சத்தியத்துக்கும் கட்டுப்பட்டவர்கள் நேர்மை, வாக்குத் தவறாமை, என்பது கண்டிப்பாக அவர்கள் அதிகமானவர்கள் பின்பற்றுவதை நான் கண்டிருக்கிறேன்.

உயிரற்ற பொருட்களை, தாவரங்களை, ஆடுமாடுகளைக்கூட அவற்றுக்கும் உயிர்

> " மந்திரத்தால துவக்கை கட்டுவார்கள்"

உணர்வுகள் இருப்பதாக பாவனை செய்வதில் அக்கறையாக இருப்பார்கள்.

"தலையிலே பேன் பார்க்கும் போதும் பெத்தாச்சி சொல்லுவா ரெண்டு பக்கத்தையும் பார். இல்லாட்டி மற்றக்கன்னம் திட்டும்."

"பானையிலிருந்து சமைத்த உணவை வேறு பாத்திரத்துக்கு மாற்றும்போது பானையில் கொஞ்சம் விட்டு வைக்க வேணும் இல்லாட்டி பானை வெட்கிப்போகும்"

"பூமரத்திலிருந்து பூ ஆயும்போது மரத்துக்கும் கொஞ்சம் விடவேணும்.; இல்லாட்டி மரம் சோந்துபோம் இப்பிடி எக்கச்சக்கமான கதைகள் சொல்லுவா.

மரவள்ளிக்கிழங்கு சாப்பிட்டால் அன்று முழுதும் இஞ்சியை உணவில் சேர்ப்பதில்லை. இரண்டும் சேர்ந்தா ஆளைக் கொண்டுபோடும். உப்பிடித்தான் கிழங்கைத்திண்டிட்டு இஞ்சிச் சோடா குடிச்சுத்தான் சுந்தரலிங்கம் செத்தது என்று எங்களூரில கதை.

வேறும் சிலரின் மரணத்துக்கு இதுவே காரணமாக சொல்லுறதுண்டு. ஆனால் நான் மட்டக்களப்பில் மரவள்ளிக்கிழங்குக்கு இஞ்சிச்சம்பல

தொடர்ச்சி... (பக்கம்- )



# தொடர்பாடலில் மற்றும் மொழி வளர்ச்சியில் மொழி பெயர்ப்பின் முக்கியத்துவம்

~~ யோகநாதன் ஜகேன் ~~

மனிதர்களின் தொடர்பாடலுக்காக உருவாகிய மொழி பின்னர் ஓர் இனத்தின் அடையாளமாக மாறிவிட்டது. நாடுகள் கண்டங்கள் கடந்து ஒலி வடிவத்திலும் வரி வடிவத்திலும் அது மாறுபடுகின்றது.

இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பு 6200 மொழிகள் வழக்கில் இருந்தன. தற்போது 3000 வரையிலான மொழிகளே வழக்கத்தில் இருக்கின்றன. ஒவ்வொரு மொழியும் ஏதாவது ஒரு இனக்குழுமத்தின் தாய்மொழியாக இருக்கின்றது.

அனைத்து மொழிகளுக்கும் இடையே தொடர்பினை ஏற்படுத்தவும், தேவையை உணர்த்தவும், மொழிகளைப் பாதுகாக்கவும் வருடம் தோறும் பெப்ரவரி 21 ஐ உலக தாய்மொழி தினமாக யுனஸ்கோ நிறுவனம் பிரகடனப்படுத்தியுள்ளது.

1952 ஆம் ஆண்டு கிழக்கு பாகிஸ்தானில்(வங்கதேசம்) உருது மொழிக்கு பதிலாக வங்க மொழியை தாய்மொழியாக அங்கீகரிக்க வேண்டுமென இடம்பெற்ற போராட்டத்தில் டாக்கா பல்கலைக்கழகத்தின் நான்கு மாணவர்கள் சுட்டு கொல்லப்பட்டனர். அத்தினத்தையே உலக தாய்மொழி தினமாக கொண்டாடுகின்றனர்.

கடந்த காலங்களில் இலங்கையிலும் தாய்மொழி தினம் வெகு விமர்சையாகக் கொண்டாடப்படுகின்றது. ஈழத்தமிழர்கள் அதிக ஈடுபாடுகாட்டுகின்றனர். மொழி ஒரு இனத்தின் அடையாளம் அதனை புறக்கணிக்குமிடத்து கடந்த வரலாற்றில் பெரும்போர்கள் இடம்பெற்றிருக்கின்றன. இலங்கையில் நடந்து முடிந்த யுத்தத்தின் பிரதான காரணியும் இதுவாகும்.

தமிழ்மொழி வரும் 300 வருடங்களில் அழிந்துவிடும் என யுனஸ்கோ எதிர்வுகூறியுள்ளது. சங்கம் தொட்ட தமிழானது மேலாண்மைவாத சிந்தனைபோக்கு, விரைவான நகர மயமாக்கம், ஆங்கில மொழிக்கல்வி, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, ஊடகங்கள் போன்ற வேற்றுமொழி ஊடுருவர் காரணிகளால் சிதைந்து செல்கின்றது.

இலங்கையை பொறுத்தவரையில் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் கீழுள்ள அரசகரும மொழிகள் திணைகளத்திணூடான மும்மொழித்திட்ட அங்குரார்பணத்தில் மொழிச்சட்டங்கள் இறுக்கமடைந்துள்ளன.

மொழி உரிமைமீறலுக்கான வழக்குகளும் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்படுகின்றது. அரச செயலகம் ஒன்றிற்கு அனுப்பப்படும் கடிதம் ஒன்றிற்கான "பதில்" அனுப்புனரின் மொழியிலேயே இருக்கவேண்டும் என்பது சட்டமாகும்.

கிழக்கிலங்கையில் மும்மொழிப்பண்பாட்டு செறிவு தற்போது அதிகரித்து வருகின்றது. இங்கு மும்மொழியிலான சேவை வழங்கலுக்கும் சமூகப் புரிந்துணர்விற்கும் அரச நிறுவகங்களிலும் ஏனைய சமூக உட்கட்டமைப்பு அமைப்புகளிலும் மொழிபெயர்ப்பாளர்களின் தேவை அதிகரித்து வருகின்றது.

பொதுவாக தமிழர்கள் ஆங்கிலக் கண்கொண்டே உலகை பார்க்கின்றனர். ஆங்கில மொழியிலான கல்வி சிறப்பானதாக கொள்ளப்படுகின்றது. காரணம், மேல்நாட்டு அறிவாய்வு நூல்கள் ஆங்கிலத்தில் இருக்கின்றன. அவற்றை தமிழில் மொழி பெயர்ப்பதற்கான மொழி பெயர்ப்பாளர் பற்றாக்குறை பெரிதாக இருக்கின்றது.

மொழிபெயர்ப்பை பேச்சுவழியிலான மொழிபெயர்ப்பு, எழுத்து வழியிலான மொழிபெயர்ப்பு என பிரித்தறிய முடியும்.

பேசும்போது மொழிபெயர்ப்பு செய்வது பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள்,அரச மற்றும் தனியார் தொடர்பாடல் மையங்கள், பொதுநிகழ்வுகள் என சமூகத்தில் அனுதினமும் நடக்கின்றன.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணத்தில் உள்ள பெரும்பாலானவர்கள் கொழும்பு செல்லும்போது சிங்களம் பேசத்தெரிந்தவர்களை துணையாக அழைத்துச்செல்வது போன்ற சம்பவங்கள்



செய்யப்பட வேண்டும். வேற்று மொழியில் இருக்கும் நூல்களை தமிழுக்கு மொழி பெயர்த்தல் என்பது இலக்கியம், கணக்கியல், விஞ்ஞானம், தத்துவங்கள், கோட்பாடுகள் என பல்வேறு பக்கங்களில் விரிந்துள்ளது. ஆரம்பத்தில் ஆங்கிலம் தவிர்ந்த வேறு மொழிகளில் இருக்கும் நூல்கள் முதலில்

மொழியறிவு, மொழிபெயர்ப்பாளர்களின் சமூகநிலையை விளங்கவைக்கின்றது.

அரச செயலகங்களில் பொதுக்கூட்டங்களில் பேச்சுவழியிலான மொழி பெயர்ப்பிற்கு நிர்வாக சுற்றறிக்கையில் சட்டங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. மகாண சபையின்

> தக்கன பிழைக்கும் என்பது மொழிகளுக்கும் பொருந்தும்

பொதுக் கூட்டம் ஒன்றில் நிகழ்த்தப்படும் உரை பேச்சளவில் மொழிபெயர்ப்பு செய்வதற்கு முதல் ஒரு மணி நேரத்திற்கு 500 ரூபாவும் தொடரும் ஏனைய மணித்தியாலங்களுக்கு தலா 400 ரூபாவும் வழங்கப்படுகின்றன.

எழுத்துமூல மொழிபெயர்ப்பை சமூக சேவையியல், அறிவியல் சார்ந்து இருவகையாக பார்க்கமுடியும் அரசுடன் தொடர்புடைய சேவைகளுக்கான மொழிபெயர்ப்பாளர்களை நீதி அமைச்சு பரீட்சை மூலம் உள்வாங்கி தேர்ச்சி அடிப்படையில் மொழிபெயர்ப்பாளர் என்னும் அங்கீகாரத்தை வழங்குகின்றது.

அரச கருமங்களில் வெளிநாடுகளுடன் தொடர்புபடும் போது மிக சரியானதாகவும் தரமானதாகவும் மொழிபெயர்ப்பு

ஆங்கிலத்துக்கும் பின்னர் தமிழுக்கும் மொழிபெயர்க்கப்படும் அளவிற்கு மொழித் தேர்ச்சி உருவாகியிருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

சிறந்த மொழிபெயர்ப்பாளர்களை உருவாக்குவது மற்றும் சமூகத்தில் பன்மொழித் தேர்ச்சியை வளர்ப்பது சமூகத்தை மேலும் இணைத்தே செயற்படுத்தப்பட வேண்டும். பல மொழிகளில் அறிவு பெறுவதென்பது ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் மிக்குறைவானதாக இருக்கிறது. இந்திய மாநிலங்களில் பல இடங்களில் வாழ்பவர்கள் சாதாரணமாக ஐந்து, ஆறு மொழிகளில் தேர்ச்சி பெற்றிருப்பர்.

மட்டக்களப்பில் கடந்த பெப்ரவரி 21 இல் தாய்மொழித் தினத்தன்று உள்ளூர் இலக்கிய மொழிபெயர்ப்பாளர்களை கௌரவிக்கும் நிகழ்வொன்று சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. இவ்வாறான செயற்பாடுகள் மாணவர்களுக்கு மொழிபெயர்ப்பு, மொழி அறிவு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவல்லன. ஓர் இனத்தை அழிக்க வேண்டுமாயின் அந்த இனத்தின் தாய்மொழியை அழித்தால் போதுமானது. ஒவ்வொரு மனிதனும் தனது தாய்மொழியை போற்றி பாதுகாக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகின்றது.

## என் இனிய இயந்திரா!



முதலில் சினிமாவுக்கு வைக்கப்படவிருந்த பெயர்தான் இது. ஆனால் இந்த இனிய இயந்திரன் ஒரு "இயந்திர ஓநாய்".

பரீசார்த்தமாக சோதனை செய்யப்பட்ட இயந்திர(ரோபோ) ஓநாய்கள் இன்னும் ஒரு மாதத்தில் பெருமளவில் தயாரிக்கப்பட்டு ஜப்பானில் சந்தைக்கு வரவிருக்கின்றன. இவை செய்யப்போகும் பணி தோட்டக்காரன் வேலை.

65 சென்றிமீற்றர் நீளமும் 50 சென்றிமீற்றர் உயரமும் கொண்ட இந்த இயந்திர ஓநாய், மொசு மொசு என்ற தோலும் ரோமமும் கொண்டு உண்மையான ஒரு ஓநாயைப் போல தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

நெல் வயல்கள் மற்றும் முந்திரி தோட்டங்களில் மேய வரும் காட்டுப் பண்டிகளை விரட்டுவது இவரது பணி. ஜப்பானின் கிழக்கு சிபா மாகாணத்தில் கிஸாரசு நகருக்கு அருகே இது கடந்த ஜூலையில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

காட்டு மிருகங்கள் அருகே வந்ததால் இது தனது ஒளிரும் கண்களை உருட்டி, பயமுறுத்தி உறுமுமாம். அதனால் மிருகங்கள் பயந்து ஓடிவிடுமாம். சூரிய சக்தியில் இயங்கும் பட்டரிகளை கொண்டு இது உருவாக்கப்பட்டுள்ளது.



இந்த பெரிய இயந்திர ஓநாய் பயன்படுத்தப்பட்ட போது பயிர்கள் மிருகங்களால் அழிவது கணிசமாக குறைந்திருப்பதாக ஜப்பானிய விவசாய கூட்டுறவு கூறியுள்ளது. இதற்கு முன்னதாக இந்தப்பகுதி விவசாயிகளுக்கு காட்டு மிருகங்களால் பெரும் பயிர் அழிவு ஏற்படுவது வழக்கமாம்.

மின்சார வேலிகளை அமைப்பதை விட இவை செயற்திறன் மிக்கவை என்று விவசாயிகள் கூறுகிறார்கள். ஒரு கிலோ மீற்றர் சுற்றளவுக்கு இது பாதுகாக்குமாம்.

இந்த இனிய இயந்திராவின் விலை கொஞ்சம் அதிகந்தான். ஆனால் அதன் பலனும் அதிகம்.




# குடத்துள் விளக்காகவிருந்து மறைந்து போன ஒரு மகா கலைஞன் பற்றிய சில அவதானங்கள்



மட்டக்களப்பில் பழுகாமம் எனும் கிராமத்தில் பிறந்து வந்தாறுமூலை மத்திய கல்லூரியிலும் சிவானந்தா வித்தியாலயத்திலும் தனது இடை நிலைக்கல்வியை முடித்து பேராதனைப்பல்கலைக் கழகத்தில் 1960 களில் பட்டம் பெற்றவர் பேரின்பரஜா.

1964 ஆம் ஆண்டு ஒரு நாள். இடம் பேராதனைப் பல்கலைக் கழகக் கலையரங்கம். இராவணேசன் நாடகம் அரங்கேறுகிறது.

தயாரிப்பாளர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் உதவித் தயாரிப்பாளர் பேராசிரியர் கா.சிவத்தம்பி. மண்டபம் நிறைந்த சனம். இராவணணாக நான், என் மகன் இந்திரஜித்தாக பேரின்பராசா.

கடும் போரின் பின்னர் இந்திரஜித் களத்தில் இறக்கின்றான்.

மரணச் செய்தி கேட்ட இராவணனாகிய நான் பின் வரும் பாடலைப் பாடுகிறேன்.

இறந்தாயோ என் மகனே இறந்தாயோ என் மகனே

என் ஆவி சோருதடா மகனே.

பேரின்பராசா என்னை விட இரு வயது மூத்தவர். அவரை நான் அண்ணன் என்றே அழைப்பேன். பேரின்பராசா அண்ணரின் இறப்பைக் கேள்வியுற்ற எனக்கு உடனே ஞாபகத்திற்கு வந்தது இராவணேசத்தில் நான் பாடிய இறந்தாயோ என் மகனே என்ற பாடல் தான்.




பேராதனைப் பல்கலைக் கழகத்தில்:

பேரின்பராசா அண்ணருடன் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் 1961 தொடக்கம் 1965 வரை கல்விபயிலும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அந்தக் காலகட்டத்திலே தான் பேராசிரியர் சு. வித்தியானந்தன் கூத்து மறுமலர்ச்சிப் பணியில் ஈடுபட்டிருந்தார். தமிழர்கட்கான நாடகத்தை மீள் கண்டுபிடிப்புச் செய்ய முயன்ற அவர் மட்டக்களப்பு தென்மோடி, வடமோடி கூத்துக்களை அடிப்படையாக வைத்துத் தன் பயணத்தை ஆரம்பித்தார். அவரது பணியில் மட்டக்களப்பு மாணவர்களும் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, மலையக மாணவர்களும் விரிவுரையாளர்களும் பங்கு கொண்டனர். பேராசிரியர் வித்தியானந்தன் நான்கு கூத்துக்களைத் தயாரித்தார். அவையாவன:-

(1)கர்ணன் போர்(1962), (2)நொண்டி நாடகம்(1963),(3)இராவணேசன்(1964), (4)வாலிவதை
இதில் 3 நாடகங்களிலும் நானும் பேரின்பராசா அண்ணரும் நடித்திருக்கின்றோம். கர்ணன் போரில் நான் கர்ணனாக வர பேரின்பராசா அண்ணர் சல்லியனாக வந்தார். நொண்டி நாடகத்தில் அவர் பிரதான பாத்திரமான நொண்டியாக வந்தார். அவரிடம் ஏமாறும் செட்டியராக நடித்தேன். இராவணேசனில் நான் இராவணனாக நடித்தேன். அவர் இராவணனது மகனான இந்திரஜித்தாக வந்தார். அக்காலங்களை 50 வருடங்களுக்குப் பின் இன்று நினைவு கூர்வது மனதிற்கு மகிழ்ச்சி தருகிறது.

## அண்ணரின் திறன்

1962 இல் கர்ணன் போர் பழகுவதற்கான அழைப்பு அனுப்புகிறார் பேராசிரியர் சு. வித்தியானந்தன். 20க்கு மேற்பட்ட மாணவ மாணவியர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களுள் ஒருவராக பேரின்பராசா அண்ணர். வித்தியானந்தன் மாணவர்களைப் பாடச் சொல்கிறார். மாணவர்கள் ஒவ்வொருவராக பாடுகிறார்கள். பேரின்பராசா அண்ணரின் முறை வருகிறது. அவருடைய சிறிய தோற்றத்தையும் கரிய மேனியையும் பார்த்த சிலர் அதிகம் அக்கறை இல்லாமல் இருந்தனர். பேரின்பராசா அண்ணர் ஒரு பாடலைப் பாடுகிறார். கம்பீரமான, சன்னமில்லாத சுத்த சாரீரம் கணீரென்ற அவர் குரல் அனைவரையும் கவர்ந்து விடுகிறது.

உடற்பயிற்சி ஆரம்பமாகிறது. அவரது ஆட்ட அழகில் அனைவரும் சொக்கி நிற்கின்றனர். இந்த உருவத்திற்குள் இத்தனை லாவகமா என்று வியக்கின்றனர். பேரின்பராசா அண்ணரின் திறன் அனைவருக்கும் தெரியவருகின்றது.

## சல்லியனாக பேரின்பராசா

தககொணு தகதிமி தாம் தாம் தாம் தெய்ய

தககொணு தகதிமி தெய் என்ற தாளக்கட்டிற்கு ஆடி முடிந்ததும்

கர்ணா ரதமேறு – களத்தில் செல்ல

கர்ணா ரதமேறு என்று பாடுவார் பேரின்பராசா அண்ணர்.

அன்று இருவரும் ஆடிய அந்தக் குதிரைத் தாளத்தையும் ஆட்டத்தையும் கண்டு மயங்கியவர் அனேகர். கூத்தின் அழகும் லாவகமும் அந்த ஆட்டத்தில் வருவதாக கர்ணனையும் சல்லியையும் புகழ்ந்து பேராசிரியர் தில்லைநாதன் ஆங்கிலப் பத்திரிகையில் கட்டுரை எழுதியிருந்தார்.

நொண்டிச் சாத்தானாக பேரின்பராசா நொண்டி நாடகம் 1963 இல் தயாரிக்கப்பட்ட போது அவருக்கு நொண்டிப் பாத்திரம் தரப்பட்டது. ஒரு முடக்குத் தடியை வைத்துக் கொண்டு நொண்டியைப் போல நடக்கவும் , ஆடவும் அண்ணாவியார் பேரின்பராசா அண்ணருக்குப் பயற்சி அளித்தார். சரியாக நொண்டியாக அவற்றைக் கிரகித்துக் கொண்ட அவர் நொண்டிப் பாத்திரத்தை அழகாக மேடையிற் கொணர்ந்தார். தென்மோடிப் பாடல்கள் இனிமையும் சுவையும் நிறைந்வை இனிமையான அப்பாடல்கள் இனிமையான குரல் வளமுடைய பேரின்பராசா அண்ணர் மூலம் பிற பிரதேச மக்களையும் சென்றடைந்தது.

தன் நடிப்பினாலும், ஆட்டத்தினாலும், குரல் வளத்தினாலும் மட்டக்களப்பு தென்மோடிக் கூத்திற்கு ஒரு புது அழகு கொடுத்தவர் அண்ணன் பேரின்பராசா.

## இந்திரஜித்தாக பேரின்பராசா

இராவணேசனில் (1964) அவர் இந்திரஜித்தாக தோன்றினார்.
தந்தத் தகிர்தத் தகிர்தத் தாம்

தி;ந்தத் திகிர்தத் திகிர்தத் தெய் என்ற வரவுத் தாளக் கட்டோடு

வீராதிவீரசூரன் வீரதீரமகாராஜன்

ஏராதிலங்கும் வீரன் இந்திரஜித்தன் வருகிறான்.

என்ற படி அவர் தோன்றும் கட்டத்தில் அவையோரின் கரகோசத்தால் அவை அதிரும். துரிதமாக கால்களை வைத்து, உடலை அசைத்து அவர் ஆடும் ஆட்டம் அனைவரையும் கவரும்.

இராவணன்- இந்திரஜித் சந்திக்கும் கட்டம் நாடகத்தில் மிக முக்கியமான கட்டம். போரிலே தோல்வியடைந்து வந்த மகாவீரன் இந்திரஜித்தன் தந்தையிடம் போர் வேண்டாம் சமாதானமாகி விடுங்கள் என்று கூறுகிறான்.

என்னதான் நான் செய்வேனப்பா

எதிரி பக்கம் உன் தம்பி நின்று கொண்டு எனத் தொடங்கி

சீதையை விடில் அவர்


சீற்றம் தீர்வார் உன்மேல்

காதலால் இ∴துரைத்தேன் என்று முடிப்பார்.

அன்போடும் கோபத்தோடும் தந்தையுடன் கதைக்க ஆரம்பிக்கும் இந்திரஜித் குரலைத் தாழ்த்தி பாசத்தோடும் அன்போடும் புத்தி கூறுகிறான். இந்தக் கட்டங்களை பேராசிரியர் வித்தியானந்தன் வெகுவாக ரசித்து ரசித்து எங்களுடன் உரையாடுவார்.

பல்கலைக் கழகத்தில் தயாரிக்கப்பட்ட இந் நாடகங்களை பேராசிரியர் வித்தியானந்தன் யாழ்ப்பாணம். மன்னார், மட்டக்களப்பு, வவுனியா, கொழும்பு என்ற பல பிரதேசங்களுக்கும் எடுத்துச் செல்வார். பிரயாணங்களின் போது பேரின்பராசா அண்ணரின் கதைகளும், பகிடிகளும் உற்சாகம் தரும். எந்த துக்ககரமான சூழலையும் மகிழ்ச்சிகரமாக்கிவிடுவார்.

பேராதனைப் பல்கலைக்களகத்தில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பயில்வர். யாரென்று தெரியாமலே மூன்று



அல்லது நான்கு வருடங்களை முடித்துக் கொண்டு பத்தோடு பதினொன்றாக வெளியேறுவோரே அதிகம். பேரின்பராசா அண்ணரோ நான் அறிந்தவரை அந்த பத்தோடு பதினொன்றாக வாழ்ந்தவர் அல்லர். தம் செயலாலும், நடத்தையாலும், திறனாலும் பெரும் கூட்டத்தையே வசீகரித்து வைத்திருந்தார். விடுதி இரவு வைபவங்களில் ஒலிவாங்கியில் அவரது நகைச்சுவைகள் பெரும் சிரிப்பலைகளை ஏற்படுத்தும்.

பேராசிரியர்களான வித்தியானந்தன், கணபதிப்பிள்ளை, சிவத்தம்பி, கைலாசபதி, தில்லைநாதன் ஆகியோருக்கு மிக விருப்பமான மாணவன் பேரின்பராசா.

பல்கலைக் கழகத்தை விட்ட பின்னர்

பல்கலைக் கழகத்தை விட்ட பின்னர் அவர் தொடர்பும் விட்டுப் போய் விட்டது. யாழ்ப்பாணத்தில் மிக நீண்ட காலத்தைக கழித்த பின்னர் மீண்டும் 1992 இல் நான் மட்டக்களப்பிற்கு வந்த போது நான் இருக்கும் தெருவிலேயே அவரும் இருந்ததால் அவரது தொடர்பு மீண்டும் ஏற்பட்டது. இதனால் பழைய நினைவுகளை மீட்டுவதில் இருவரும் இன்பம் கண்டோம். 2000 இல் நான் இராவணேசனை மீண்டும் தயாரித்தேன். தயாரிப்புச் செலவுகளில் சிலவற்றை

தொடர்ச்சி... (பக்கம்- )



சிறுகதை

# வெறிகாரர்களும், வெறிகாறிகளும் ஒரு (தலை சிறந்த?) கதைசொல்லியும்

~~ சஞ்சயன் செல்வமாணிக்கத்தின் ~~

கற்பனை கலக்காத கதை

நானும் எத்தனையோ குடிகாரர்கள், வெறிகாரர்கள், வெறிகாறிகளைக் கண்டிருக்கிறேன். அவர்களுடன் பழகியிருக்கிறேன்.

1980ல் செங்கலடியில் முதலாவது அனுபவம் கிடைத்தது. அன்று அந்த நண்பன் குடித்தது பிளேன் டீ நிறத்தில் இருந்த தென்னஞ்சாராயம். ஆனால் எடுத்த வாந்தியோ ஈஸ்மன்கலர் சித்திரமாய் இருந்தது.

பின்பு 1986 இல் இந்தியாவில் இரண்டு, மூன்று புதுசாக் குடித்த புதுக் குடிகாரர்களுடன் தினமும் இரவில் மொட்டைமாடியில் பெரும்பாடுபட்டிருக்கிறேன்.

அவர்களில் ஒருவன் எனது மடியில் படுத்திருந்தே குடித்தான். சிரித்தான். காதலில் உருகினான், அழுதான். வாந்தியெடுத்தான். நான் தினமும் அவனையும் கழுவி, மொட்டைமாடியையும் கழுவிய நாட்கள் அவை.

பின்பு நோர்வே வந்த பின்னும் வெறிகார்களுக்கும் எனக்குமான உறவு மிகவும் நெருக்கமாக இருந்திருக்கிறது. போத்தலும் கிளாசும் போன்று.

எத்தனையோ இம்சையரசர்களை சந்தித்திருக்கிறேன். பழகியிருக்கிறேன். மணிக்கணக்காக அலட்டல் கதைகளை கேட்டுமிருக்கிறேன். வாந்திகளை சுத்தப்படுத்தி, தலைக்கு தேசிக்காய் தேய்த்து குளிப்பாட்டியுமிருக்கிறேன்.

தங்களை டி.எம் சௌதிரராஜன், பாலசுப்ரமணியம், ஜேசுதாஸ் என்று நினைத்த கழுதைகளின் பாட்டுக்கச்சேரிகளை எனது விதிய நொந்தபடியே கேட்டிருக்கிறேன்.

சோமபானம் தந்த வீரத்தால் போலீசுக்குச் சென்றவர்களை மீட்டு அழைத்து வந்திருக்கிறேன். அந்த வீரர்களின் அழகிய ராட்சசிகள் உண்மையான ராட்சசிகளாக மாறியதையும் கண்டிருக்கிறேன்.

கடும் பனிக்காலத்தில் சாரத்தைக் (கைலி) கழற்றி காது குளிர்கிறது என்பதனால் தலையில் சுற்றியபடியே தெருவில் அழகிய அங்கங்கள் ஆட ஆட நடந்த பெருமனிதர்களோடும் பழகியிருக்கிறேன்.
ஒரு மாலைப்பொழுதில் 99 பெண்களுக்கு முத்தமிட்டுவிட்டேன் என்று பொய் சொல்லி, அடுத்த 100 வது பெண்ணைத் தேடித்திரிந்தவரை சமாளித்து வீட்டுக்கு அழைத்துவந்திருக்கிறேன்.

ஒரே ஒரு விஸ்க்கிப்போத்தலால் ஈழத்தின் அரசியல் பிரச்சனைக்கு தீர்வு கண்ட பெரும் அரசியல்வாதிகளையும் சந்திக்கக்கிடைத்திருக்கிறது.

குடியும் குடித்தனமுமாய் இருந்து போய்ச் சேர்ந்த நண்பனை சுடுகாடுவரை அழைத்துப்போய் அவன் எரிந்துருகியதையும் கண்டுமிருக்கிறேன்.

ஆனால், நேற்று ஒருவர் சற்று பதத்தில் இருந்துபோது காட்டிய கூத்து கொஞ்ச நஞ்சமல்ல.

நேற்றைய மனிதர் என்னை
கடித்துக் குதறி,
சப்பி,
மென்று,
தின்று,
குற்றுயிராக்கிவிட்டார்.

என்ட ஒஸ்லோ முருகன் (நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இருக்கும் முருகன் கோயிலுக்கு உரியவர், புலம்பெயர்ந்த பிறகு சஞ்சயனின் குலதெய்வமானவர்) சத்தியமாகச் சொல்கிறேன், நேற்றைய மனிதர் போன்று எவரையும் நான் சந்தித்ததில்லை. இன்று காலை எழும்பியபோது காது வலித்தது, தலையணையில் சிவப்பாய் ஏதோ இருந்தது. இரத்தமாய் இருக்குமோ?

அல்ப்பமான ஒரு கிளாஸ் பழரசத்தைக் குடித்துவிட்டு இவ்வளவு அழிச்சாட்டியம் பண்ணுவதெல்லாம் அநியாயம்.



குடிகாரர்களின் சரித்திரத்துக்கே இழுக்கு. அதுவும் ஒரு தொலைபேசியினூடாக இரண்டரை மணிநேரமாக இந்த அழகான அப்பாவியை இம்சைப்படுத்துவதெல்லாம் ரொம்ப ரொம்ப அநியாயம்.

மறுபிறவியில் ஒரு சொட்டு சோமபானமும் கிடைக்காதிருப்பதாக' என்று அவரை நான் சபிக்கிறேன்.

நண்பேன்டா!

## வடபுலத்துப் பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

தொடர்ச்சி...

சாப்பிடுவதைக்கண்டு வெலவெலத்துப் போனேன். பிறகென்ன என்னைப் பிடித்த பெரும்பயம் நீங்கி, நானும் இஞ்சியுடன் கிழங்கை அச்சமின்றி சுவைக்கிறேன்.

எல்லோரும் நல்லவரில்ல மிக முக்கியமாக எல்லா இடங்களிலயும் எல்லாரிட்டயும் திறமைகள் உண்டு. அதை எல்லாரும் நன்மைக்கோ பயன்படுத்துகினமோ எண்டால் இல்லை. தான் அறிஞ்ச வித்தைய வச்சு சம்பாதிக்கத் தெரிய வேணும்; இல்லாட்டி அதில என்ன பிரயோசனம் ஆனா சம்பாதிக்காவிட்டாலும் நாலு மனிசருக்கு நல்லதைப் பண்ணலாம். இல்லை அதுகும் விருப்பமில்லையெண்டா விட்டிட்டு சும்மா இருக்கோணும்.
காடு கரம்பைவழிய திரியிறது. வேட்டையாடுறதும் அந்தக்கால வழமை. அநேகமா பயிர்பாதுகாப்புக்கோ அல்லது உயிர்ப் பாதுகாப்புக்கோ, ஒருவர் துவக்கு வைச்சிருக்கலாம். அதுக்கு கவுண்மேந்து லைசென்சு குடுக்கும். இந்த துவக்கை எடுத்துக் கொண்டு வேட்டைக்கு போவினம். அப்பதான் நான் ஒரு விசயம் கேள்விப்பட்டன். எங்கட வயல் காணிக்குப் பக்கத்தில் நல்லதம்பி எண்டொருத்தர் குடிவந்திருந்தார் இவருக்கு நண்டுஞ்சிண்டுமா நாலு பிள்ளையளும் மனிசியும் இருந்தவை. பக்கத்தில் அம்மன்கோயிலுக்கு அவை வருவினம். ஆனா நல்லதம்பி வரமாட்டான். அவன்ர மனிசிக்காறிதான் சொன்னாள். தாங்கள் மட்டக்களப்பால வந்ததெண்டு. ஏனெண்டா சீட்டுப்பிடிச்சு அறுந்து போச்சாம் சனம் ஆக்கினை பண்ண விட்டிட்டு ஓடிவந்திட்டினமாம் எண்டு.

அவன் என்னெண்டா எப்ப பாத்தாலும் வீட்டுக்க மடை பரவிறதும் மந்திரிக்கிறதும் உடுக்கடிக்கிறதும்தான். நாங்கள் குடிதண்ணி அள்ள நல்ல கிணத்துக்கு அந்த வீட்டு வாசலாலதான் போக வேணும். அதாலதான் இந்த விசயங்கள் தெரியும். அவனை நாங்கள் மந்திரவியாதி எண்டுதான் கோட்வைச்சு கதைக்கிற.

ஒருநாள் அப்பு சொன்னார் “பொன்னுத்துரையற்ற துவக்கை கட்டிப்போட்டானாம்“ எண்டு. அது எப்பிடி அவற்ற துவக்கு அவற்ற வீட்டிலதான கிடக்கு அதை எப்பிடி இவன் கட்டுறது.

“பிள்ளை துவக்கை கட்டுறதெண்டா அவன் முறுகத்துக்கு வெடிவைக்க ஏலாது. அவனுக்கு முறுகம் சந்திக்காது. இன்னொரு விதமா கட்டலாம் முறுகம் சந்திக்கும் வெடி வைக்கலாம். ஆனா முறுகம் எழும்பியோடி மறைவா சாகும்.



நாறின பிறகுதான் வேட்டைக்காறனுக்கு தெரியும். “ ஆப்பு விலாவாரியாச் சொன்னார்

“இதால கட்டுறவனுக்கு என்ன லாபம்“


“ ஒண்டுமில்ல மற்றவன்ர இழப்பில இவனுக்கு சந்தோசம்.அவ்வளவுதான்“

“நான் பேசாம கேட்டுக்கொண்டே யோசிச்சன்.“ அப்ப இதை அவுக்கவே முடியாதா?

“முடியும் வல்லவனுக்கு வல்லவன் உலகத்தில உண்டு அதை இன்னொரு மந்திரத்தால வெட்டலாம் அதுக்கும் ஆக்கள் இருக்கினம்.“ எண்டார்.; இதே கலையை வச்சு எண்டைக்கும் பிழைக்க ஏலாது. ஒருநாளைக்கு மறுத்திடும். அண்டைக்கு விட்டவனை ஆண்டவனாலயும் காப்பாத்த ஏலாது. அதோட போகாது சந்ததியே அந்தப்பாவச் சுமைய சுமக்கவேணும். அப்படி அழிஞ்ச குடும்பங்களை எனக்குத் தெரியும் எண்டார். யோசிக்க ஒண்டுமேயில்லை. இப்ப எனக்கும் என்ர அனுபவத்தில கண்டிட்டன் தெரியும்.

# மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

## சண்முகம் சிவலிங்கம்- அசோகமித்திரன் நினைவுகூரலுடன் பாண்டிருப்பு "விருந்து" கலை, இலக்கிய இதழ்


அசோகமித்திரன்

மட்டக்களப்பு பொது நூலகக் கேட்போர் கூடத்திலிருந்து புறப்படத்தயாரானபோது ஒரு அன்பர் என்னிடம் வந்து தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு, தாம் வெளியிடும் ''விருந்து" கலை, இலக்கிய இதழைத் தந்தார்.

எதிர்மன்னசிங்கத்தின் நூல் வெளியீடு அன்றையதினம் அவரது பவளவிழாவையும் முன்னிட்டு நடந்திருந்தமையால் அந்த நிகழ்ச்சியும் கலை, இலக்கிய விருந்தாகவே அமைந்திருந்தது.

அதன் சுவையை ரசித்துவிட்டு கிளம்புகையில் எனது கைக்கு வந்தது கிழக்கிலங்கையின் பாண்டிருப்பிலிருந்து இரு மாதங்களுக்கொருமுறை வெளியாகும் விருந்து.

வெல்லும் தமிழ் - எங்கள் வெல்லத்தமிழ் என்ற கவித்துவ மகுடத்துடன் இதனை வெளியிட்டுவரும் அதன் ஆசிரியர் அகரம். செ. துஜியந்தன் இதழையும் தன்னையும் அறிமுகப்படுத்திக்கொண்டார்.

எனக்குத்தரப்பட்டது அதன் மூன்றாவது இதழ். இவ்விதழ் வெளியாகும் ஊரில் பிறந்து வளர்ந்து, இலக்கியப்பணியும் ஆசிரியப்பணியும் புரிந்த கவிஞர் சண்முகம் சிவலிங்கம் அவர்களை நினைவுகூரும் வகையில் குறிப்பிட்ட "விருந்து" வெளியாகியிருக்கிறது.

1939 ஆம் ஆண்டில் பிறந்து 2012 ஆம் ஆண்டில் திடீரென மறைந்துவிட்ட சண்முகம் சிவலிங்கம் எனதும் இனிய நண்பர். அவரது மறைவும் பெரும் அதிர்ச்சியையே ஏற்படுத்தியது. முதல் நாள் இரவு உறங்கச்சென்றவரை மறுநாள் காலையில் அவரது மனைவி தட்டி எழுப்பியபோது துயில் எழாமல் மரணித்திருந்தவர். அந்தத்துயிலே அவரது நிரந்தரத்துயிலானது.

அதனால்தான் அவரது மரணம் எமக்கெல்லாம் பேராதிர்ச்சி. ஆனால், அவருக்கோ எவரும் பெரிதும் விரும்புகின்ற நிம்மதியான மரணம். 2005 இல் கிழக்கிலங்கை சென்றிருந்தபோது, அவரது இல்லத்தில் நடு இரவும் கடந்த நிலையில் பேசிக்கொண்டிருந்திருக்கின்றோம். அதன் பின்னர் தொலைபேசி வாயிலாகவும் நீடித்த தொடர்பாடல் எமக்கிடையே இருந்தது. அவரது மறைவு அறிந்ததும் அவரது வீட்டுக்குத் தொடர்புகொண்டு எனது ஆழ்ந்த கவலையை தெரிவித்ததுடன், மீண்டும் ஒரு தடவை அங்கு சென்றபோது அவரது மனைவி மற்றும் மருமகளிடம் நேரில் எனது அனுதாபங்களையும் தெரிவித்திருக்கின்றேன்.

1972 முதல் எனக்கு நண்பராக விளங்கியிருக்கும் சண்முகம் சிவலிங்கம் பற்றியும் விரைவில் வெளியாகவுள்ள எனது காலமும் கணங்களும் நூலில் விரிவாக பதிவுசெய்துள்ளேன்.

எனக்குக் கிடைத்த விருந்து இதழில் கவிஞர் சடாட்சரன், ஜெஸ்மி எம்.மூஸா ஆகியோரும் அவரைப்பற்றி எழுதியிருக்கின்றனர். அத்துடன் அவரது சிறுகதையொன்றும் (காற்றில் தேய்ந்த காலடிகள்) சில கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

"எதுவுமே செய்யாமல் இருப்பவன் மட்டுமே சோம்பேறியல்ல, தன்னால் முடிந்ததைச்செய்யாமல் இருப்பவனும் சோம்பேறியே!" என்ற சோக்கிரட்டீஸின் பொன்மொழியையும் இந்த இதழில் கண்டு குறித்துக்கொண்டேன்.

அத்துடன் மறைந்த அசோகமித்திரன் நினைவாக, அவர் 1994 ஆம் ஆண்டில் எழுதியிருக்கும் பதிவொன்றையும் விருந்து மறுபிரசுரம் செய்திருந்தது. அந்தப்பதிவின் தொடக்கமும் எழுத்தாளர்களாகிய நாம் கவனிக்கவேண்டிய விடயம்தான்.

அசோகமித்திரன் சொல்கிறார்: "எழுத்தாளனை தரம் பிரிப்பது அந்த நபருடைய எழுத்துத்தான். எழுத்தாளனுக்கு நன்றாக எழுதவேண்டும், இன்னும் நன்றாக எழுதவேண்டும் என்ற உந்துதல்தான் விடாது இருக்கவேண்டும். அரசியல், சமூக மற்றும் பதவிச்செல்வாக்கு கொண்டு பிறரை இடித்துத்தள்ளிக்கொண்டு, மிக முக்கியமான நபர்போல மேடையிலும் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் தோன்றிவிடலாம். அப்படித்தோன்றவும் செய்கின்றார்கள். ஆனால், அந்த நபரின் இலக்கியத்தகுதியைக் கணிக்க அவர் படைப்பு ஒன்றுதான் உதவும். இந்த நிலை நான் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே ஏற்றுக்கொண்டது. இதன் காரணமாக நான், ரசிகர் குழுக்கக்கள், சீடர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் ஸ்தாபனங்களின் ஆதரவைத் தேடிப்போனதில்லை."

சுமார் 63 வருடங்களுக்கு முன்னர் அசோகமித்திரன் ஏற்றுக்கொண்டிருக்கும் இந்த நிலைப்பாடானது சமகாலத்திலும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டியதொன்றாகவே அமைந்திருக்கிறது. அதில் பொதிந்துள்ள தீர்க்கதரிசனம் வியப்பளிக்கிறது. அர்த்தமுள்ளது.

கிழக்கிலங்கை மட்டக்களப்பிலிருந்து முன்னரும் பத்திரிகைகள், கலை, இலக்கிய இதழ்கள் வெளியாகியிருக்கின்றன. கிழக்குத்தபால் (புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை) உதயம் ( எஸ்.டி. சிவநாயகம்) லங்கா முரசு ( செ. இராசதுரை - பித்தன் கே. எம். ஷா) பாடும்மீன் (நீலாவணண், சண்முகம் சிவலிங்கம், சடாட்சரன்) கவிஞன் (நு.ஃமான்) மண்டூரிலிருந்து பாரதி உட்பட பல கலை இலக்கிய இதழ்கள் வெளியாகியிருக்கின்றன. இவை தவிர இந்தப்பிரதேசங்களிலிருந்து கையெழுத்து சஞ்சிகைகளும் மலர்ந்திருக்கின்றன.

வழக்கமாக சிற்றிதழ்களுக்கு நேரந்துவிடும் அபாயம் அவற்றையும் சந்தித்திருக்கின்றது. எனினும் காலத்துக்காலம் கலை, இலக்கிய சிற்றிதழ்கள் தோன்றுவதும் மறைவதும் பின்னர் இலக்கிய ஆவணங்களில் அவற்றின் பெயர்கள் பதிவாவதும் காலம்தோறும் தவிர்க்கமுடியாததே.



தற்பொழுது மட்டக்களப்பிலிருந்து மகுடம் (ஆசிரியர் மைக்கல் கொலின்) செங்கதிர் (ஆசிரியர் செங்கதிரோன் த. கோபாலகிருஷ்ணன்) பாண்டிருப்பிலிருந்து விருந்து (ஆசிரியர் அகரம். செ. துஜியந்தன்) அரங்கம் (ஆசிரியர்: பூபாலரட்ணம் சீவகன்) வெளிவருகின்றன.

இவற்றின் ஆயுள், இவற்றை வெளியிடுபவர்களின் ஆர்வத்தின் வீதத்திலும் வாசகர்களின் ஆதரவிலும்தான் பெரிதும் தங்கியிருக்கிறது.

மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில், கிழக்கு பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் அம்மன் கிளி முருகதாஸ் உட்பட மற்றும் சில இலக்கியவாதிகளையும் சந்தித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டு, நாம், ஈஸ்ட் லகூன் ஹொட்டலுக்குள் பிரவேசிக்கும்போது மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி கணேசராஜாவும் சங்கத்தின் உறுப்பினர்களும் ஏற்கனவே அங்கு வந்து சிற்றுண்டி விருந்துபசாரத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

சங்கத்தின் தலைவர் கணேசராஜா தலைமையில் கூட்டம் நடந்த மகாநாட்டு மண்டபம் அந்த ஹோட்டலில் அழகாக அமைந்திருக்கிறது.

சங்கத்தின் எதிர்கால நடவடிக்கை தொடர்பாக ஆராயவிருந்த அக்கூட்டத்தில் என்னையும் வரவேற்கவேண்டும் என்று நண்பர் கோபாலகிருஷ்ணன் தலைவரிடத்தில் ஏற்கனவே சொல்லியிருப்பார் போலும். தலைவர் என்னை வரவேற்று அங்கிருந்த உறுப்பினர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

கோபாலகிருஷ்ணன் எனது இலங்கை வருகை பற்றியும் கிழக்குமாகாணத்திற்கு வந்துள்ள நோக்கம் பற்றியும் எடுத்துரைத்து, எனது கலை, இலக்கிய மற்றும் ஊடகத்துறை பணிகளையும் கல்வி நிதிய வேலைத்திட்டங்களையும் விபரித்தார்.

அன்று நடக்கவிருந்தது அவர்களின் கூட்டம். அதில் சில நிமிடங்களை எனக்காக அவர்கள் ஒதுக்கியிருந்தார்கள். அமைப்புகளிலும் அவற்றின் நிகழ்ச்சிகளிலும் இளம்தலைமுறையினரை இணைத்துக்கொள்வதன் அவசியம்

~~முருகபூபதி- அவுஸ்திரேலியா~~

குறித்து அவையினரிடத்தில் பேசினேன்.

முக்கியமாக நூல் வெளியீடுகடு, விழாக்களில் இளம் தலைமுறையினருக்கும் குறிப்பாக, உயர்வகுப்புகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பயிலும் மாணவர்களுக்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினேன்.

தமிழ் சார்ந்த எத்தகைய பணிகளிலும் அவை அரசியலாகட்டும், கலை, இலக்கியமாகட்டும், பொதுச்சேவைகளாகட்டும், முடிந்தவரையில் இளம் தலைமுறையினரையும் இணைத்துக்கொண்டு இயங்கவேண்டும் என்பதற்கு அஞ்சல் ஓட்டத்தையே உதாரணமாக்கிப் பேசினேன். மூத்தவர்கள் விட்டுச்செல்லும் நற்பணிகளை இளையோரிடத்தில் சேர்ப்பிக்கவேண்டுமானால், அவர்களையும் தம்மோடு இணைத்து அழைத்துவரல் வேண்டும்" என்றேன்.

எனது உரையை வரவேற்றுப்பேசிய தலைவர் கணேசராஜா, தங்கள் சங்கத்திடமும் அத்தகைய நோக்கங்கள்தான் இருக்கின்றன எனச்சொன்னார். அந்தச்சந்திப்பிலிருந்து விடைபெற்று கன்னன் குடா நோக்கிச்செல்லத்தயாரானோம். அப்பொழுது நேரம் இரவு 8 மணியும் கடந்துவிட்டது.

(பயணங்கள் தொடரும்)









# கிழக்கிலங்கையின் கலை இலக்கியச் செல்நெறி (பகுதி 03)

## (அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் ஏற்பாட்டில் மெல்போர்ண் நகரில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்பில் செங்கதிரோன் த. கோபாலகிருஷ்ணன் ஆற்றிய உரையின் தொடர்ச்சி....)

03

### வில்லிசை



அடுத்த கவனத்துக்குரியது "வில்லிசை" அல்லது "வில்லுப்பாட்டு" ஆகும். மட்டக்களப்பைச் சேர்ந்த மாஸ்டர் சிவலிங்கம் அவர்கள் வில்லுப்பாட்டிற்கு மிகவும் பிரபல்யம் பெற்றிருந்தார். இலங்கை முழுவதிலும் வெவ்வேறு இடங்களில் நூற்றிற்கும் மேற்பட்ட வில்லுப்பாட்டு நிகழ்வுகளை அரங்காற்றுகை செய்தவர். லண்டனிலும் வில்லிசை நிகழ்த்தியவர். இலங்கையில் இவருடன் முழக்கம்முருகப்பா போன்ற இசைக்கலைஞர்களும் செ.குணரெத்தினம் போன்ற கவிஞர்களும் இணைந்திருந்தனர். ஆனால் இன்று மாஸ்டர் சிவலிங்கம் முதுமை காரணமாக முடங்கிவிட்டார். அவர் போன்ற வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் இன்று இல்லை.

அவ்வப்போது பாடசாலைகள் மட்ட நிகழ்வுகளிலும் பிரதேச செயலாளர் பிரிவுகள் ரீதியாக இயங்கும் கலாசாரப் பேரவைகள் வருடாந்தம் நடாத்தும் முத்தமிழ் விழாக்களிலும் கிழக்கு மாகாண சபையின் பண்பாட்டுத் திணைக்களம் வருடாந்தம் நடாத்தும் தமிழ் இலக்கிய விழாக்களிலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே தற்போது வில்லுப்பாட்டு நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. உண்மையில் வில்லுப்பாட்டு இன்று மட்டக்களப்பில் அருகியும் தரம் குன்றியும் விட்டன என்றே கூற வேண்டும்.

மட்டக்களப்பிலுள்ள சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம் அங்கு பயிலும் மாணவர்களுக்கு "வில்லிசை"யை முறையாகப் பயிற்றுவிக்கும் பட்சத்தில் கிழக்கிலங்கையில் அருகிவரும் இவ்வில்லிசை புத்துயிர் பெற அதாவது மாஸ்டர் சிவலிங்கம் காலத்தில் விளங்கியது போல் மாற்றமுற வாய்ப்புண்டு.

பரதம் மற்றும் கர்நாடக சங்கீதம் போன்ற செந்நெறிக் கலைகள் வட இலங்கையோடும் தலைநகர் கொழும்பினோடும் ஒப்பிடுகையில் கிழக்கிழங்கையில் மிகவும் பின்தங்கிய நிலையில்தான் இருந்து வந்தன. சங்கீதத்தைப் பொறுத்தவரை குறிப்பிட்ட ஓரிரு சங்கீத ஆசிரியர்களே இருந்தனர். பரத நாட்டியத்தைப் பொறுத்தவரை அதுவும் இல்லை என்ற நிலையே இருந்தது. ஆனால் இன்று நிலைமை சற்று மாற்றமடைந்துள்ளது.

பாடசாலைகளில் முன்பு நடன ஆசிரியைகளாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற சிலரும் தற்போது பணியாற்றும் பலரும் பரதநாட்டிய வகுப்புக்களைத் தனிப்பட்ட ரீதியில் நடாத்தி வருகின்றனர். சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் பயிற்சி முடித்து வருடாவருடம் வெளியேறும் இசை மற்றும் நடன ஆசிரியைகள் கிராமப்புறப் பாடசாலைகளுக்கும் நியமனம் பெறுவதால் கிராமப்புற மாணவ மாணவிகள் கூட இசை மற்றும் நடனம் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டு கலை இலக்கிய விழாக்களில் அவர்களது ஆற்றல்கள் வெளிப்படவும் சாத்தியம் உண்டாகிறது.

இந்தப் பின்புலத்தில் முன்பிருந்ததைவிட கிழக்கிலங்கையில் பரதக்கலையும் சங்கீதக் கலையும் வளர்ந்து வருகின்றன. இந்தியா சென்று இக்கலைகளைப் பயின்று பட்டம் பெற்றுவந்த விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரும் இவ்வளர்ச்சிக்குப் பங்களித்து வருகின்றனர்.

இசைக்குழுக்களைப் பொறுத்தவரை முன்னைய நாட்களைப் போல் திருகோணமலை மாவட்டத்தில் இயங்கிய "கோணேஸ் - பரமேஸ்" போன்ற மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கிய "ஜீவம் யோசப் சகோதர்கள்" போன்றவர்களின் தரத்திற்கு இசைக்குழுக்கள் இல்லாவிட்டாலும் கூட கல்முனை, கல்லாறு மற்றும் மட்டக்களப்பில் சிறு இசைக்குழுக்கள் இயங்கி வருகின்றன. விரல்விட்டு எண்ணக்கூடிய இசைவாத்தியக் கலைஞர்களே செயற்படுபவர்களாக உள்ளனர். வாழ்வாதாரப் பிரச்சினைகளும் பொருளாதார முடையும் இக்கலைஞர்கள் முழுநேரமாகச் செயற்படத் தடையாக உள்ளன.

எனவே கிழக்கிலங்கையில் மேலும் வளரவேண்டிய – வளர்த்தெடுக்கப்பட வேண்டிய துறையாக இசைக்கலை இருக்கிறது. எனினும் அண்மைக்காலமாகக் கிழக்கிலங்கையிலுள்ள சில சைவக்கோயில்கள் மீது பாடப்பெற்ற பக்திப்பாடல்கள் இசையமைக்கப்பெற்று இறுவட்டுக்களாக வெளியிடப்பெறும் வெளியீட்டு நிகழ்வுகள் கிழக்கிலங்கையின் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்றுள்ளன. இவ்வகையில் அம்பாறை மாவட்டம் உகந்தை முருகன் மீதும் மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் மீதும், அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் மீதும் கிரான்குளம் காளியம்மன் மீதும் பாடப்பெற்ற இசைப்பாடல்கள் அடங்கிய இறுவட்டுக்கள் பிரசித்தமானவை. இவ்வகையிலான இறுவட்டுக்களின் வெளியீட்டை கிழக்கிலங்கையின் இசைத்துறையில் ஏற்பட்டுள்ளதொரு பாய்ச்சலாகக் கருதலாம்.

சிலப்பதிகாரக் கதையை இசையும் கதையுமாக இயற்றி அதனை "நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்" எனும் பெயரில் பாடும்மீன் சிறிகந்தராசா அவர்களினால் வெளியிடப்பெற்ற இறுவட்டையும் இந்த வரிசையில் வைத்துப் பார்க்கலாம்.


த.கோபாலகிருஷ்ணன்

### ஓவியமும் சிற்பமும்

ஓவியம், சிற்பம் போன்ற நுண்கலைகள் மெல்ல மெல்லமாகவே வளர்த்து வருகின்றன. புல்லுமலை நல்லரெத்தினம் சிறந்த சிற்பக்கலைஞராக விளங்கினார். தற்போது விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே சிற்பக் கலையில் ஈடுபட்டுள்ளனர். சிறந்த ஓவியர்களாகத் தற்போது மட்டக்களப்பில் ஓவியர் கிக்கோ, கமலச்சந்திரன், நிர்மலவாசன் ஆகியோரது பெயரைக் குறிப்பிடலாம். இவர்களால் ஓவியக்கண்காட்சிகள் நடாத்தப் பெற்றுள்ளன.

பாரம்பரியக் கலைகளைப் பொறுத்தவரை கரகம், கும்மி, வசந்தன், காவடி, மகுடி, பறைமேளம் போன்ற ஆடல் மற்றும் கூத்து வகைகளும் காவடிச் சிந்து, அம்மானை, குளிர்த்தி போன்ற பாடல்வகைகளும் கோயில் திருவிழாக்களிலும் சடங்குகளிலும் ஆற்றுகை செய்யப் பெற்று இன்னும் முதுசொம்களாகப் பேணிப் பாதுகாக்கப்பெற்று வழக்கிலுள்ளன. பறைமேளம், உடுக்கு, சல்லாரி போன்ற பாரம்பரிய இசை வாத்தியக் கருவிகளும் இன்றும் பாவனையில் உள்ளன.

இனி நவீன கலைவடிவங்களில் அல்லது கலைசார் ஊடகங்களிலொன்றான திரைப்படக் கலை பற்றிப் பார்க்கலாம்.

(அடுத்த இதழில் தொடரும்)

## குடத்துள் விளக்காகவிருந்து மறைந்து போன ஒரு மகா கலைஞன் பற்றிய சில அவதானங்கள் தொடர்ச்சி...

ஏற்றுக் கொண்டமை கூத்துக் கலை மீது அவருக்கு இருந்த விருப்பத்திற்கு ஒரு உதாரணமாகும்.

கூத்துக்களின் புனருத்தாரணம் பற்றி விளக்கவுரையாற்றும் போது பேரின்பராசா அண்ணர் பற்றியும் அவரது ஆடல், பாடல், லாவகங்களையும் மாணவர்களுக்கு சுவைபட எடுத்தியம்புவேன். அவரைக் காண மாணவர்கள் மிக ஆர்வமாக இருந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தை என்னால் ஏற்படுத்த முடியாது போனமை துர் அதிஸ்டமே. இருந்தும் பின்னர் கேள்வியுற்றேன் எனது மாணவர்கள் என்று கூறி அவரைச் சந்தித்துப் பலர் கூத்துகள் பற்றி விளக்கம் பெற்றுக்கொண்டதாக. இதனையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைந்தேன்.

2010 இல் புதுப் பொலிவுடன் இராவணேசனைத் தயாரித்தோம். அந் நாளில் இராவணேசன்நாடகத்தில் நடித்த பழையவர்களை மாணவர்களுக்கு ஆரம்பத்தில் அறிமுகப் படுத்தினோம். ஆனால் அண்ணர் பேரின்பராசாவை அறிமுகப்படுத்த அவர் உயிருடன் இல்லை.

### உண்மை, எளிமை, நேர்மை

போலித்தனம் அவரிடம் கிஞ்சித்தும்; கிடையாது. உண்மை, எளிமை, நேர்மை என்பனவற்றிற்கு உதாரண புரிசராக விளங்கினார். அவர் ஓய்வு பெற்ற பின் அவரை அடிக்கடி சந்திப்பேன். ஓய்வை பூரணமாக அனுபவித்தார். பேரப்பிள்ளைகளின் எண்ணங்களை அறிந்து அதனை நிவர்த்தி செய்து அவர்களுடன் சேர்ந்து இனிதே அவரது வாழ்வைக் கழித்துவந்ததுடன் தேவாலயத்தில் தியான வழிபாட்டிலும் ஈடுபட்டு வந்தார்.


குளப்படியும் பகிடியும் மிக்க மாணவனாகத் திமிறித் திரிந்த பேரின்பராசா அண்ணர் அமைதியும் பொறுமையும் எளிமையும் மிக்க ஞானிபோல் தம் இறுதிக் காலத்தில் உலவினார்.

அவரின் வாழ்வு இன்னும் ஐந்து அல்லது பத்து வருடங்கள் நீடித்திருப்பின் நாம் நம் மத்தியில் ஒரு பற்றற்ற ஞானியைக் கண்டிருப்போம்.

இது எனது அவர் பற்றிய அவதானம். இந்த அனுபவங்களை அவரோடு நெருக்கமாகப் பழகிய எத்தனை பேர் பெற்றார்களோ தெரியாது. நான் பெற்றேன்



அதனால் மகிழ்ச்சியும் நிறைவும் அடைகின்றேன்.




SUN FANCY HOUSE
PRIDE OF BATTICALOA
மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்து, கிறிஸ்தவ ஆலயங்களுக்கான
பொருட்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே ஸ்தாபனம்.
அழகு சாதனப்பொருட்கள், எவசில்வர், சமயலறை உபகரணங்கள்,
விளையாட்டுப் பொருட்கள், பிளாஸ்ரிக், அலுமினியப்
பொருட்கள், அன்பளிப்பு பொருட்கள், சுவர் அலங்காரங்கள்,
கைகடிகாரம் முதல் grand father clock வரை என அணைத்தையும்
ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள கூடிய ஒரே ஸ்தாபனம்.
இல 163 இல 173
திருமலைவீதி மட்டக்களப்பு
தொ.பே: 0652223092
தொ.நகல்: 0652227800
இணையம்: www.sunfancylk.com


FAIR WORLD
Your Future World
No.16, 1st Cross Street, Batticaloa
TP: 077 61 76 243
ஆண்கள், பெண்கள் அனைவருக்குமான
அழகு சாதனப்பொருட்கள்
கைக்கடிகாரங்கள் , தையல் உபகரணங்கள்
மற்றும் அன்பளிப்புப் பொருட்கள்
திருமண மங்கையருக்கான
ஆபரணவகைகளை பெற்றுக்கொள்ள.


MICRO CHANNEL
OUR SERVICES
Computer, Lap Top Sales & Services
CCTV Security System Sales & services
Musical instuments Sales & Services
Professional Audio System Sales & Services
Network & Software Development
224A,NEW KALMUNI ROAD KALLADY , BATTICALOA
0652224646, .0773201786 WWW.MICKROCHANNEL.COM


அருணா றப்பர் ஸ்டாம் மேக்கர்
றப்பர் சீல்
இங்க் சீல் (Self Ink Stamp)
திகதி சீல் (Date Stamp)
PEN MODEL STAMP
79 முனை வீதி, மட்டக்களப்பு
0758297134
(தனியார் பஸ் நிலையம் முன்பாக)
100% RUBBER STAMPS


HOTEL East Lagoon
HOTEL EAST LAGOON
BATTICALOA
Munai Lane, Uppodai Lake Road, Sinna Uppodai, Batticaloa - 30000 , Sri Lanka
Tel.+94 65 2229222, +94 65 2229223, Fax; +94 65 2229221, E-mail: info@hoteleastlagoon.lk, Web: www.hoteleastlagoon.lk